பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 13 செவ்வாய்க்கிழமை (29.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 307

# ★ வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளின் ★ மீள் குடியேற்றத்தைத் தாமதித்தால் நாட்டை ஐக்கியப்படுத்த முடியாது

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி புஹ்னே சொல்கிறார்



கொழும்பு, செப்ரெம்பர் 29

**இலங்கையில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்துவது இந்த நாட்டின் நலனுக்கு மிக முக்கியமான விடயம் என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே தெரிவித்துள்ளார். இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவது தாமதமாவது நாட்டை ஐக்கியப்படுத்தும் முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.**

அல்-ஜஸீரா தொலைக்காட்சிக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் முப்பது வருட காலமாக யுத்தச் சூழ்நிலையின் கீழ் வாழ்ந்தவர்கள்; சுமார் இருபத்தியைந்து தடவைகளுக்கு மேல் இடம் பெயர்ந்தவர்கள்; நரக வாழ்வை அனுபவித்தவர்கள் என ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி அந்தப் பேட்டியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக இந்த மக்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதுடன், அவர்களை அவர்களது பகுதிகளுக்கு மீள அனுப்புவது அவசியம் என்றும் புஹ்னே வலியுறுத்தியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை விரைவில் மீளக் குடியமர்த்துவது அரசினதும், நாட்டினதும் நலனிற்கு முக்கியமான விடயம். இது நம்பிக்கைகளைப் பலப்படுத்தும் என்றும் நீல் புஹ்னே தெரிவித்துள்ளார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து 627 பேர் நேற்று கூட்டிவரப்பட்டு தீவகப் பிரதேச செயலர்களிடம்

யாழ்ப்பாணம் செப். 29

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களில் தீவுப்பகுதியைச் சேர்ந்த 627 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

நாவற்குழி களஞ்சியத்திற்கு அழைத்து வரப்பட்ட அவர்கள் தீவுப்பகுதிப் பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் தீவகத்தில் உள்ள இடைத் தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டு இன்று வீடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவர்.

வவுனியாவில் இருந்து தீவுப்பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு தொகுதியினர் நாளைஅழைத்து வரப்பட இருக்கின்றனர் என அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். (அ-1)

## இன்று தொடக்கம் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு காலையில் பஸ் சேவை

யாழ்ப்பாணம் செப். 29

வவுனியாவில் இருந்து இன்று தொடக்கம் யாழ்ப்பாணத்துக்கு காலை பஸ் சேவை நடைபெறவுள்ளது.

யாழ் அரச அதிபர் கே. கணேஷ் இத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலையில் புறப்படும் போக்குவரத்தச் சபை பஸ்கள் வவுனியாவில் தரித்து நின்று இப்போது மாலையே பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்புகின்றன.

இதனால் பொது மக்கள் பலவிதமான அசௌகரியங்களுக்கு ஆளாவதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி வந்தார்.

வவுனியாவில் இருந்து இன்று முதல் காலையில்பஸ் சேவை யாழ்ப்பாணம் நோக்கி நடைபெற ஏற்பாடாகி உள்ளது என்று அரச அதிபர் கூறியுள்ளார்.

முதலில் 10 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பஸ்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் என்றும் அரச அதிபர் 'உதயனு'க்குத் தெரிவித்தார். (அ-1)

## பயிற்சி பெற்ற விடுதலைப்புலி உறுப்பினர்கள் இன்னமும் அகதி முகாம்களில் உள்ளனர்

### அடித்துச் சொல்கிறார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க



நியூயோர்க், செப்.29

ஆயுதப் பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் இன்னமும் அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றனர் - என்று மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த-சமரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த விடுதலைப் புலி உறுப்பினர்களால் அகதி முகாம் மக்களுக்கு மட்டுமன்றி முழு நாட்டிற்குமே ஆபத்து நிலவுகிறது என அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழுவின் 60 ஆவது அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:- (20 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

*ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான தமிழ் மொழியும் இலக்கியமும்-I,II,III, விஞ்ஞானம் -II பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.*

### நாளை

*ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான ஆங்கிலம் -I,II விஞ்ஞானம் -I பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.*

## கனகராயன் குளத்தில் பொலிஸ் நிலையம்

வவுனியா, செப்.29

கனகராயன்குளம் மற்றும் மாங்குளத்தில் பொலிஸ் திணைக்களத்தின் புதிய கட்டடங்கள் இரண்டு திறந்து வைக்கப்பட்டன.

இதன் ஓர் அங்கமாக கனகராயன்குளத்தில் புதிய பொலிஸ் நிலையத்தை பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண கடந்த ஞாயிறன்று திறந்து வைத்தார்.

இதேவேளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் ஒன்றையும் அவர் வைபவரீதியாக மாங்குளத்தில் திறந்து வைத்தார். (அ-சி)

## இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளுக்கு இந்தியப் பிரஜாவுரிமை அவசியம்

### மீண்டும் வற்புறுத்துகிறார் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி



பெங்களூர், செப்.29

இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியப் பிரஜாவுரிமையை வழங்கவேண்டும் என வாழும் கலை நிறுவனத்தின் தலைவர் சுவாமி ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி கோரியுள்ளார்.

தமது நிறுவனம் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இந்த விடயத்தை முன்னிலைப்படுத்தி வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கைக்காக தாம் லட்சக்கணக்கான கையொப்பங்களை திரட்டுகிறார் என்று குறிப்பிட்டுள்ள குருஜி, தமிழக முதல்வர் கருணாநிதி இந்த விடயத்தை ஏற்கனவே இந்திய மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்

இந்தநிலையில் இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியப் பிரஜாவுரிமைகள் வழங்கப்படும் என தாம் நம்புகிறார் என ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி மேலும் தெரிவித்தார். (அ-சி)

## தமிழ்க் கைதிகள் 43 பேர் உண்ணாவிரதம்


### அ'புரம் சிறைச்சாலையில்

கொழும்பு, செப். 29

அநுராதபுரம் சிறையில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தம்மைப் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுதலை செய்யக் கோரி அல்லது தங்களின் வழக்குகளை இழுத்தடிக்காது துரித விசாரணைக்கு உட்படுத்தி முடிவு காணுமாறு வற்புறுத்தி நேற்று முதல் உண்ணாவிரதப் (20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்







யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டவர் களுக்கான பொலிஸ் சேவைக்கான நேர்முகப்பரீட்சை துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பதிவுகளை மேற்கொள்வதையும், இடுப்பு, உயரம் அளவுகளை அளப்பதையும் இளைஞர் பயிற்சியில் ஈடுபடுவதையும் மேல் வரிசையிலும் -

இளைஞர், யுவதிகள் நேர்முகப்பரீட்சைக்கு காத்திருப்பதை கீழ் வரிசையிலும் - காணலாம்.

(படங்கள்:தமிழரசன்)

# பொலிஸ் சேவை ஆள்சேர்ப்பு நேர்முகப்பரீட்சை; ஐந்து நிலையங்களில் நேற்று ஆரம்பமாகின

## பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகள் பிரசன்னம்

யாழ்ப்பாணம், செப். 29

பொலிஸ் சேவைக்கு ஆள் சேர்க்கும் நேர்முகப்பரீட்சை ஐந்து நிலையங்களில் நேற்று ஆரம்பமாகின.

யாழ். பொலிஸ் நிலையப் பிரதேசத்துக்கு உட்பட்டவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இந்த நேர்முகப்பரீட்சைக்கு சுமார் 1000 பேர் சமூகமளித்தனர். அவர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் உடற் சோதனைகள் இடம்பெற்றன.

நேர்முகப்பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு நாளை யாழ். செயலகத்தில் எழுத்துப் பரீட்சை நடத்தப்பட இருக்கின்றது.

இதேவேளை - ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களிலும் நேர்முகப்பரீட்சைகள் இடம்பெற்றன. அவற்றிலும் பெரும் எண்ணிக்கையானவர்கள் பங்கேற்றனர்.

நேர்முகப்பரீட்சை இன்றும் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. (1-6)

# மாநகர சபையின் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் நாளை பதவியேற்பு

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்டு சபைக்கு தெரிவான எட்டு உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழரசுக்கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

கட்சியின் நிர்வாகச் செயலாளரும் தேர்தல் முகவருமான எஸ். எக்ஸ். குலநாயகம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து புதிய உறுப்பினர்கள் பதவிகளை ஏற்கவிருக்கின்றனர்.

நல்லை ஆதீன முதல்வர், யாழ். ஆயர், மௌலவி ஆகியோரின் ஆசியுரையுடன் நிகழ்வு ஆரம்பமாக, கட்சியின் பிரமுகர்களும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரையாற்ற விருக்கின்றனர். (1)

# தென்மாகாண தேர்தல் வன்முறைகள் இதுவரை 48 முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 29

தென் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக இதுவரை 48 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமல் மெதிவக்க தெரிவித்தார்.

இதில் சிறிய முறைப்பாடுகள் 25 பதிவாகியுள்ளன என்றும் ஏனைய 23 முறைப்பாடுகளில் 16 சம்பவங்களுக்கு நீதிமன்றத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவற்றில் ஒரே கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற வன்முறைகளே அதிகளவில் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

# அகிம்சா வாரத்தை யொட்டிய இறுதி நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 29

செம்ரெம்பர் 28 ஆம் திகதியிலிருந்து ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரையான அகிம்சாவாரம் தற்பொழுது அனுஷ்டிக்கப்படுகிறது.

இதன் இறுதி நாள் நிகழ்வுகளாக எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்தலும், மு.ப. 10 மணிக்கு யாழ். மேயர் தலைமையில் பழைய பூங்கா வீதியோரத்தில் மரக்கன்றுகள் நடுதலும் இடம்பெறும். அன்று பி.ப. 3 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (7)

# சங்கானை சிவப்பிரகாசாவில் 'பிரகாசம்' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 29

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் 'பிரகாசம்' அமுத விழா மலர் வெளியீடு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்து கொள்வார். வரவேற்புரையை வித்தியாலய ஆசிரியர் திருமதி கீ.திவாகரனும் ஆசியுரையை சிவஸ்ரீ நித்தியானந்தக்குருக்களும் வெளியீட்டுரையை வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் நிகழ்த்துவர்.

ஆய்வுரையை பலாலி ஆசிரிய கலாசாலை [illegible]

# சண்டிலிப்பாய்க் கோட்ட விருத்தப்பா ஓதல் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் செப் 29

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சகலகலா வல்லி மாலை விருத்தப்பா ஓதல் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டன.

இரு பிரிவுகளில் ஆண், பெண்களுக்கிடையில் நடத்தப்பட்ட இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**பிரிவு ஒன்று ஆண்கள்**

ஸ்ரீநந்திவர்மன்-சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், பா.நிதர்சன் - ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை, சி.அஜந்தன் ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை

**பிரிவு ஒன்று பெண்கள்**

கி. கதீஜா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, ந. பகீரதி- பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, நா.தர்சிகா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**பிரிவு இரண்டு ஆண்கள்**

நா.கஜசாந்தன் - பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, மு.மதீபன் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சி .சதீஸ்குமார் - சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி,

**பிரிவு இரண்டு பெண்கள்**

சே. கோபிகா - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, ந. துசாந்தி- சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, அ.சபீனா சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி. (203-38)


## உடுவில் மகளிர் கல்லூரி முக்கிய அறிவித்தல்

உடுவில் மகளிர் கல்லூரியின் அனைத்து வகுப்புகளும் வழமை போன்று கிரமமாக நடைபெறுமென்பதை அறிவிக்கின்றோம்.

கல்லூரி நிர்வாகம்
உடுவில் மகளிர் கல்லூரி.

## WALK IN INTERVIEW

Date: 30-09-2009 Time:10.30am

1. Post : Lecturer for English (Full time)
   Age : 35-45
   Salary : Negotiable

2. Post : Receptionist (Full time)
   Salary : Negotiable

Venue:
No.15, Sirambiyadi Lane off Stanly Rd,
Jaffna. Contact Nos. 0212224550, 0773501[illegible]


## ஸ்கந்தாவின் இதய அஞ்சலிகள்

எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளருமான ப. விக்னேஸ்வரனின் கனிஷ்ட புதல்வன்

**செல்வன் சுதர்ஸன்** அவர்களின்

பிரிவு குறித்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
சுன்னாகம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### விக்னேஸ்வரன் சுதர்ஸன்

(உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி)

நல்லூர், நாவலர் வீதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சுதர்ஸன் நேற்று (28.09.2009) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் விக்னேஸ்வரன் (வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர்) - தவமணி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் சயந்தன் (லண்டன் பல்கலைக்கழகம்), சியாமளா (பேராதனைப் பல்கலைக்கழகம்), அரன் (பிரிட்டிஷ் நில அளவையாளர் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் வீதி,
நல்லூர்.
T.P.: 222 5262

தகவல்:
ப.விக்னேஸ்வரன்
(தந்தை - வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழ் மக்களோடு பேசுவது என்பது அவர்களின் மனங்களோடு பேசுவது

தென்னிலங்கை அரசியல் தலைமைகள் சிந்திக்க வேண்டிய மிக யதார்த்தமான விடயம் ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர எம்.பி. சுட்டிக்காட்டியிருக்கின்றார். ஆனால் அது தெற்கின் காதில் ஏறுமா அல்லது எதிரணியினின் வழமையான பேச்சுப் போலக் கருதிக் காற்றில் பறக்க விடப்படுமா என்பது தெரியவில்லை.

*''வவுனியா அகதி முகாம்களில் உள்ள அகதிகளை மிக மோசமாக நடத்தி, அவர்களுக்குள் நூற்றுக்கணக்கான பிரபாகரன்களை ஜனாதிபதி உருவாக்கிக் கொண்டிருக்கின்றார். இந்தப் பிரபாகரன்கள் மீண்டும் பிரிவினைவாதத்தை நாடிச் செல்வதோடு, சிங்களவர்கள் மீதும் பகைமை கொள்வர்.''* - என்று எச்சரித்திருக்கின்றார் மங்கள சமரவீர.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இன்று ஜெய பேரிகையுடன் மார்தட்டிக் கொண்டாடுவது விடுதலைப் புலிகள் மீதான தனது இராணுவ வெற்றியைத்தான். அதாவது, தமிழர் தரப்பில் அவர்களது உரிமைகளுக்காக - சுதந்திரத்துக்காக - கௌரவ வாழ்வுக்காக - போராடிய விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தமது இராணுவ ரீதியான வெற்றியைத்தான் இலங்கைப் படைகளும், மஹிந்தரின் அரசும், தென்னிலங்கையும் இன்று கொண்டாடுகின்றன.

தமிழர்களின் மனதை வென்ற பெருமை அல்ல இது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் அடக்கப்பட்டதால் - அல்லது முடக்கப்பட்டதால் - அது, தமிழர்களின் மனங்களை வென்றதாகி விடாது.

புலிகள் அடக்கப்பட்டதால் தமிழர்களின் மனவெழுச்சியை, மனக்கிளர்ச்சியை வெளிப்படுத்தும் காரணிகளும், கருவிகளும் அடக்கப்பட்டனவே தவிர, தமிழர்களின் உணர்வுகள் மரத்துவிடவில்லை. அடக்கு முறைகளால் கனன்று கொண்டிருக்கும் அவர்களின் மனவெழுச்சியை வெளிப்படுத்துவதற்கான வாய்க்கால்கள் அடைபட்டிருப்பதால் - அடக்கப்பட்டிருப்பதால் - அவை மனதின் உள்ளேயே எரிபிழம்பாகக் கனன்றுகொண்டிருக்கும் என்பதே உண்மை.

தமிழர்களின் ஆன்மாவையே பற்றிப் பீடித்து நிற்கும் நியாயமான உரிமைகளுக்கான வேணவாவை நிறைவு செய்யாமல், தமிழர்களின் மனங்களை வெற்றிகொள்வது என்பது சாத்தியமாகாது. அதைத் தென்னிலங்கைத் தலைமை உணர்வதாகத் தெரியவில்லை.

இப்பத்தியில் நாம் திரும்பத் திரும்ப ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விழைகிறோம். அது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழில் பேசி ஆரவாரப்படுத்துவதை விட, தமிழரோடு பேசி தீர்வுகாண முயல்வதே முக்கியமானது என்பதாகும்.

தமிழரோடு பேசுவது என்பது தமிழர் தரப்பின் பிரதிநிதிகளுடன் பேசுவது மட்டுமல்ல, தமிழினத்தின் ஆன்மாவோடு - உணர்வோடு - பேசுவதுமாகும். அது வாய்ப்பேச்சில் அமைவதல்ல; வார்த்தைகள் மூலம் ஜாலம் காட்டவேண்டியதுமல்ல; செயற்பாடுகள் மூலம் - செய்கைகள் வழியாக - உணர்த்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டியது அது.

தமிழினத்தின் உணர்வுகளை சிதைத்தழித்தபடி, செயல்கள் மூலம் தமிழ் மக்களின் மனங்களை நோகடித்தபடி, வாய் வார்த்தைகளால் தமிழில் பேசுவதில் அர்த்தமில்லை.

இதையே வேறு சொற்களில் சொல்ல விழைந்திருக்கின்றார் மங்கள சமரவீர எம்.பி.

விடுதலைப் புலிகளின் தலைமை தோற்கடிக்கப்பட்டதான உத்தியோகபூர்வமான பிரகடனம் - ஆகாங்கித அறிவிப்பை கடந்த மே மாதத்தில் இலங்கை அரசுத் தலைமை ஆரவாரத்தோடு வெளியிட்டபோது, இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில், நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய ஒரு நிரந்தரத் தீர்வைப் பெறுவதற்கான அருமையான வாய்ப்பும் - தங்கத்தட்டில் வைத்து வழங்கப்பட்டது போல - இலங்கை அரசுக்குக் கிடைத்தது என்பதே நிஜம்.

வெற்றி பெற்றவர், வெற்றி கொள்ளப்பட்டவர் மீது காட்டும் தாராண்மை என்ற உயர்ந்த பண்பியல்பு மூலம் - ஏற்கனவே நொந்துபோயிருக்கும் இலங்கைத் தமிழர்களின் மனதை வெற்றி கொண்டு - நிரந்தர சமாதானத்தையும், நிலையான அமைதியையும் இலங்கைத் தீவில் ஏற்படுத்துவதற்கான அருமையான சந்தர்ப்பம் - வாய்ப்பு - கொழும்புக்கு அப்போது கிட்டியது.

ஆனால் வெற்றியின் பெயரால் கிளர்ந்த அதிகாரச் செருக்கோடு செயற்பட்டு, தமிழர்களின் மனதை மேலும் நோகடித்து, அவர்களை நிரந்தர எதிரிகளாக நிலைநிறுத்தும் கைங்கரியத்தை நிறைவேற்றி, அரிதில் கிடைத்த அந்த வாய்ப்பைக் கோட்டை விட்டு நிற்கின்றது கொழும்பு.

மங்கள சமரவீர எம்.பி. குறிப்பிடுகின்றமை போல, விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வென்ற மஹிந்தவின் அரசு, அதன் தொடர்ச்சியாகத் தான் முன்னெடுத்த அடக்கு முறை நடவடிக்கைகள், செயற்பாடுகள் மூலம் இலங்கைத் தமிழர்களின் வெறுப்பையும் விரோதத்தையும்தான் இது வரை சம்பாதித்திருக்கின்றது.

'புலிகள் வேறு; தமிழ் மக்கள் வேறு' என்று வெளிவேஷத்துக்கு அரசு கூறினாலும், வன்னியில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனையும் அரசு புலிகளாகவே பார்க்கின்றது; சந்தேகம் கொள்கின்றது. அதனால்தான் புலிகளின் பிரதேசத்தில் வாழ்ந்த சுமார் மூன்று லட்சம் தமிழ் மக்களையும் கூண்டோடு முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் நலன்புரி மையங்கள் என்ற பெயரில் இயங்கும் முகாம்களில் தடுத்து வைத்து, அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறி இம்சைப்படுத்துகின்றது.

இலங்கையின் நியதிச் சட்டங்கள், ஒழுங்கு விதிகள், அரசமைப்பு ஏற்பாடுகள் எவற்றின் கீழும் இப்படி லட்சக்கணக்கான மக்களை ஒரு சிறிய இடத்துக்குள் முடக்கி வைத்து, சிறையிடுவதற்கு இடமில்லை.

அப்படித் தமிழ் மக்களைத் தடுத்து வைத்துக்கொண்டு அவர்களின் மனங்களை வெற்றிகொள்ள முடியாது. வேண்டுமானால் அடக்கி வைத்திருக்க முடியும். அப்படி அடக்கி வைத்திருப்பதுதான் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று கொழும்பு கருதுமானால், அதன் தற்போதைய பாதை சரியானதுதான்!

# கல்வி நிர்வாக சேவையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

கொழும்பு, செப்.29

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூன்றாம் வகுப்பில் நிலவும் 284 வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே. முகம்மட் தம்பி தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவையின் முதலாம் வகுப்பிலுள்ள அதிபர்களே இலங்கை கல்வி நிர்வாக சேவையில் மூன்றாம் வகுப்புக்கு பதவி உயர்வு பெறவுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம், கல்வி அமைச்சில் நடத்தப்படவுள்ளதோடு ஒக்ரோபர் மாத இறுதியில் நியமனக் கடிதங்களும் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதிபர் சேவையின் முதலாம் வகுப்பிலுள்ள அதிபர்கள் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் கிடைக்கப்பெற்ற விவரங்களின் அடிப்படையில் கல்வியமைச்சினால் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சின் மேலதிக செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (50)

# உளவள ஆற்றுப்படுத்தல் செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்; செப். 29

தீவக வலயப் பாடசாலைகளில் தற்போது வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த மாணவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ் வகையில் அல்லைப்பிட்டி பிரதேச மாணவர்களுக்கான நிகழ்வுகள் அல்லைப்பிட்டி பாரசக்தி வித்தியாலயத்தில் நடைபெற்றன. இந் நிகழ்வில் 78 மாணவர்கள் பங்குபற்றினர்.

தொடர்ந்து எதிர்வரும் 31, முதலாம் திகதிகளில் புங்குடுதீவு பிரதேசத்தில் பாடசாலைகளில் இணைந்துள்ள மாணவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் செயலமர்வுகள் இடம்பெறும் என தீவக வலய உளவள இணைப்பாளர் தெரிவித்தார். (1-267)

# வவுனியா செல்வதற்கான பஸ் பதிவுகள் பருத்தித்துறை டிப்போவில் நிறுத்தம்

## பயணிகளுக்கு பெரும் அசௌகரியம்

வடமராட்சி, செப். 29

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு பஸ் வண்டிகளில் பயணம் செய்வோர்களுக்கான ஆசனப்பதிவு செய்தல் கடந்த சில வாரங்களுக்கு மேலாக பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவில் மேற்கொள்ளப் படுவதில்லை.

இதனால் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பயணிகள் பெருஞ் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வவுனியாவுக்கான இ.போ.ச. பஸ் சேவை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக் கப்பட்ட நாளில் இருந்து பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவி லிருந்து பயண்களுக் கான ஆசனப் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டு வந்தன. ஆசனப் பதிவு மேற் கொண்ட பயணிகள் தினமும் இரண்டு பஸ் வண்டிகளில் அதிகாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கு புறப்பட்டு அங்கிருந்து சௌகரியமாக பயணத்தை மேற்கொண்டு வந்தனர்.

கடந்த சில வாரங்களாக ஆசனப் பதிவு கள் இடைநிறுத்ததப்பட்டுள் ளன. வவுனி யாவுக்கு பயணத்தை மேற்கொள்ளும் வடமாரட்சிப் பயனிகள் தற்போது அதிகாலை 5 மணிக்கு பருத்தித்துறை டிப்போவிலிருந்து நெல்லியடி வழியாக வும், வல்வெட்டித்துறை வழியாகவும் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் பஸ் வண்டிகளில் ஏறிச் சென்று அங்கிருந்து வவுனியாவுக்கு பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். (1-236)

# திறைசேரியின் செயலாளராக மீண்டும் பி.பி. ஜயசுந்தர

கொழும்பு செப்.29

திறைசேரியின் செயலாளராக கலாநிதி பி.பி. ஜயசுந்தர மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வழங்கினார்.

நாட்டின் நிதித்துறையில் சிறந்த அனுபவங்களைக் கொண்டுள்ள கலாநிதி ஜயசுந்தர திறைசேரியின் செயலாளராக முன்னரும் கடமையாற்றியிருந்தார். லங்கா மெரின் சேர்விஸ் எனும் நிறுவனத்தை தனியார் மயப்படுத்தியமை தொடர்பான வழக்கில் முன்னாள் பிரதம நீதியரசரின் உத்தரவுப்படி எந்த அரச பதவிகளையும் வகிப்பதில்லை என உயர்நீதிமன்றத்துக்கு சத்தியக் கடதாசி வழங்கியதையடுத்து கலாநிதி ஜயசுந்தர அப்பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

. எனினும் தன்னால் வழங்கப்பட்ட சத்தியக் கடதாசியின் நிபந்தனைகளிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கலாநிதி ஜயசுந்தர உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு தொடர்பாக கடந்த 24ஆம் திகதி ஆராய்ந்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள், கலாநிதி ஜயசுந்தரவுக்கு திறைசேரிச் செயலாளர் பொறுப்பை மீண்டும் ஏற்க முடியுமெனத் தெரிவித்திருந்தனர்.

அமைச்சரவைக் காரியாலய செயலாளராக சுமித் அபேசிங்க மற்றும் தென்னாபிரிக்காவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகராக டி.விஜேசிங்க ஆகியோருக்கும் ஜனாதிபதி நேற்று நியமனங்களை வழங்கினார். (50)

# ஏசியன் அலையன்ஸ் இன்சுரன்ஸ் கிளையை அமைச்சர் டக்ளஸ் நேற்றுத் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், செப். 29

ஏசியன் அலையன்ஸ் இன்சுரன்ஸ் நிறுவனத்தின் யாழ். கிளை அலுவலகத் திறப்பு விழா யாழ். ஸ்ரான்லி வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நாடாவைவெட்டி அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இது தொடர்பான வைபவம் நேற்று மு.ப. 10.30 மணிக்கு 8/11, முத லாம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம் என்னும் முகவரியில் அமைந் துள்ள ஏசியன் அலையன்ஸ் இன்சுரன்ஸ் நிறுவனத்தின் யாழ். கிளையில் நடைபெற்றது.

அந்த நிறுவனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் வி. வித்தியாசங்கர் சர்மா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக அந்த நிறுனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரமால் ஜயசிங்கவும், கௌரவ விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி பற்குணராஜா யோகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் ஏசியன் அலையன்ஸ் இன்சுரன்ஸ் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் சூள ஹெட்டியாராய்ச்சி, பயிற்சி மற்றும் பொது அறிவு அபிவிருத்தி பிரதமப் பொதுமுகாமையாளர் லீலாரட்ண பியசேன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிறுவனத்தின் அலுவலகத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைக்க வியாபார நடவடிக்கையை பிரதம நிறைவேற்று அதிகாரி ரமால் ஜயசிங்க ஆரம்பித்துவைத்தார்.

இந்த வைபவத்தில் வங்கி முகாமையாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், காப்புறுதி நிறுவனங்களின் அதிகாரிகள், சமயத்தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (50-111)

# மக்கள் மீளக்குடியமர்ந்த மணற்காட்டுக்கு யாழ்.ஆயர் கடந்த சனியன்று விஜயம்

## 180 பேருக்கு உறுதி பூசுதல் வழங்கினார்

வடமராட்சி, செப். 29

மணற்காடு கிராமத்தில் மக்கள் மீள் குடியேறிய பின்னர் முதன் முதல் அங்கு விஜயம் செய்த யாழ்.ஆயர் பேரருட் திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் மணற்காடு பங்கைச் சேர்ந்த 180 இளைஞர் யுவதிகளுக்கு உறுதி பூசுதல் அருட்சாதனம் வழங்கப் பட்டது.

கடந்த சனிக்கிழமை மணற்காடு கிராமத்துக்குச் சென்ற யாழ்.ஆயர் அங்கு அந்தோனியார் தேவாலயத்தில் உறுதி பூசுதல் பூசை வழிபாடுகளைப் பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு றெக்னோ அடிகளார், மணற்காடு பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் ஆகியோரின் உதவியுடன் நடத்தினார்.

மணற்காடு பங்கைச் சேர்ந்த 180 இளைஞர் யுவதிகளுக்கு இதன்போது ஆயர் உறுதி பூசுதல் வழங்கினார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மணற்காடு கிராம மக்கள் இடம் பெயர்ந்ததைத் தொடர்ந்து சுமார் 5 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது தான் உறுதி பூசுதல் வழங்கப்பட்டது.

இதன் பின்னர் மீள்குடியேறிய மணற்காடு கிராம மக்களின் குறைபாடுகள், தேவைகளை நேரில் பார்த்தும் கேட்டும் தெரிந்து கொண்டார். (50-236)

# 'டான் தமிழ் ஒளி' தொலைக்காட்சி அலுவலகம் கொக்குவிலில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 29

'டான் தமிழ் ஒளி' தொலைக்காட்சியின் யாழ்.அலுவலகம் கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

''டான் தமிழ் ஒளி'' தொலைக்காட்சியின் இயக்குநர் வி.எஸ்.குகநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நல்லை ஆதீன முதல்வர் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், எழுத்தாளர் செங்கைஆழியான், யாழ்.நகர படைத்தளபதி பிரிகேடியர் பெரேரா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புதிய அலுவலகத்தினை நாடாவெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

'டான் தமிழ் ஒளி' தொலைக்காட்சிப் பணியாளர்கள், கலைஞர்கள் உட்படப் பல பிரமுகர்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (50-9)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 14 | 30.09.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | காலை 07.13 வரை |
| நட்சத்திரம்: | அவிட்டம் |
| | முழுவதும் |
| சுபநேரம்: | 04.32 - 06.02 |
| ராகுகாலம்: | 12.02 - 01.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் விலை கொடுத்து உருவாக்கிய அமைதிச் சூழலை குழப்ப எவருக்கும் இடமளிக்கக் கூடாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.29

தமிழ் மக்களும் படைத்தரப்பினரும் மிகப் பெரும் விலை கொடுத்து ஏற்படுத்தியுள்ள அமைதியான சூழலை யாரும் குழப்ப அனுமதிக்கக்கூடாது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மானிப்பாய், கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வரவேற்புக் கூட் டத்தில் பேசுகையில் அமைச்சர் இப்படிக் கூறினார்.

சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்களால் ஏற்பாடு செய் யப்பட்ட இந்தக் கூட்டத்திற்கு முன்பாக மருதடி விநாயகர் ஆலயத் தில் இருந்து அமைச்சர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

மானிப்பாய் கூட்டுறவுச் சங்கத் தலைவரது தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சிறப்பு அதிதிகளாக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் உட்பட மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத்தர், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர், கிராமசேவகர், அப்பகுதி இராணுவப் பொறுப்பதிகாரி மற்றும் நூற்றுக்கணக் கான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் இடப் பெயர்வுகளால் மக்கள் எதிர்கொண்ட அவலங்கள் பற்றி எடுத்துக் கூறிய அமைச்சர், பாதிப்புக்குள்ளான மானிப்பாய் கூட்டுறவுச் சங்கத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்குத் தேவையான உதவி களை முடிந்த வரை வழங்குவதாகத் தெரிவித்தார்.

பலத்த சவால்களுக்கு மத்தியில் உரு வாக்கப்பட்டிருக்கும் இந்த அமைதியான சூழல் பற்றி குறிப்பிட்ட அமைச்சர் இதற் காக தமிழ் மக்களும் படைத்தரப்பினரும் மிகப்பெரும் விலை கொடுத்துள்ளனர் என்பதை கவனத்துக்கு கொண்டு வந்த தோடு, இனிமேல் இந்த அமைதியை யாரும் குழப்புவதற்கு அனுமதிக்கக் கூடாது என் றும் கேட்டுக்கொண்டார்.

நிகழ்வின் இறுதியில் தையல் பயிற்சி யில் ஈடுபட்ட யுவதிகளுக்கு தையல் இயந்திரங்களைக் கையளித்த அமைச்சர், இவ்வாறான பயிற்சி நெறிகளை முறையா கக் கற்றுக் கொள்வோர்களானால் தொடர்ந் தும் இவ்வாறான உதவிகளை வழங்க ஏற் பாடுகள் செய்து தருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (1)

# முகாமைத்துவ விரிவுரைகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட முதலாம், இரண் டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான 2007/2008 கல்வி யாண்டின் இரண்டாம் அரையாண்டுக் கான விரிவுரைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென பதில் பீடாதிபதி க.க.அருள்வேல் அறிவித்துள் ளார். (1)

# விழிப்புக்குழு உறுப்பினர் தாக்கப்பட்டதாக முறைப்பாடு

வண்ணை, செப்.29

விழிப்புக்குழு அங்கத்தவர் ஒருவர் அவரது கடமை நேரத்தில் தாக்கப்பட்ட தாக இராணுவ முகாமில் புகார் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை இரவு 11.30 மணியளவில் ஜே/128 கிராம அலுவலர் பிரிவுக்குட் பட்ட பூநாரி மரத்தடிப் பகுதியில் நடை பெற்றுள்ளது.

படையினரின் அனுசரணையுடன் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இரவுநேர விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ் வொரு நாளும் இரவு நேரக் கடமையில் ஈடு பட்டுவரும் சமயத்திலேயே மேற்படி பிரி வைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை லோகேஸ் (வயது - 30) என்பவர் தாக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. (1-160)

# சாவகச்சேரி மகளிரில் கலைவாணி சிலை திறப்பு

யாழ்ப்பாணம், செப்.29

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வளாகத் தில் நிர்மாணிக்கப்பட்ட கலைவாணி சிலை (விஜயதசமி அன்று) திறந்து வைக் கப்பட்டது.

கல்லூரி பழைய மாணவர் சங்கத்தி னால் நிர்மாணிக்கப்பட்ட கலைவாணி சிலையை கல்லூரியின் பழைய மாணவி யும் தென்மராட்சி உதவிப்பிரதேச செயலா ளருமான ரஞ்சனா நவரத்தினம் திறந்து வைத்தார்.

கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்களும் பழைய மாணவர் களும் கலந்து கொண்டனர். (1-207)

# தென்மராட்சியில் விவசாயிகளுக்கு நாளை உழுந்து விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.29

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், 2008 நவம்பர் மாதம் ஏற் பட்ட நிசா புயல் மற்றும் வெள்ளத்தினால் சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் பாதிக்கப்பட்ட ஒன்பது கிராமங்களில் உள்ள 495 விவசாயிகளுக்கு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு விவசாயப் போதனாசிரியர் தலைமையில் அவரது அலு வலகத்தில் உள்ளீடுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

சரசாலை, மீசாலை கிழக்கு, மிருசுவில் வடக்கு, உசன், கொடி காமம் வடக்கு, வரணி வடக்கு, அல்லாரை, வெள்ளாம் போக் கட்டி, மட்டுவில் வடக்கு ஆகிய கிராம விவசாயிகளுக்கே உள்ளீடு கள் வழங்கப்படும்.

ஒவ்வொரு விவசாயிக்கும் விதை உழுந்து 3 கிலோ, யூரியா 6 கிலோ, ரி.எஸ்.பி. 10 கிலோ, எம்.ஓ.பி. 6 கிலோ, கிருமி நாசினி 200 மில்லி லீற்றர் மற்றும் சல்பர் 500 கிராம் ஆகியன வழங்கப் படவுள்ளன.

இந் நிகழ்வினை தென்மராட்சிப் பிரதேச செயலரும், பிரதி விவசாயப் பணிப்பாளரும் ஆரம்பித்து வைப்பார்கள்.

விவசாயிகள் அன்றைய தினம் சமுகம் தந்து விதை உழுந்தைப் பெற்றுக்கொள்ளுமாறு விவசாயப் போதனாசிரியர் அ.விஜய குமார் கேட்டுள்ளார். (1)


## ஈராண்டு நினைவஞ்சலி



**பா.சனாதனன்**

(2003 கணிதப்பிரிவு மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி)

தோற்றம்: 13★11★1984

மறைவு: 29★09★2007



இன்று வரை கிழித்து எறிந்தோம்
இரண்டாண்டு நாள்காட்டித் தாள்களை !
ஆனால்
கிழிக்க முடியவில்லையடா (சனாதனே)
நம் உள்ளத்தில் உன் நினைவை

2003 பிரிவு மாணவர்கள்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## 31 ஆம் நாள் நினைவுகள்

பிறப்பு 12 ★ 09 ★ 1945



இறப்பு 30 ★ 08 ★ 2009

## தோமஸ் ஜேம்ஸ்

(ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)

கடந்த 30.08.2009 இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விருட்சத்தின் 31 ஆம் நாள் நினைவில் அவர் நோயுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்த வேளையில் அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும், இறுதி நிகழ் வின்போது நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல் மூலம் துக்கம் பகிர்ந்தோருக்கும் மலர்வளையம், மற்றும் அஞ்சலிப் பிரசு ரத்தின் மூலம் அனுதாபத்தை பகிர்ந்து கொண்டோருக்கும், உணவு, தேநீர் பரிமாறி பகிர்ந்து கொண்டோருக்கும் இரங் கல் திருப்பலியை நிறைவேற்றிய அருட் தந்தைக்கும் மற் றும் எமது இல்லத்திற்கு வருகை தந்த ஏனைய அருட் தந்தை யர்களுக்கும் எமது இதய நன்றிகளை தெரிவிப்பதுடன்

இன்று (29.09.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாறுதலுக்காக செபிக்கும் படி வேண்டுவதோடு, தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதிய போச னத்திலும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அன்பு, பொறுமை, பண்பு, பாசம் என்பவைகளால்
எமைப் போற்றி வளர்த்த
நீங்கள் என்றும் விண்ணில் இருந்து எமது
காவல் தெய்வமாக
எம்மை வழிநடத்த வேண்டும் என்றும்
உங்கள் ஆன்மா என்றும் இறையடியில்
நித்தியமாய் இளைப்பாறவும் இறைவனை
வேண்டுகிறோம்.

இல. 11, மூளாய் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அறை/வீடுகள் வாடகைக்கு

கொழும்பு வெள்ளவத்தையில் AC/Non AC அறைகள், 2 அல்லது 3 அறைகளுடன் கூடிய வீடுகள் நாள் அல்லது மாத வாடகைக்குண்டு.

**Suriyan Rest,**
**18/3, Station Road.**
**T.P.: 112581441, 112 556175**

## தவறிவிட்டது

NP MU 5756 மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு யாழ். மானிப்பாய், நல்லூர் பகுதிகளில் கடந்த (25.09.2009) வெள்ளிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0214590319 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Visa! Visa! Visa! எந்த நாட்டிற்கும் எவ்வகையான விசாவிற்கும் உரிய ஆலோசனைகளைப் பெற
இரவிக்குமார்
T.P 077 6953726 (Travel Consultant)
"கௌரி வாசா", ஆலடி, உடுவில், சுன்னாகம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

புரொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 30.09.2009 வரை இருப்பதால் உங்கள் பதிவு களை உடன் மேற்கொள்ளவும்.

திருமகள் களஞ்சியம்
702, கே.கே.எஸ் வீதி, சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0212223279

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமை புரியும் செல்வி வல்லிபுரம் பரமேஸ்வரி அவர்களின் பாசமிகு தந்தை

**நமசிவாயம் வல்லிபுரம்**

காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம். தாதிய உத்தியோகத்தர்கள்.

**HUDEC - CARITAS JAFFNA**
The Social arm of the Catholic Church of Jaffna
HUDEC CARITAS
கியூடெக் - கரித்தாஸ் யாழ்ப்பாணம்
யாழ்.கத்தோலிக்க திருச்சபையின் சமூக அபிவிருத்தி நிறுவனம்
யாழ்.மீன்பிடி வலை உருவாக்கம் நெவாட் அமையம்
647, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

வெற்றிடங்கள்: இயந்திர இயக்குநர் - திருத்துநர் (Mechanic Operator)

இயந்திரங்கள் இயக்கக்கூடிய திருத்தக்கூடிய பின்வரும் தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்

- வயதெல்லை: 23- 45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்
- கல்வித் தரம்: க.பொ.த (சாதாரணம்)

தொழில் நுட்பத்தகைமை

- தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் NCT Certificate (Mechanic & Electronic)

மின்சாரம் - மின்னியல்- பொறியியல் சான்றிதழ்கள் Diploma in Electricity & Electronics

தொழில்நுட்பம் சார் வேறு தகைமைகள்

குறைந்தது 3 வருட இத்துறையில் அனுபவம்

மேற்குறிப்பிட்ட தகைமை உடையோர் சுயமாக தயாரிக்கப்பட்ட தங்களது விண்ணப்பங்களை ஐப்சி 2 ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்கு மாறு அனுப்பிவைக்கவும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட் டாது.

கியூடெக், கரித்தாஸ்
14, மத்தியூஸ் தெரு, தியோகு வீதி,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி:hudec@sltnet.lk

இயக்குநர்.

## மரண அறிவித்தல்

**திருமதி சோமேஸ்வர சர்மா விமலாதேவி**



கரைநகரைப் பிறப்பிட மாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமேஸ்வர சர்மா விமலாதேவி நேற்று (28.09.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சோமசுந்தரக் குருக் கள்-கௌரியம்மாதம்பதிகளின் அன்பு மகளும், சோமேஸ்வர சர்மாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோ.வாமதேவ சர்மா ( கொழும்பு) மற்றும் சோ.வரதராஜசர்மா (கொழும் புத்துறை), செ. சாந்ததேவி (கட்டுடை), கா. சியாமளாதேவி (கந்த ரோடை), கு. நிர்மலாதேவி (உடுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பா.அனலட்சுமியின் (கொழும்பு) அன்பு மைத்துனியும், வாகீஸ்வரக்குருக்கள், உஷாதேவி, சரஸ்வதி தேவி, உமாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காயத்திரி, ஜெயக்குமாரக்குருக்கள் (மருதடி), கீதச்சந்திரக்குருக்கள் (கோப்பாய்), சிவசங்கரக் குருக்கள் (தவாடி) ஆகியோரின் அன்பு மாமியாரும், வதனீச சர்மா, ராஜீவன், ஜஸ்வர்யா, சுஜெனசிறி, சுஸ்மிதா, சுகீர்த்தனன், ஜெஜரூபன், ஸோபனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.09.2009) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருளானந்தப் பிள்ளையார் கோயிலடி,
கந்தரோடை, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லைப்பாலத்தின் தொல்லை நீங்குமா?



குடாநாட்டுக்குள் இன்னொரு குடாநாடு என்று சிறப்பிக்கப்படுவது வடமராட்சிப் பகுதி. வடமராட்சியில் யாழ்ப்பாணத்தின் பெருநிலப்பரப்பையும் இணைக்கும் மிக முக்கியமான ஒரேயொரு வீதி வல்லை வெளியை ஊடறுத்துச் செல்லும் யாழ்-பருத்தித்துறை வீதிதான். வல்லைவெளி நடுவே வளைந்து செல்லும் ஒற்றைப் பாம்புபோல காட்சிதரும் இந்த வீதிதான் யாழ்ப்பாணத்துக்குள் வருவதற்கும், வடமராட்சிக்குள் உள்நுழைவதற்கும் மக்களால் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மிகையான போக்குவரத்துக் காரணமாக விரைவிலேயே குண்டும்குழியுமாகக் காட்சி தரக்கூடிய இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அண்மைக்காலமாக சீரான முறையில் பேணி வருகிறார்கள். இதன் ஒருபடியாக வல்லையூடாகப் பாய்ந்துசெல்லும் தொண்டைமானாறு நீரேரிக்கு மேலாக அமைந்திருந்த பழைய பாலத்தின் ஒருபகுதி சிலவருடங்களுக்கு முன்னர் நவீன முறையில் புதிதாக அமைக்கப்பட்டது. ஆயினும் கடந்த வருடம் குடாநாட்டை உலுக்கியெடுத்த 'நிஷா' புயல், மழை காரணமாக பாலத்தின் ஏனைய பகுதிகள் பயன்பாட்டுக்கு உதவாதவையாக மாறத்தொடங்கின. இதன் விளைவினை பாலத்தில் ஆங்காங்கே காணப்படும் விரிசல்களும்,துவாரங்களும் புலப்படுத்தின. இவற்றினை நிவர்த்திப்பதற்காகப் பாலத்தில் சீரமைக்கப்படாதிருந்த மறுபகுதியை இப்போது புதிதாக அமைக்கும் பணிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. வெகுவிரைவில் இப்பணிகள் பூர்த்தியாகவுள்ளதாக கூறப்படுகின்ற போதிலும் பாலத்தின் ஒருபக்கத்துக்குரிய அடிக்கட்டுமான வேலைகள் மாத்திரமே நிறைவுற்றுள்ளதைக் காணமுடிகின்றது. இதுதவிர இந்த வீதியின் ஆரம்பத்திலுள்ள ஒருசில மதகுகளும் பிரிக்கப்பட்டு புனரமைப்புச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வேலைகளுக்குச் சமாந்தரமாக யாழ்-பருத்தித்துறை வீதி அகலப்படுத்தப்படும் பணிகளும் நடைபெறவிருப்பதாகத் தெரியவருகிறது.

அபிவிருத்தியும், வீதி அகலிப்பும், பாலங்களின் மீள்நிர்மாணமும் மக்களின் போக்குவரத்தையும் வாழ்வியல் முறைமையையும் இலகுபடுத்தும் என்பது உண்மைதான். ஆயினும் மழைகாலம் நெருங்கியுள்ள வேளையில்தான் பாலத்தினை புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மழைகாலங்களில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அத்தோடு பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படாமலுள்ள நிலையில் பெருமழையொன்று பெய்யுமானால் சிலவேளைகளில் குடாநாட்டுக்கும் வடமராட்சிக்கும் இடையிலான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்படும் அபாயமும் ஏற்படும். இதேவேளை பாலத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக அவற்றின் அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகப் பாதைகளால் பயணிப்பதிலும் பல அசௌகரியங்களை இப்போதே பொதுமக்கள் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. தற்காலிகப் பாதைகள் சிறியவையாக உள்ளதால் ஒருவழிப்போக்குவரத்து மாத்திரமே சாத்தியமாக உள்ளது. உதாரணமாக யாழிலிருந்து வரும் வாகனங்கள் தற்காலிகப் பாதைகளைக் கடந்த பின்னரே வல்வையிலிருந்து யாழ்.நோக்கிப் பயணிக்கும் வாகனங்கள் குறித்த தற்காலிகப் பாதையைக் கடக்கவேண்டியிருக்கிறது. அத்துடன் தற்காலிகப் பாதைகள் மேடுபள்ளங்களை அதிகளவு கொண்டிருப்பதால் வாகனங்கள் பழுதுபடவும் ஏதுவாகிறது. இந்த நிலைமை மாரிகாலம் முழுமூச்சுடன் தொடங்கியவுடன் இன்னும் மோசமடையவே போகிறது.

மக்கள் நலனையும், மாரிகாலத்தையும் மனதிற்கொண்டு வல்லைப் பாலத்தின் மீளமைப்புப் பணிகளை விரைவிலேயே பூர்த்தியாக்குவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?




தொகுப்பு:-
வடநம்பி





# வரலாற்றில் உயர்ந்து நிற்கும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

மாணவர்களுக்கு சிறந்த கல்வியைப் புகட்டுவது மாத்திரம் பாடசாலைகளின் பொறுப்பல்ல ஒருவனைப் பூரணமனிதனாகவும் அவனுள்ளே இருக்கும் எல்லா ஆற்றல்களையும் புதைந்து கிடக்கும் திறமைகளையும் வெளிக்கொணர்ந்து அவற்றை வளர்த்து சமூகத்தில் சிறந்த ஆளுமையடையவனாக உருவாக்கும் முழுப்பொறுப்பும் பாடசாலையினுடையதாகும். அந்தவகையில் வடமராட்சியின் முத்கெததனப் போற்றப்படும் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி தனது பொறுப்பைத் திறம்பட செய்துவருகிறது. இதற்கு உதாரணமாக அதனது அண்மைக்கால உயர்தரப் பெறுபேறுகளை ஒரு உதாரணமாகக் கூறலாம். இதன் வரலாறு பற்றி நோக்குகையில்:

இலங்கையில் பழமைவாய்ந்த பாடசாலைகளில் ஒன்று யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி கடந்த 2002ஆம் ஆண்டு தனது 150ஆவது ஆண்டு விழாவைப் பூர்த்தி செய்து இன்று 157ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. கிறிஸ்தவமதப் பிரச்சாரத்தின் பொருட்டு கிறிஸ்தவ மதக்குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்தன. அவர்களின் வருகையாலேயே யாழ்.மாவட்டம் கல்வித்துறையிலும் பாரிய வளர்ச்சி கண்டது.
உடுப்பிட்டியிலும் மிஷன்மார்களின் வருகையால், தலைசிறந்த இருகல்லூரிகள் உருவாக்கப்பட்டன. (வளரும்)

# தேரோடும் வைரவர் ஆலயம்

யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருக்கும் சிறுதெய்வ வழிபாடுகளில் வைரவ வழிபாடு மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. இதற்கு யாழ்ப்பாணத்தின் வரலாறே காரணமாக அமைகின்றது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற அந்நிய தேசத்தவர்களின் பிடியில் இலங்கை முழுவதும் இருந்த காலத்தில் பூகோள ரீதியாக முக்கியத்துவம் பெற்றிருந்த யாழ்ப்பாணமும் அவர்களின் ஆட்சியின் கீழ் வரவேண்டியதாயிற்று. இதனால் பண்பாட்டு அம்சங்கள் பலவும் அழிவு நிலையை நோக்கி செல்லத் தொடங்கின. தமது ஆட்சியை மட்டுமல்லாது தாம் சார்ந்துள்ள மதத்தினையும் பரப்ப அந்நிய ஆட்சியாளர்கள் தீவிரமாய் முனைந்தார்கள். இதனொருபடியாக ஏற்கனவே இங்கு வழக்கிலிருந்த மத வழிபாடுகள் அனைத்தும் தடைசெய்யப்பட்டன. இந்நிலையில்தான் சைவசமயத்தை இரகசிய முறையில் பேணுவதற்கு வைரவ வழிபாடு யாழ்ப்பாணத்தவர்களுக்கு கைகொடுத்தது. திரிசூலம் ஒன்றை வைரவராகப் பிரதியீடு செய்து வீடுகளில் அவற்றை வழிபட்டு வந்தனர். சிலவேளைகளில் வீடுகளில் அந்நிய ஆட்சியாளர்களின் படைகள் உள்நுழையும்போது வைரவ சூலத்தை சிலுவை போன்ற வடிவத்தில் மாற்றிவைத்து தப்பித்தும் கொள்வர். இத்தகைய தன்மைகளால் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பாகங்களுக்கும் வைரவ வழிபாடு விரிவடைய வேண்டியதாயிற்று. இதனடியாகவே வடமராட்சி, உடுப்பிட்டி மாதோட்டை என்ற இடத்தில் திரிசூலம் வைத்து காலம்காலமாக வைரவ வழிபாடு நடைபெற்று வந்தது. ஆரம்பத்தில் சிறிய கூடாரம் ஒன்றிலேயே இந்த வைரவசூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடும் முறை இருந்தது. எனினும் காலத்தின் சடுதியான மாற்றங்களையும், ஆகம வழிபாட்டின் முறைகளையும் மெல்லமெல்ல இந்த வைரவ ஆலயம் உள்வாங்கத் தொடங்கியது. 1958ஆம் ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் திகதி மாதோட்டை ஞானவைரவர் ஆலயத்தில் வைரவ சிலை கர்ப்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இதுவும் இந்த ஆலயத்தின் சிறப்பென்றே கூறலாம். ஏனெனில் பொதுவாக வைரவர் கோயில்களில் திரிசூலமே கர்ப்பக்கிரகங்களில் இருப்பது வழக்கம். ஒருசில ஆலயங்களில் மாத்திரமே வைரவ சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அந்த ஒருசிலவற்றில் மாதோட்டை ஞானவைரவர் ஆலயமும் உள்ளடங்குகிறது. பின்னர் படிப்படியாக ஆலயத்தில் புதிதுபுதிதாக கட்டடங்கள் எழத்தொடங்கின. வசந்தமண்டபம், ஏனைய கடவுளர்களின் சிறுசிறு கோயில்கள், உள்வீதி என்பனவெல்லாம் உருப்பெற்று யாழ்ப்பாணத்திலுள்ள வைரவர் கோயில்களில் மிகப் பெரியது என்ற பெருமையையும் மாதோட்டை ஞானவைரவர் ஆலயம் தன்னுள் இணைத்துக்கொண்டது.

அதுதவிர முதல்முறையாக ஒரு வைரவர் ஆலயத்தில் தேர்த்திருவிழா நடைபெற்ற வரலாற்றினையும் இந்த ஆலயம் நிகழ்த்தியது. ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் இந்த ஆலயத்தில் பெருந்திருவிழா நடைபெற்று ஏனைய ஆகம வழிபாட்டு ஆலயங்களில் உள்ளதைப் போல தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா என்பனவும் நடைபெறுகின்றன.

காலமாற்றத்தின் விளைவாக பல சிறுதெய்வ வழிபாட்டு ஆலயங்கள் ஆகமமுறைமைக்குள் அகப்பட்டு தமது தனித்துவங்களை இழந்து வருகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள 'அண்ணமார்' என்ற சிறுதெய்வ வழிபாடு இப்போது ஆகமமயப்பட்டு அண்ணமாரை வணங்கிய ஆலயங்கள் கிருஷ்ணாலயங்களாக உருமாறத் தொடங்கியுள்ளன. ஆயினும் காலமாற்றத்தை உள்வாங்கிக்கொண்ட அதேவேளை தனது தனித்துவத்தையும் தொடர்ந்தும் பேணிவரும் பண்பினை உடுப்பிட்டி மாதோட்டை ஞானவைரவர் ஆலயத்தின் பேறாகக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சிடம்

# யுத்தக் குற்ற அறிக்கையை சமர்ப்பிப்பது ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 29

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக; யுத்தக் குற்ற விவகாரங்கள் சம்பந்தமான அமெரிக்க ஜனாதிபதியின் விசேட தூதுவரின் அலுவலகம் கடந்த 21 ஆம் திகதி அமெரிக்க வெளிவிவகார அமைச்சிடம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட அறிக்கை, திட்டமிடப்பட்ட அத்திகதியில் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தற்போது தெரியவந்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட யுத்தக் குற்ற அறிக்கை முழுமையாகத் தயாராகவில்லை என்றும், அடுத்த மாதமளவிலேயே அது வெளியிடப்படலாம் எனவும் இப்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஜெவ் அன்டர்ஸன், யுத்தக் குற்ற அறிக்கை இன்னமும் முழுமையாகத் தயாராகவில்லை, இதன் காரணமாக அமெரிக்க காங்கிரஸ் அதனைச் சமர்ப பிப்பதற்கான கால எல்லையை நீடித்துள் ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க வெளிவிவகார அமைச்சக வட்டாரங்களும் குறிப்பிட்ட அறிக்கை இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்துள்ளன.

இலங்கையின் யுத்தத்தில் இறுதி நாள்களில் நடைபெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்த விவரங்கள் அறிக்கையில் இடம்பெற்றிருக்க வேண்டும். மேலும் அதற்குக் காரணம் யார் என்பதையும் கூடியளவிற்குத் தெரிவிக்கவேண்டும். இது கடினமான பணி என்றபோதிலும், அவர்கள் பல தரப்பட்ட வட்டாரங்களிலிருந்து தகவல்களைச் சேகரித்துள்ளனர் என அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், குறிப்பிட்ட அறிக்கை வெளியிடப்படுவது நான்கு வாரங்களுக்குத் தாமதப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எனினும் இப்படித் தாமதப்படுத்தப்பட்டமைக்கு அரசியலோ அல்லது வேறு விடயங்களோ காரணம் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேசமயம், அமெரிக்க நீதிஅமைச்சும், இலங்கையின் உள்நாட்டு யுத்தம் குறித்த சில விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைப் பிரஜைகள் மற்றும் வெளிநாட்டவர்களின் கருத்துக்களை அந்த அமைச்சு பெற்றுள்ளதாம்.

சமர்ப்பிக்கப்படவிருந்த அமெரிக்காவின் அறிக்கை என்ன காரணத்திற்காகத் தாமதமாகினாலும், அது இலங்கை அரசின் தலைவர்களுக்குத் தற்காலிக நிம்மதியளிக்கும் விடயமாக அமைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சில உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் எமது நம்பகத்தன்மையை சர்வதேச சமூகத்திற்கு நிரூபிப்பதற்கும் எமக்கு அவசியமான கால அவகாசத்தை இது வழங்கியுள்ளது எனப் பெயர் குறிப்பிடவிரும்பாத இலங்கை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் தென்னாசியாவிற்கான அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக்கிற்கும் இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சந்திப்பின் பின்னரே பிளேக் இந்த அறிக்கையைத் தாமதப்படுத்துமாறு உத்தரவிட்டார் என்றும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், இது குறித்து உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## நவாலி பொதுமண்டபம் பலநோக்குத் திட்டத்துக்கு

யாழ்ப்பாணம், செப்.29

நவாலி தெற்கு பொதுமண்டபம் பலநோக்கு அபிவிருத்தித் திட்டத்திற்கு பயன்படவுள்ளது.

நவாலி தெற்கு கிராம அலுவலர் கு.எழிற்செல்வன் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

நூலகம், சனசமூகநிலையம், பெண்கள் அபிவிருத்தி, சிறுவர் விளையாட்டு மற்றும் தொழிற்பயிற்சி என்பவற்றுக்காக அமைக்கப்பட்ட மேற்படி பொதுமண்டபமே அபிவிருத்தியின் பொருட்டு பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்காக பொது அமைப்புகள், நலன் விரும்பிகள், கிராம மக்களின் உதவியுடன் விரைவில் மக்கள் அபிவிருத்தி செயற்பாடு நடத்தவுள்ளதாக கிராம அதிகாரி கு.எழிற்செல்வன் தெரிவித்தார்.

(203-302)

## வடமராட்சி கிழக்கு நாகதம்பிரான் கோயிலில் பெருந்திருவிழாவை முன்னிட்டு விசேட பூசைகள்

வடமராட்சி, செப்.29

நாகர் கோயில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை ஒட்டி நேற்று திங்கட்கிழமை தொடக்கம் விசேட அபிஷேக, பூசைகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்தகால அசாதாரண சூழ்நிலைகளை அடுத்து இப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

கடந்த பத்து வருடங்களுக்கு முன் இக்கிராமமக்கள் வெளியேறினார்கள். நாகதம்பிரான் கோயிலும் பூசைகள் இன்றிக் கைவிடப்பட்டிருந்தது.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நாகதம்பிரான் கோயிலுக்கு பக்தர்கள் சென்று வரவும் நித்திய பூசைகளை மேற்கொள்ளவும் படையினர் சில மாதகாலத்துக்கு முன்னர் அனுமதி வழங்கியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து கோயில் சுத்தம் செய்யப்பட்டு பிராயச்சித்த அபிஷேகம் மேற்கொள்ளப்பட்டு பாலஸ்தாபனமும் செய்து வைக்கப்பட்டது.

நேற்றுத் திங்கட்கிழமை முதல் பெருந்திருவிழாக்காலம் ஆரம்பமாகியுள்ளமையால் பெருந்திருவிழாவை ஒட்டி விசேட அபிஷேக, பூசைகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்விசேட அபிஷேக பூசைகள் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

இக்கோயிலில் சில மாதங்களுக்குள் மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு அடுத்த ஆண்டு முதல் பெருந்திருவிழாவை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(203-236)

## இளவாலை மெய்கண்டான் ம.வியின் பழைய மாணவர் விவரம் சேகரிப்பு

சித்தங்கேணி, செப்.29

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று உயர் கல்வி கற்றும் பல்வேறு உயர் தொழில்கள் பெற்றும் சமூகத்துக்குப் பயன்பட வாழ்ந்த, வாழ்கின்ற வித்தியாலய புகழுறு பழைய மாணவர்களின் தகவல்களைத் திரட்டி வித்தியாலய நிறுவுநர் நினைவு நாளில் நூலாக வெளியிட முயற்சி எடுக்கப்படவுள்ளது.

இந்நூல் மெய்கண்டான் வித்தியாலயக் கல்வியின் விழுமியங்களையும் பழைய மாணவர்களின் மேன்மையையும் வரலாறாக ஆவணப்படுத்தும் தகவல் களஞ்சியமாக அமையவுள்ளது.

வித்தியாலய நிறுவுநர் ஏழூர் இராசரத்தினத்தின் அறுபதாவது நினைவு தினம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

எனவே இந்நூலுக்கு வித்தியாலயத்தில் கல்விகற்ற பழைய மாணவர்களின் கல்வித் தகைமை, சாதனை, கௌரவப் பட்டம் ஆகியவற்றுக்குரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இதேவேளை வித்தியாலயத்தில் ஐந்தாம் தரம் அல்லது வேறு தரங்களில் அல்லது எஸ்.எஸ்.சி. அல்லது ஜி.சீ.ஈ. சாதாரணதரம், உயர்தரம் ஆகிய வகுப்புப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களின் விவரங்களும் பதிவு செய்யப்படவுள்ளன.

எனவே மேற்கூறப்பட்ட விவரங்களை 'அதிபர், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், இளவாலை, இலங்கை' என்னும் முகவரிக்கு அல்லது ilavalaimeihandan@yahoo.com என்னும் ஈ- மெயில் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார்.

(201-112)

## பாடசாலைக்கு காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப்.29

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்திற்கு பாடசாலைக்கு அருகிலுள்ள 2 பரப்புக் காணியை எழுவைதீவு வாசியான திருமதி த.விஜயலட்சுமி நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்தப் பாடசாலைக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கிழ் 35 லட்சம் ரூபா பெறுமதியான 4 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் அமைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கே பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினரின் முயற்சியால் இக்காணி நன்கொடையாகப் பெறப்பட்டதாக அதிபர் து.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

(201-267)

## வாசகர் திருமுகம்

### உழவர் சந்தைகளை உருவாக்கி உதவுக!

அன்றாடம் காய்கறிகளின் சந்தை விலைகளைப் பத்திரிகைகளில் பார்ப்பதற்கும் அதனைக் கொள்வனவு செய்வதற்கும் இடையிலுள்ள விலை வேறுபாட்டை யாவரும் அறிவர். அதனைவிட இவற்றை சந்தை வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும் விலை அரைவாசி அல்லது அதைவிடக் குறைவு என்பதே உண்மையாகும். (உ-ம் மரவள்ளிக்கிழங்கு விவசாயியிடமிருந்து 15/- அல்லது 20/-இற்கு கொள்வனவு செய்யப்படுகிறது. சந்தையில் 40/- அல்லது 50/-, வெளிக்கடைகளில் 70/-) ஆக மழை, வெயிலில் காய்ந்து உரிய நேரத்தில் உணவு இன்றி உடலுழைப்பால் வாடும் விவசாயிக்கு கிடைக்கும் இலாபத்தைவிட வாய் வல்லமையை மட்டும் கொண்டிருக்கும் இடைத்தரகர்களும் வியாபாரிகளும் 3 மடங்கு இலாபம் ஈட்டுகின்றனர் என்பதே உண்மையாகும். இதனால் கொள்வனவு செய்யும் பொதுமக்கள் ஒரு பொருளுக்கு இரண்டு மடங்கு பணத்தினை வீணாகச் செலவு செய்கின்றனர். எனவே இதனை நிவர்த்தி செய்ய தமிழ் நாட்டில் உள்ளதுபோல் உழவர்கள் தமது உற்பத்திகளைத் தாமே விற்பனை செய்யக்கூடிய உழவர் சந்தைகளை ஒவ்வொரு பிரதேசத்திலும் அமைக்க வேண்டியது உடனடித் தேவையாகும். இதன்மூலம் பொதுமக்களாலும் விவசாயிகளாலும் இடைத்தரகர்களுக்கும், வியாபாரிகளுக்கும் கொடுக்கப்படும் பணம் மீதமாவதுடன் அனைத்து உற்பத்திப் பொருள்களையும் நியாயமான விலையில் கொள்வனவு செய்வது சாத்தியமாகும்.

எனவே இதனை உணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விநயமாக வேண்டுகின்றோம்.

கந்தர்மடம். யாழவன்.

### இவ்வீதியை விரைவாக செப்பனிட்டு உதவுக

இந்த ஆண்டு ஜனவரி 02 ஆம் திகதி கோப்பாய் - கைதடி வீதி பொதுமக்கள் பாவனைக்காக மீண்டும் திறக்கப்பட்டது. அப்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அவ்வீதியில் ஒரு வாரம் தொடர்ச்சியான திருத்த வேலைகளைச் செய்து சிறப்பாகச் செப்பனிட்டுத் தந்திருந்தனர்.

அதனை வாசகர் திருமுகம் பகுதியில் பாராட்டியிருந்தேன். இவ் வீதியில் உடைக்கப்பட்ட பாலத்திற்குப் பதிலாக புதியபாலம் அமைக்கும் பணி பாதியில் நிற்கின்றது.

பாலத்திற்குப் பதிலாக அமைக்கப்பட்ட உபபாதை மழை வந்தால் மிகச் சேறும் சகதியுமாக உள்ளது. அத்துடன் பள்ளம் திட்டிகளும் பல இடங்களில் உருவாகி விட்டன. இதனால் மக்கள் படும் சிரமம் சொல்லி மாளாது. சிலர் சறுக்கி விழுந்து அலங்கோலமாக வீடு சென்ற சம்பவங்களும் உள்ளது.

இவ்வ்வ பாதையை மிக விரைவில் செப்பனிட்டு பல்லாயிரம் மக்களின் போக்குவரத்திற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கைதடி, வடக்கு. வே.தயேந்திரன்.

### இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

அவசர தேவையின் நிமித்தம் இரண்டு பொதுமகன்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குச் செல்கின்றார்கள். ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி சிறைக்காவலில் இருக்கும் தன் அண்ணனை மீட்பதற்காக முதல் நாள் ''கிராம சேவையாளரின் துரித நடவடிக்கையின் பயனாகக் கிடைத்த உறுதிப்படுத்தும் பத்திரத்தில்'' பிரதேச செயலரிடம் கையொப்பம் பெறுவதற்காகவும், மற்றவர் அந்த அண்ணனை மீட்பதற்கு துணை நிற்கும் தோழனாகவும் சென்றிருந்தார்கள்.

வழிகாட்டி உதவி புரியும் பெண் அதிகாரியிடம் கையொப்பம் பெறும் இடத்தைத் தெரிந்து கொண்டு அவரிடம் சென்று அவரின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க போட்டோப் பிரதி எடுத்து வந்து அவரிடம் கையொப்பமும் பெற்றுக்கொண்டு வெளியில் வந்து பையில் வைத்திருந்த காசைப் பார்த்திருக்கின்றார்.

நெஞ்சு பகீர் என்றது தன் அண்ணனைப் பிணையில் எடுப்பதற்காக வைத்திருந்த காசு பையில் இல்லை. அப்படியே போட்டோப் பிரதி எடுத்த அலுவலகத்திற்கு ஓட்டமும் நடையுமாகச் செல்கின்றார். திருப்பி வந்து காசு வைத்திருந்த பையை இருவரும் துளாவுகின்றார்கள் பணம் இல்லை.

அப்படியே செயலகத்தின் உள்ளே சென்று செயலக பெண் உத்தியோகத்தர் ஒருவரிடம் விடயத்தைச் சொல்கின்றார். அவரும் எழுந்து வந்து அங்கேயே இடங்களில் பார்க்கின்றார். பின் சொல்கின்றார் ''செயலக ஊழியர்கள் எடுத்திருந்தால் உங்கள் பணம் நிச்சயம் கிடைக்கும்'' போய் முன்கவுண்டரில் கேளுங்கள் என்று சொன்னதும் அவரிடம் சென்று விசாரித்தார். அவர் ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு எவ்வளவு காசு? எத்தனை தாள்கள்? என்ற விவரங்களைக் கேட்டு காசு அவருடையது தான் என்பதை உறுதிப்படுத்திய பின் இன்னொரு அதிகாரியிடம் அழைத்துச் சென்றார். அவ்வதிகாரியும் அவரிடம் சில கேள்விகளைக் கேட்டு விட்டு தன் பொறுப்பில் இருந்த காசை அவரிடம் ஒப்படைத்தார்.

நன்றி உணர்வோடு காசைப் பெற்ற அவர், காசை எடுத்து பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்த அந்த செயலக ஊழியரின் பெருந்தன்மையை நினைத்து ஒரு சிறு தொகையை அவரிடம் கொடுக்க முன் வந்த வேளையில் அதை வாங்க மறுத்த அந்த உன்னதப் பண்பினை செயலகப் பொறுப்பதிகாரியின் சிறந்த வழிகாட்டலில் மக்களுக்குச் சேவை புரியும் அத்தனை செயலக ஊழியர்களின் நேர்மையையும் கடமை உணர்வினையும் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

அ.இந்திரராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் உட்கட்டமைப்பு வசதிகளை ஒக். 15க்கு முன் பூர்த்தி செய்யப் பணிப்பு

## மன்னாரில் ஆளுநர் நடத்திய கூட்டத்தில்

கொழும்பு, செப். 29

வன்னியில் மீள்குடியேற்றத்தை நடத்துவதற்கு ஏதுவாக கட்டட நிர்மாணப் பணிகள், உட்கட்டமைப்பு வசதிகளை ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்தி செய்யுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகார சபை உட்பட நிறுவனங்களுக்கு இப்பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அரசின் 180 நாள்கள் வேலைத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ.சந்திரசிறி தலைமையில் மன்னார் அரச அதிபர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போது இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

வன்னியில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### வவுனியா மன்னாரில் நெற்செய்கை ஆரம்ப விழா

இதேவேளை, வவுனியாவில் ஏ-9 வீதிக்கு அண்மித்த பகுதியிலுள்ள சுமார் 2000 ஏக்கர் நெற் காணியில் செய்கையை ஆரம்பிக்கும் நோக்குடன் எதிர்வரும் முதலாம் திகதி ஏர் பூட்டு விழாவொன்றும் நடத்தப்படவுள்ளது.

மேலும் மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார் கட்டுக்கரைகுளத்தை அண்டிய பகுதியிலுள்ள சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நெற் காணிகளில் செய்கையை ஆரம்பிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கட்டுக்கரை குளத்தை அண்டிய பகுதிகளில் மிதிவெடி, கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வரும் படைத்தரப்பினர் இன்னும் இரண்டொரு தினங்களில் அனுமதியளித்ததும் செய்கைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படும் என ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

அடுத்த பெரும்போகத்தில் வடக்கில் பாரிய விளைச்சலை செய்ய வேண்டும் என்ற இலக்கை நோக்கி செயற்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் கட்டுக்கரை குளத்திற்கு அருவியாற்றிலிருந்து நீரை சேகரிக்கும் வேலைகள் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படுவதுடன் நவம்பர் 15ஆம் திகதி முதல் நானாட்டான், வங்காலை பகுதியில் உள்ள 2 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர் திறந்துவிடப்படவுள்ளது. முற்றாக மிதிவெடிகள் அகற்றப்பட்ட இப்பகுதியில் பெரும் போகத்திற்கான விளைச்சல்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன என மன்னார் நீர்ப்பாசன பொறியியலாளர் கே.சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

---

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 ★ 10 ★ 1938 |  | 28 ★ 08 ★ 2009 |

### திருமதி குணமணி சின்னத்தம்பி

பரமபதியாய் பார் போற்ற
வாழ்ந்த தாயே - எம்
குடும்பத்தின் குல விளக்கே - இன்று
பரமனடி சென்றதேனோ?
உருவமது அழிந்தாலும் - எம்
உள்ளத்தில் என்றும் உம் நினைவு
அழியாதம்மா.

நிரந்தர முகவரி:
கல்லூரி வீதி, காங்கேசன்துறை
தற்போதைய முகவரி:
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

அன்னாரின் பிரிவால்
துயருறும்,
குடும்பத்தினர்.

(892989)

---

## விற்பனைக்கு

எங்களிடம் பின்வருவன விற்பனைக்கு உண்டு.

* தரமான கறுப்பு, வெள்ளை எள்ளு
* Empty 5 Play காட்போட் பெட்டி
* DELPI Lockheed Brack and Clutch oil (fluid)

தொடர்பு:- சிவா பிறதேர்ஸ்
205, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே :- 021 222 5497

---

## 31ஆம் நாள்அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|---|
| 31 ★ 07 ★ 1974 |  | 29 ★ 08 ★ 2009 |

### திருமதி ரஞ்சிதமலர் உதயநாதன் (றோசா)

(ஆசிரியர், யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை)

2009.08.29 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்ப விளக்கு திருமதி ரஞ்சிதமலர் உதயநாதன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (29.09.2009) மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமும், நேரில்வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், வைத்தியசாலையில் நோயினால் அவதியுற்ற வேளை உடனிருந்து மருத்துவ உதவி செய்த வைத்திய நிபுணர்கள், தாதிமார் அனைவருக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், உடனிருந்து உதவிகள் புரிந்த அனைத்துள்ளங்களுக்கும் காலத்தால் அழியாத எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு, இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் அனைவருக்கும் அத்துடன் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்பவர் களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

பலட்டன்,
சுன்னாகம் கிழக்கு,சுன்னாகம்.

தாய்,
கணவன், பிள்ளைகள்

---

# நெஞ்சை விட்டகலாத நினைவுகள்

| முதலாம் ஆண்டு | | | ஆறாம் மாதம் | | |
|---|---|---|---|---|---|
| மலர்வு | | உதிர்வு | மலர்வு | | உதிர்வு |
| 09 . 06 . 1947 |  | 10 . 10 . 2008 | 16 . 05 . 1954 |  | 10 . 04 . 2009 |

அமரர் நடராஜா அற்புதானந்தராஜா
திதி: ஏகாதசி 29.09.2009 செவ்வாய்க்கிழமை

அமரர் திருமதி சோதிராணி சதானந்தராஜ்
திதி: துதியை

துன்ப சுவடே தெரியாமல் தூய உள்ளத்துடன் வாழ்ந்தீர்கள்
இன்று உங்களைப் பிரிந்து தவிக்கின்றோம்
உங்கள் உடல்தான் மறைந்தது. உருவங்கள் மறையவே இல்லை.
எமது உள்ளத்தில் உறைந்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

* **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையை தெரிவுசெய்க.**

01. ''கொண்டானின் துன்னிய கேளீர் பிறினில்லை............'' இங்கு கேளீர் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
1) அரசன். 2) உறவினர். 3) ஆசிரியர். 4) கடவுள்.

02. ''உன் சித்தம் திரும்பிவிட்டாற் பொய் வைத்த சொப்பனமாம்......'' இங்கு சித்தம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
1) உளளம். 2) கூந்தல். 3) பாதம். 4) கரகம்.

03. ''அன்னந்தான் சொன்னவனைச் சூட்ட அருள் ........'' இங்கு அருள் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்,
1) பகதி. 2) சூடுதல். 3) மருள். 4) பயம்.

04. ''பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டு......'' இங்கு திறலார் என்பதன் எதிர்கருத்துச் சொல்,
1) பாமரர். 2) ஆற்றலற்றோர்.
3) முயற்சியுடையோர். 4) அறிவுடையோர்.

05. ''நகை நலம் நட்டார் கண் நந்தும்'' இங்கு நலம் என்பதன் எதிர்கருத்துச் சொல்,
1) நன்மை. 2) மலர்ச்சி. 3) சபை. 4) தீமை.

* **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

06. பிறர் தம்மை இன்னார் என்று அறியாதவாறு மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வசித்தல்,
1) யதார்த்தவாதம். 2) இந்திரசாலம்.
3) அஞ்ஞாதவாசம். 4) ஆசாடபூதி.

07. பேராசிரியர் ப.சுப்பையா அவர்களுக்கு கடந்த வருடம் வைரவிழா எடுக்கப்பட்டது. வைர விழா எத்தனையாம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும்,
1) இருபத்தைந்து. 2) அறுபது.
3) ஐம்பது. 4) எழுபத்தைந்து.

08. பூனையின் இளமைப் பெயர்,
1) பறள். 2) குருளை. 3) கன்று. 4) போதகம்.

09. ஆந்தை அலறும் என்பது போல பசு,
1) கனைக்கும். 2) கூப்பிடும். 3) உறுமும். 4) கதறும்.

10. எயிட்ஸ் நோயினால் ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த மக்களே அதிக பாதிப்பிற்கு உள்ளா கின்றனர். எயிட்ஸ் ஏனபதற்கு வழங்கப்படும் தமிழ்ச்சொல்,
1) ஏமக்குறைவு நோய். 2) புற்று நோய்.
3) மாரடைப்பு. 4) நீரிழிவு.

11. உழை, நவ்வி, கலை என்பன குறிக்கும் சொல்,
1) மான். 2) முயறசி. 3) நாடகம். 4) யானை.

12. கணிதத்தில் நிறுவப்படத்தக்க விதிப்புரை என்ற அருஞ்சொற்றொடரினால் குறிக்கப் படுவது,
1) வரவு. 2) செலவு. 3) தேற்றம். 4) நிதியம்.

13. துறவிகள் வசிக்கும் இடம்,
1) காவற்காடு. 2) ஆச்சிரமம். 3) செய்குன்று. 4) அந்தப்புரம்.

14. உலாந்தா என்ற சொல் பின்வருவனவற்றுள் எம்மொழிச் சொல்,
1) வடசொல். 2) ஒல்லாந்து. 3) பாரசீகம். 4) பிரஞ்சு.

15. பசியுடன் வந்த கண்ணனுக்கு உண்பதற்கு சோத்துப் பானையில் சோறு இல்லை. சோத் துப்பானை எனபதன் பேசசுவழக்குச் சொல்லின் எழுத்து வடிவம்,
1) சோற்றுப்பானை. 2) சோததுப்பானை.
3) சோறறுபானை. 4) சோததுபானை.

* **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

16. இராவணன் படைகள் போர்க்களத்தில் பஞ்சாய்ப் பறந்தன. இங்கு பஞ்சாய்பறத்தல் என்ற மரபுத்தொடர் தரும் கருத்து,
1) தொலைந்து போதல். 2) செயலற்றுப் போதல்.
3) நிலைகுலைந்திருத்தல். 4) கைவிடல்.

17. கங்கணங்கட்டுதல் என்ற மரபுத்தொடருக்குச் சமனான பிறிதொரு மரபுத்தொடர்,
1) கசகரணம் போடுதல். 2) கட்சி கட்டுதல்.
3) கண்ணோடுதல். 4) கைதவறுதல்.

18. சிறுவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள்'' ஆடிப்பாடி என்பது,
1) இணைமொழி. 2) இரட்டைமொழி.
3) அடுக்குத் தொடர். 4) அடுக்கிடுக்குத்தொடர்.

19. ''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'' என்ற பழமொழி தரும் கருத்து,
1) அடம்பன் கொடி வலிமையானது.
2) ஒற்றுமை வலிமை தரும் என்பது உலக உண்மை.
3) அடம்பன் கொடி ஒன்றுசேர்ந்தால் பயன் அதிகம்.
4) ஒருவரின் தோற்றத்தை வைத்து அவரின் திறமையை மதிப்பிடலாம்.

20. உத்தியோகத்தில் இருந்துகொண்டு வியாபாரத்துறையிலும் ஈடுபட்ட அவன் இடர் பட்டான் எனபதை விளக்கப் பயன்படும் உவமைத்தொடர்,
1) ஆலையிலே அகப்பட்ட கரும்பு போல.
2) இரு தோணியில் கால் வைததது போல.
3) இனம் பிரிந்த மான் போல.
4) எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விட்டது போல.

21. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் அல்லாதது,
1) வானொலி. 2) எறிகல். 3) நீரேரி. 4) கவிதை.

22. மாணவர்கள் பரீட்சைக்காக இராப்பகலாக கல்வி கற்றனர். இராப்பகல் என்பது,
1) பண்புத்தொகை. 2) உவமைத்தொகை.
3) உம்மைத்தொகை. 4) வினைத்தொகை.

23. பின்வருவனவற்றுள் விளித்தொடருக்கு உதாரணமாக அமைவது,
1) கவிதா வந்தாள். 2) பெயர் என்ன?
3) சீதா வா! 4) பாம்பு! பாம்பு!

24. ''கடிக்ண பதிவர அருளினன் மிகுகொடை'' இவ்வடியில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்,
1) பதி. 2) கடி. 3) கொடை. 4) அருளினன்.

25. அவள் பாடியதை நான் கேட்டு இரசித்தேன். பாடியதை என்பது,
1) தொழிற்பெயர். 2) வினைப்பெயர்.
3) பெயரெச்சம். 4) வினையெச்சம்.

26. இலங்கை நாடு எமது தேசமாகும். இங்கு எமது என்பது,
1) ஆறாம் வேற்றுமை. 2) இரண்டாம் வேற்றுமை.
3) ஐந்தாம் வேற்றுமை. 4) ஏழாம் வேற்றுமை.

27. தேர்ச்சில் என்பது,
1) கெடுதல் விகாரம். 2) திரிதல் விகாரம்.
3) இயல்புப்புணர்ச்சி. 4) தோன்றல் விகாரம்.

28. பின்வருவனவற்றுள் வியங்கோள் விகுதிகளைக் கொண்டது,
1) தல், அது, மை, தை. 2) க, இய, இயர், அட்டும்.
3) உம், ஏ, ஓ, தான். 4) மை, சி, வு, அல.

29. ஒரு பாடல் அடிகளின் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது,
1) சிலேடை. 2) இடைச்சொல். 3) எதுகை. 4) மோனை.

30. கால் கழுவி வருதல் என்பது,
1) இடக்கரடக்கல். 2) மங்கலம். 3) மரூஉ. 4) குழுக்குறி

* **பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.**

31. மாணவர்கள் கூட்டம் கூட்டமாக ........................................
1) சென்றன. 2) சென்றார். 3) சென்றனர். 4) சென்றது.

32. அவன் என்னிடம் வந்தாலன்றி நான் பணம் ........................................
1) கொடுத்தேன். 2) கொடுக்கவில்லை.
3) கொடேன். 4) கொடுப்பதன்று.

33. மேசைகள் வரிசை வரிசையாக ........................................
1) அடுக்கப்பட்டன. 2) அடுக்கப்பட்டது.
3) அடுக்கினர். 4) அடுக்குவர்.

34. ஆண்மகனோ, பெண்மகளோ அங்கே ........................................
1) தோன்றுகின்றனர். 2) தோன்றுகின்றவர்.
3) தோன்றுவர். 4) தோன்றினர்.

35. ஒரு நாள் உணவைத்தவிர வேறு எதனையும் நான் ........................................
1) கொடுப்பார்கள். 2) கொடுத்தனர்.
3) கொடுக்கமாட்டேன். 4) கொடுத்தேன்.

36. பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொற்களின் வரிசை எது?
1) அம்பலம், ஆபரணம், நிலையம், சாகரம்.
2) இட்சை, வாஞ்சை, வஞ்சை, தஞ்சை.
3) உபகாரம், வஞ்சகம், இருதயம், விடபம்.
4) சிநேகம், உணர்வு, இனபம, சுத்தம்.

* **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்பு வதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.**

37. இலங்கையில் ஒவ்வோர் ஆண்டும் குடிசன ........................................ செய்யப்படுகிறது.
1) தொகை மதிப்பு. 2) கணக்கீடு.
3) பரிந்துரை. 4) வரவு - செலவு.

38. மாணவரின் கல்விப்பெறுபேற்று உயர்வுக்கு பெற்றோரின் ........................................ இன்றி யமையாததாகும்.
1) கூட்டுறவு. 2) வகிபங்கு. 3) நன்மதிப்பு. 4) பணவுதவி.

39. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன ........................................ என அழைக்கப்படும்.
1) ஐம்பூதம். 2) ஐம்பொறி. 3) ஐம்பால். 4) ஐம்புலன்.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்புமுறைகளைத் தெரிவுசெய்க.
அ - அவை மீள் ஆக்கக்கற்பனை, ஆக்கக்கற்பனை எனபனவாகும்.
ஆ - இலக்கியம், நுண்கலை, அறிவியல் போன்ற யாவும் ஆக்கக் கற்பனைகளின் விளைவுகளேயாம்.
இ - முன்னர் நாம் அனுபவித்த நிகழ்ச்சி ஒன்றினை மீண்டும் நமது மனக்கண் கொண்டு நோக்குதல் மீள ஆக்கக் கற்பனையாகும்.
ஈ - கற்பனை இரண்டு வகைப்படும்.
உ - ஆனால், பழைய அனுபவங்களின் பிம்பங்களைப் புதிய முறையில் நாம் தொகுத்து அமைப்போமாயின் அது ஆக்கக் கற்பனையாகும்.
1) ஈ, அ, உ, ஆ, இ 2) ஈ, அ, இ, உ, ஆ
3) ஆ, ஈ, அ, இ, உ 4) ஆ, ஈ, இ, அ, உ

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II 22-T-II

* **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. சுருக்கமான விடை தருக.
01. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
''உழைத்துழைத் துண்ணாமற சேமித்து''
02. ''பசித்தோருக்கு உணவு கொடு'' இவ்வடியில் காணப்படும் எழுவாய், பயனிலை களைக் குறிப்பிடுக.
03. ''இளவட்ட பொண்டுகளா எலே பொறுக்க வந்திடுங்க'' இவ்வடியில் காணப்படும் பேச்சுவழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி எழுதுக.
04. ''விரைந்துசெல்லும் வண்டிகளால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.'' இவ்வாக்கியத் தில் இடம்பெற்றுள்ள எச் வினையை இனங்கண்டு அவை எவ்வகை எச்சவினை எனக் குறிப்பிடுக.
05. அமைச்சரே அதில் என்ன தவறு இதுவரை யாரும் என்னிடம் கேட்டு நான் இல்லை என்று சொன்னதில்லை. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.
06. பந்தி ஒன்றை அமைக்கும்போது நீர் பின்பற்றும் வழிமுறைகள் இரண்டைக் குறிப் பிடுக.
07. தொழில்முறைக் கடிதங்களை வகைப்படுத்திக் காட்டுக.
08. இரை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங் களில் எழுதுக.
09. விளம்பரம் ஒன்றை எழுதும்போது கருத்திற் கொள்ளவேண்டிய பண்புகள் ஐந்தினை எழுதுக.
10. அயோத்தி மாநகரில் கட்டப்பட்டிருந்த கொடிகள் இராமனை வாருங்கள் வாருங்கள் என வரவேற்பன போல் காற்றுக்கு அசைந்தன. இவ்வாக்கியத்திலுள்ள அணியை விளக்குக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றை தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.
அ. அறிவியல் சாதனங்களையும் தொழில்நுட்பத்திறன்களையும் மனிதன் வளர்த்து மகிழ்ச்சியுடன் வாழும் யுகம் இது. அதேநேரம் இயற்கைச் செல்வங்களின் அழிவு, ஆற்றல் பற்றாக்குறை, நாம் சுவாசிக்கும் வாயுவின் தூய்மையற்ற தன்மை, பருகும் நீரில் பல்வேறு நச்சுப்பொருட்கள் கலந்திருத்தல் என்பவற்றால் மனித வாழ்க்கையே நரகமாகி வருகிறது. அறிவியல் மாற்றங்களால் ஏற்படும் சூழல் பாதிப்புகளுக்குக் காரணகர்த்தாவே மனிதன்தான் என்ற கருத்துப் புலப்படும் வகையில் ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக.
ஆ. நகர வாழ்வுடன் கிராம வாழ்வினை ஒப்பிடும்போது கிராம வாழ்வு வாழ்க்கை நடத்த வசதிகளாகவும், இயற்கையோடு ஒட்டிய அமைதியான வாழ்க்கையையும், ஒற்று மையான மக்களையும், நெருக்கமில்லாத வீடமைப்புக்களையும், சுத்தமான சூழலையும் கொண்டமைந்தது உண்மை விடயம் என்ற கருத்தை முன்வைத்து நீர் நிகழ்த்தும் விவாதம்.
இ. தற்போதைய பாடசாலைக் கல்வி மாணவருக்கு வலிமையானது என்ற கருத்துடைய ஒருவருக்கும் பாடசாலைக் கல்வி மாணவருக்கு வலி என்ற கருத்துடைய ஒரு வருக்கும் இடையே நடைபெறும் ஓர் உரையாடல்.
ஈ. செழித்தோங்கும் பெரிய வணிக நிலையமொன்றின் தலைவராயிருக்கின்ற தந்தை ஒருவர் தம் மகனையும் அத்துறையிலேயே ஈடுபடுத்த விரும்புகிறார். மகனோ இசைக் கலைஞனாக வர விரும்புகின்றான். தந்தைக்கும் மகனுக்கும் உள்ள முரண் பாட்டை வெளிக்கொணரும் வகையிலே ஒரு சிறுகதை எழுதுக.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடிய வாறு எழுதுக. சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.

செய்திகள் பரிமாற்றம் செய்துகொள்ளப்படுவதை தொடர்பாடல் எனலாம். பண்டையகாலத்திலிருந்தே தொடர்பாடல் இடம்பெற்றுவந்துள்ளது. அன்று தொடர்பாடலுக்கு எளிய முறைகள் பயன்படுத்தப்பட்டன. தூதுவனை நேரில் அனுப்பியோ பறை அடிததோ செய்திப்பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது. இன்றைய நவீன விஞ்ஞான உலகில் தொலைத் தொடர்பு பரந்தளவில் விரிவடைந்துள்ளது. தொலைத்தொடர்பு ஆரம்பம் டெலிகிராம் எனும் தந்தி முறையாகும். அதன் அடுத்த படியாக டெலிபோன் எனும் தொலைபேசி அறிமுகப் படுத்தப்பட்டது. அத்தோடு தூர இடங்களில் தொலைபன்னி மூலம் செய்திகள் பதியப் பட்டன. இன்று தொலை அச்சு, தொலைமடல் என்பன பாவனையில் உள்ளன. தொலை மடல் மிகத்துரிதமானதும் நவீனமானதுமான செய்திப்பரிமாற்றச்சாதனம் ஆகும். தந்தி, தொலைபேசி, தொலைமடல் ஆகியவற்றின் செய்திகளைக் கொண்டு செல்ல கம்பி களின் பின்னல் உலகெங்கிலும் பரவியிருக்கின்றது. மேலும் தந்திக்கம்பிகளின் மூலம் செய்திப்பரிமாற்றம் இடம்பெற்றிருந்த நிலைமாறி அலைகள் மூலம் செய்திகளைப் பரி மாறும் நிலை உருவாகியுள்ளன. இதற்கு செல்லிடப்பேசி சிறந்த உதாரணம் ஆகும். மேலும் தொலைநகல் மூலம் இடம்பெறும் தொடர்பாடல் முறை பரவலாக காணப்படு கின்றது. இன்று இணையச்செயற்பாடுகளிலும் கணினியும் இன்றியமையாததாகிவிட்டது. தொடர்பாடல் துறையில் கடிதத்துக்கு அடுத்ததாகச் சாதாரண பொதுமக்களால் இன்று பெற்றுக்கொள்ளக்கூடிய தொடர்பாடல் சாதனமாக தொலைபேசி காணப்படுகின்றது.

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சரம்

## வீதிகள் துப்புரவு

சுழிபுரம், செப்.29

பண்ணாகம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீதிகள் அப்பகுதி மக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. தினமும் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை அப்பிரதேச கிராமஅலுவலர் மேற்பார்வையின்கீழ் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை பண்ணாகம் - பண்டத்தரிப்பு வீதி- பல்லசுட்டி, பண்ணாகம், பனிப்புலம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களால் கடந்தவாரம் துப்புரவு செய்யப்பட்டது. (201-28)

## இலகு வேலைத்திட்டத்தின்கீழ் சிரமதானப் பணிகள்

கோப்பாய், செப்.29

வலி. கிழக்குப் பிரதேசத்தில் 'வேலைக்கு உணவு' இலகு வேலைத்திட்டத்தின்கீழ் நீர்வடிகால்கள், வீதிஓரப்பற்றைகள், புற்கள் ஆகியவற்றை வெட்டித் துப்புரவு செய்யும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

இதனால் சூழல் துப்புரவு பெறுவதுடன் எதிர்வரும் மழைகாலத்தில் நீர் வடிந்தோடுவது இலகுவாக்கப்படுவது நீர்தேங்கி நிற்கும் அபாயம் நீங்கி வருவதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (201- 72)

## அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், செப்.29

சாரதிய அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் முறையே 5ஆயிரம்,3ஆயிரம் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்குகள் கடந்த 22 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஒருவருக்கு 5ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 3ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டு, அபராதத்தொகை செலுத்தத் தவறின் முறையே 5மாதம், 3மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (201- 207)

## நூல் நிலையம் இடமாற்றம்

சுழிபுரம், செப்.29

சுழிபுரம் பிரதேசசபை உப அலுவலகத்தால் நடத்தப்படும் நூல்நிலைய வாசிகசாலை தற்போது உப அலுவலகம் இயங்கி வரும் கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

மேற்படி உபஅலுவலகம் தற்போது வாசிகசாலை இயங்கி வரும் கட்டடத்தில் செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி. மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் கடந்தவாரம் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

தற்போது நூல் நிலையம் இயங்கி வரும் கட்டடத்தில் போதிய இடவசதியில்லை என வாசகர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்து மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201- 28)

## மிதிவெடி அபாய விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கோப்பாய், செப்.29

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்தவார இறுதிப்பகுதியில் சர்வோதய நிறுவன அனுசரணையுடன் நடைபெற்றது. 45 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர்.

பாடசாலைப் பிரதேசத்திற்கு அண்மையாக இம்மாத முற்பகுதியில் மாணவர்கள் இருவர் வெடிபொருளொன்றை விளையாட்டுப் பொருளெனக் கையாள முயற்சித்ததனால் அது வெடித்ததால் பரிதாபகரமாக மாணவன் உயிரிழக்க நேர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

மிதிவெடி அபாய விழிப்புணர்வுக் கருத்தரங்கை தொடர்ந்து அப் பகுதியில் வெடிபொருள்கள் சில மாணவர்களால் இனங்காணப்பட்டு சர்வோதய அமைப்பின் அனுசரணையுடன் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201-72)

## ஆலய பெருந்திருவிழா படங்கள் இணையத்தளத்தில் பார்வையிடலாம்

கோப்பாய், செப்.29

அண்மையில் இடம்பெற்ற நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் பெருந்திருவிழா தொடர்பான படங்கள் நீர்வேலி இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

www.neervely என்ற இணைய முகவரியில் இவற்றைப் பார்வையிடலாம் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். பெருந்திருவிழா தொடர்பாக சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் எழுதிய சிறப்புக் கட்டுரையும் மேற்படி இணையத்தில் வெளிவந்துள்ளது. (201-72)

## கோடா வைத்திருந்தவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.29

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த 22ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 10 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (201-207)

## துரித கதியில் விவசாய நடவடிக்கை

கோப்பாய், செப்.29

வலி.கிழக்குப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த மழையினால் விவசாய நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

கடந்த பல வருடங்களாக செய்கை பண்ணப்படாத தரிசு நிலங்களும் பண்படுத்தப்பட்டு விவசாய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்விவசாய நடவடிக்கைகள் காரணமாக தொழிலாளர்களுக்கும் பற்றாக்குறை நிலவி வருகிறது.

எனவே தொழிலாளர்களை தேடித்திரியும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. தற்போது விவசாய நடவடிக்கைகள் பலபகுதிகளில் மின்னொளியில் இரவு 8 மணி வரை நடைபெற்று வருவதையும் இப்பிரதேசத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. (201- 72)

## நீர்வேலி ப.நோ.கூ. சங்க கூட்டுறவு நகர் திறப்பு

கோப்பாய், செப்.29

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் "கூட்டுறவு நகர்" நீர்வேலி குறுக்கு றோட்டில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது.

மேற்படி கூட்டுறவுச்சங்கத்தின் உரும்பிராய், ஊரெழு, இருபாலை ஆகிய கிளைகளுடன் நான்கு "கூட்டுறவு நகர்" இயங்கி வருகின்றன.

தற்போது இக்கடைகளின் பணிநேரம் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வார நாள்களில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201- 272)

## வீதிகளுக்கு மின் விளக்கு பொருத்துமாறு மக்கள் கோரிக்கை

கோப்பாய், செப்.29

வலி.கிழக்குப் பிரதேசத்தின் பல வீதிகள் மின்விளக்கு இன்மையால் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. தற்போதைய சூழ்நிலையால் மக்களின் நடமாட்டம் முன்னிரவு வரை இடம்பெறுவதால் பல சிரமங்கள் ஏற்படுவதாகவும் விவசாய நடவடிக்கைகளும் முன்னிரவு வேளையில் நடைபெறுவதால் விவசாயிகளும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து தற்போதைய அபிவிருத்திச் சூழலில் மின்விளக்குகளைப் பொருத்தி ஒளிர்வை ஏற்படுத்தி உதவுமாறு பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த வேளையில் சில பகுதிகளில் பொதுமக்கள் தாமாகவே தமது செலவில் வீதி விளக்குகளைப் பொருத்தி[illegible] குறிப்பிடத்தக்கது. (201-72)

# வடக்கின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்த ரூ. 235 கோடி செலவில் சீன இயந்திரங்கள்

கொழும்பு, செப். 29

வடக்கின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் நோக்குடன் கட்டட நிர்மாணப் பணிகள், வீதி அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளின் கட்டுமானப்பணிகளைமேற்கொள்ளவென 235 கோடி 3 லட்சம் ரூபா செலவில் 101 புல்டோஸர்கள், பெக்கோ இயந்திரங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

வடக்கின் அபிவிருத்தி மீள்குடியேற்ற நடவடிக்கைக்கான விசேட ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ எம்.பி. சனியன்று மேற்படி இயந்திரங்களை பொறுப்பேற்றார்.

கொழும்பு காலி முகத்திடலில் நடைபெற்ற கையளிப்பு வைபவத்தின்போது 101 இயந்திரங்களும் பொறுப்பேற்கப்பட்டன.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுள் 22 டோஸர்கள், 37 மோட்டர் கிறேடர்கள், 9 ரோலர்கள், 14 எக்ஸ்கிலவேட்டர்கள், 19 வீல் லோடர்கள் என்பன அடங்குகின்றன.

மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக வீதிகளை புனரமைப்பதுடன் உட்கட்டமைப்பு வசதிகள் உடனடியாக மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரியவருகிறது. (சி)

# கவிஞர் இ.முருகையனின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.29

கவிஞர் கலாநிதி இ.முருகையனின் நினைவுகூரல் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் தொடக்கவுரையை யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமியும் கவிஞரின் நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜாவும் நிகழ்த்தினர்.

கவிஞர் இ.முருகையனின் படைப்புகளைப் பற்றி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டு தலைமையில் கருத்தரங்கும் நடைபெற்றது.

இன்றைய உலகில் 'இலக்கியம்' என்னும் நூல் பற்றி நாவற்குழி ம.வி. ஆசிரியர் க.க.ஈஸ்வரனும் 'ஆதி பகவான்' என்னும் நூல் பற்றி தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) க. சின்னத்துரையும் 'நெடும் பகல்' என்னும் நூல் பற்றி சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி க.சிறிதரனும், 'ஒரு சில விதி செய்வோம்' என்னும் நூல் பற்றி யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் க.தர்மராசாவும் 'வெறியாட்டு' என்னும் நூல்பற்றி கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.ஆசிரியர் பொ. வல்லிபுரநாதனும் உரையாற்றினர்.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் 'காட்டு வழியில் பயணம்' என்னும் நூல் பற்றி கவியரங்கம் இடம்பெற்றது.

கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை அதிபர் ச.லலீசன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் வே.உதயகுமார் , சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி இ.ஜீவேந்திரா, யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி. வேல்நம்பி, கவிஞர் த.நாகேஸ்வரன் ஆகியோர் கவியரங்கில் பங்குபற்றினர். (203-207)

## மரக்கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம். செப்.29

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு ஒரு தொகுதி மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

யாழ். மரக் கூட்டுத்தாபனம் இந்த மரக்கன்றுகளை வழங்கியதாக இல்ல அத்தியட்சகர் என். இராசலிங்கம் தெரிவித்தார்.

மறைந்த முதியோர்கள் ஞாபகமாக இல்ல வளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (201-224)

# கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.29

கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் பட்டப்பகல் வேளைகளிலும் திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

சுவாமியார் வீதிப் பகுதியிலேயே திருடர்களின் நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதாகப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் பொதுமக்கள் குடியிருப்புக் காணிகளில் உள்ள பயன்தரும் மரங்களும் இவர்களால் தறித்து எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுச் சொந்தக்காரர்கள் வீடுகளில் இல்லாத சமயங்களில் திருட்டுக் கோஷ்டியினர் வீடுகளுக்குள் புகுந்து அங்குள்ள பொருள்களையும் களவாடிச் செல்கின்றனர். என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (203- 224)



வட்டுக்கோட்டை சிந்துபுரத்தில் அமரர்களான வ.வைரமுத்து, வ.முருகேசு, வ.வடிவேலு ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நிழல்குடை இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய செயலாற்று முகாமையாளர் செ.கமலநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

சைவப்புலவர் அ.து.சடாட்சரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் துணைப்பொறுப்பாளர் பொ.தேவராசா, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எஸ்.தர்[illegible] உத்தியோகத்தர் மஞ்சுள நிசாந்த ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்



## மகரம்
(நட்சத்திரங்கள் : உத்திராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2)

நண்பர்களாலும், விரோதிகளாலும் சகஜமாகப் பழகக்கூடிய பண்பு கொண்ட மகர ராசி அன்பர்களே! கௌரவத்தை விரும்பும் தங்களுக்கு சனி 3 ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்யப்போகிறார். சனி பகவானாகிய இவர் அட்டம ஸ்தானத்தில் இருக்கிறார். பல்வேறு இன்னல்களுக்கு ஆளான உங்களுக்கு சனிபகவானால் என்னென்ன நன்மைகள், தீமைகள், நற்பலன்கள், பரிகாரங்கள் என்று பார்ப்போம்.

அதாவது, கடந்த 10.09.2009 இல் சனி பகவான் மாறுதலாகி 9 ஆம் வீட்டிற்குச் செல்வதால் கடந்த ஆண்டு இருந்துவந்த இன்னல்கள், இடையூறுகள், சோதனைகள், வேதனைகள் இவையெல்லாம் படிப்படியாகக் குறைந்து வரும். வராத பாக்கிப் பணம் வசூலாகும். குடும்பத்தில் குதூகலம் பிறக்கும். தன்னம்பிக்கை வளரும்; தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் இருக்கும். குருபகவான் டிசம்பர் 15 ஆம் திகதி முதல் 2 ஆம் இடத்திற்கு வருகிறார். இதனால் நல்ல மாற்றம் வரும். அதுமட்டுமல்லாமல் குரு பகவான் 6, 8, 10 ஆம் இடங்களைப் பார்க்கிறார். சனியின் வக்ரகாலமான 10.01.2010 முதல் 08.05.2010 வரை சற்று கவனம் தேவை. உத்தியோகத்திலிருப்பவர்கள் கவனமுடன் செயற்பட வேண்டும். கணவன், மனைவி உறவு சுமுகமாக இருக்கும்.

ராகு பகவான் மே 11.2011, 12 இலும், கேது 6 இலும், அதற்குப் பின் ராகு 11 இலும், கேது 5 இலும் சஞ்சாரம் செய்கிறார்கள். இந்த நேரத்தில் சற்று தடுமாற்றமான மன நிலை உருவாகலாம். 1, 7 இல் சஞ்சரிக்கக் கூடிய சர்பகிரகங்கள் 17.11.2009 முதல் 06.06.2011 வரை ராகுவும், கேதுவும் மேற்படி சஞ்சாரம் செய்யவுள்ளார். நெருக்கடிகள் விலகி கௌரவமான சூழ்நிலை உருவாகும். குரு பகவான் 20.12.2009 முதல் 01.05.2010 வரை தனஸ்தானத்தில் இருப்பதால் உங்களுக்கு ஒப்பந்தங்கள், ஏஜென்ஸி, பத்திரிகை, எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அரசியல், மாணவர்கள் இவர்களுக்கெல்லாம் நட்சத்திர பலன்களும், சனிப்பெயர்ச்சியால் ஏற்படும் நன்மை, தீமை என்ன என்பதை விவரமாகப் பார்க்கலாம் வாருங்கள்!

**குடும்பம் :** குடும்பத்தில் குதூகலம் பிறக்கும் கணவன், மனைவி உறவு பலப்படும். பெண்களால் நன்மை வந்து சேரும். உடன் பிறந்தவர்களால் நன்மை உண்டாகும். வெளியூர் தகவல்கள் மனதிற்கு புதுத் தெம்பினைத் தரும். உடல் நிலை நல்ல நிலை பெறும். மருத்துவ செலவுகள் குறையும். தன வரவு இருக்கும். கடன்கள் தீரும். வரவேண்டிய பாக்கிகள், குறைந்தபட்சம் வசூலாகும். புதிய திருப்பங்கள் இனிவரும் நாட்களில் அமையும். அசையும், அசையாச் சொத்துக்கள் மூலம் யோகம் வரும். பொருளாதார நிலையில் இருந்த சிக்கல்கள் தீர்ந்து லாபகரமான செய்திவரும். வெளியூர் பயணங்களால் திருப்திகரமான அனுகூலம் இருக்கும். குழந்தைகளின் தேக ஆரோக்கியம் நலம்பெறும். தாய், தந்தை வழியே இருந்து பூர்வீக சொத்துகள் ஒரு நிலைக்கு வந்து முடிவு தெரியும். கொடுக்கல், வாங்கல் மன அமைதி தரும் எதிர்பார்த்த தனவரவு மனதை நிரப்பும். மனை, நிலம், வாகனம் வாங்கிட யோகமான நாள்களாகும். பெரிய மனிதர்களின் ஆதரவு மகிழ்ச்சி தரும். சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும்.

**உத்தியோகம் :** அரசாங்க ஊழியர்களுக்கு நல்ல விருந்து. புதிய வேலை ஆள்கள் தேர்ந்தெடுப்பார்கள். இளைஞர்களுக்கு மவுசு. புதியவர்களின் வருகையால் அரசாங்க ஊழியர்களுக்கு மன அழுத்தம் இருக்கத்தான் செய்யும். மேலதிகாரிகளின் பாராட்டும் மதிப்பும் பெறுவீர்கள். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும்.

புதிய பரிணாமங்கள் பரிமாறிக் கொள்ளப்படும். ஒருசிலருக்கு பாராட்டுக் கிடைக்கும். அரசு சம்பந்தப்பட்ட விடயங்களை பத்திரமாக பார்த்துக்கொள்ளவும். இடமாற்றத்தின் போது ஒருசிலருக்கு இன்னல்கள் மனதைக் காயப்படுத்தும். பெண்களால் அலுவலகங்களில் சிக்கல் உருவாகி பின் சரிசெய்யப்படும். கொடுக்கல், வாங்கல் சுமாரான லாபத்தைக் கொடுக்கும். உயர்பதவி ஒருசிலருக்கு வெளிநாட்டுக்கு மாற்றம் விருப்பப்படி கிடைக்கும்.

**பணியாளர்கள்:** நீண்ட நாள்களாக புதிய நவீன கருவிகள் கொண்டு தொழில் நடத்த முயன்றவர்களுக்கு பலன் தரும். நல்ல முன்னேற்றமான காலமாகும். கடன்கள் தீரும். வெளியூர் சென்றவர்கள் நல்ல தகவலோடு வருவார்கள்.



## கும்பம்
(நட்சத்திரங்கள் : அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3)

கும்பராசி அன்பர்களின் கவனத்திற்கு - பலதரப்பட்ட மனிதர்களின் எண்ணமெல்லாம் உயர்வாக பறந்து திரிவது தான். பலர் கற்பனையில் மிதந்து செல்வர். ஒருசிலர் வாழ்ந்தது போதும் என்று, சாய்ந்து உட் கார்ந்து விடுவர். மனம்போன போக்கில் மனிதர் செல்வது வாழ்க்கையாகி விட்டது. எந்த ஒரு காரியத்திலும் ஆராய்ந்து செயற்படும் ஆற்றல் குணம் கொண்ட கும்பராசி அன்பர்களுக்கு, அஷ்டம சனியால் வருகிற பிரச்சினைகள் சங்கிலித் தொடராக இருக்கும். மனம் சஞ்சலப்படும். கொடுக்கல், வாங்கல் மனதிற்கு கஷ்டத்தைக் கொடுக்கும். இந்த கும்பராசிக்காரர்களுக்கு சனி பகவான் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்கிறார். குருபகவான் டிசம்பர் 15, 2009 முதல் ஜென்மத்தில் வாசம் செய்கிறார். ராகு 1 ஆம் இடத்தில் இருப்பது நன்மை தான். கேது 5 ஆம் இடத்தில் இருப்பதால், பூர்வீகம், குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள். ஆனால், குருவின் பார்வை இருப்பதால் எளிதில் விலகி விடும்.

உங்கள் ராசியாதிபதி சனி பகவான் வருகிற 10.09.2009 முதல் 8 இல் சஞ்சரிக்க உள்ளதால், உங்களுக்கு அட்டம சனி தொடர்கிறது. இதனால் உடலளவு பாதிப்பு இருக்கும். மன அமைதி குறையும். கொடுக்கல், வாங்கல் சீராக தேவையில்லாத நெருக்கடி ஏற்படலாம். பேசும் போது உங்கள் பேச்சைக் குறைத்துக் கொள்வது நலம். உற்றார் உறவினர்கள் உங்கள் மீது வீண்பழி சுமத்துவார்கள். நீண்ட நாட்களாக இருந்துவந்த தாய்வழி சொத்து, வழக்கு ஒரு முடிவுக்கு வரும். கும்ப ராசிக்காரர்களுக்கு அட்டமச் சனியால் வரும் நற்பலன்கள் நன்மை, தீமைகள் என்னவென்று காண்போம் வாருங்கள்...

**குடும்பம்:** குடும்பத்தில் நிம்மதி குறையும். குழந்தைகளால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படும். அதனால் வீட்டில் உள்ளவர்களுக்கு மனஸ்தாபம் ஏற்படும். இந்தக் காலகட்டத்தில் சிக்கனம் தேவைப்படுகிறது. உடல் நிலையில் சிறு உபாதைகளால் மருத்துவ செலவு ஏற்படும். தனவரவு சுமாராக இருக்கும். பெண்களுக்கு வேலையில் மன உளைச்சல் உண்டாகும். குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்கள் தீரும். கொடுக்கல் வாங்கலில் திருப்திகரமாக இருக்காது. வீட்டில் இருக்கும் பெண்களுக்கு சுயதொழில் கை கொடுக்கும். கடன்கள் அப்படியே இருக்கும். வரவுக்கும், செலவுக் கும் சரியா இருக்கும் உறவினர்களின் வரு கையால் செலவுகள் கூடும். பெண்களுக்கு உடல் உபாதை காரணமாக மருத்துவச் செலவு இருக்கும். அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் ஏற்படும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் தடைப்படலாம். குலதெய்வ வழிபாட்டால் ஓரளவுக்கு நன்மை பெறலாம். தற்போது வீடு, நிலம், வாகனம், வாங்குவதைத் தவிர்க்கவும்.

**உத்தியோகம்:** தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் அன்பர்களுக்கு பெரிய ஏமாற்றமே மிஞ்சும். கூடுதலான வேலைவாய்ப்பு தடைப்படும். ஒருசிலருக்கு நெடுந்தூர பயணத்தால் லாபகரமாக இருக்கும். அரசாங்க ஊழியர்களுக்கு டென்ஷன் அதிகமாகும். உடல் நலக் குறைவால் அடிக்கடி விடுப்பு எடுக்கும்படி ஆகும். ஒருசிலருக்கு [illegible] தநிலை உருவாகும். வேலைக்கு வருகின்ற பெண்கள் இடமாற்றத்தினால் கோபப்படுவர். தனக்கென ஒதுக்கப்பட்ட வாய்ப்பு கை நழுவும் போது மனம் சங்கடப்படும். அரசாங்க வங்கியில் வழங்கும் கடன் சம்பந்தப்பட்ட பண வரவுகள் காலதாமதம் ஆகும்.

**தொழில்:** எதிர்பார்த்தபடி தொழிலில், வியாபாரத்தில் லாபம் குறைவானதாக இருக்கும். முதலுக்கு மோசமில்லாமல் இருக்கும். புதிய தொழில் தொடங்குவோர் வருகிற 08.05.2011 வரை பொறுத்திருக்கவும். கையிருப்பு உள்ளவரை வைத்து தொழிலை நடத்தி வரலாம். புதிய கடைத் திறப்பு இதெல்லாம் கூடாது. வியாபார ரீதியாக வெளியூர், வெளிநாடு செல்பவர்கள் தற்சமயம் செல்லாமல் இருப்பது உத்தமம். அஷ்டம சனி இருப்பதால் நமக்கு எதுவும் சாதகமாக அமையாது. குரு பகவான் அனுசரணையில் காலம் தள்ளலாம். எதிர்பார்த்த பணவரவு தடைப்படும். உடனிருக்கும் கூட்டாளிகளால் சாதகமான பலன்களை எதிர்பார்க்கலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கடினமான சூழ்நிலை நிலவும். போட்டியும், பொறாமையும் மாறிமாறி தலைதூக்கும். முன் சேமிப்புப் பணமே தற்சமயம் கைகொடுக்கும்.



## மீனம்
(நட்சத்திரங்கள் : பூரட்டாதி 4 உத்திரட்டாதி, ரேவதி)

தனக்கென ஓர் இடத்தைப்பிடித்துக் கொள்ள ஒவ்வொருவரும் முன்னணியில் நிற்பார்கள். எவ்வளவு துன்பங்கள் வந்தாலும், துடைத்துவிட்டு, புன்னகையை இதழில் காட்டி மகிழ்வர். அப்படி பலர் இன்னமும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள் . அப்படிப்பட்ட குறிக்கோளும், சமயத்திற்கு தகுந்தாற்போல், வளைந்து கொடுத்து வாழக்கூடிய பண்புகொண்ட மீன ராசி நேயர்களே! மகத்தான 12 ஆவது ராசியை ஒருபோதும் அழிவில்லாமல் தக்கவைத்துக் கொண்டிருக்கும் உமக்கு வருகிற சனிப் பெயர்ச்சியில் உமது பங்கு என்னவென்று பார்ப்போம். உங்கள் ராசிக்கு சமசப்தம ஸ்தானங்களை 7 ஆம் வீட்டில் சனிபகவான் வருகிற 10.09.2009 முதல் சஞ்சாரம் செய்ய உள்ளார். முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நலம்.

உற்றார் உறவினர்களிடம் ஜாக்கிரதையாகப் பழகி வரவேண்டும். உங்களுக்கு அசையா சொத்தில் சுப செலவுகள் இருக்கும். மே 16.05.2011 முதல் ராகு 10 இலும், கேது 4 இலும் அதற் குப்பிறகு ராகு 9 இலும், கேது 3 இலும் மாறுவார்கள். வெற்றிவாய்ப்புகள் குறைவு என்பதால் போட்டி பந்தயங்களைக் குறைத்துக் கொள்வது நலம். உடன் பிறந்தவர்களால் உதவிக்கரம் இருக்கும் என்று சொல்லிட முடியாது. உங்கள் ராசியாதிபதிக்கு பின்னால் வருகிற 19.12.2009 முடிய லாபஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வது 08.05.2011 முதல் 17.05.2012 வரை தனஸ்தானத்தில் சஞ்சாரம் செய்ய இருப்பதால் பெரிய அளவில் அனுகூலத்தை உருவாக்கும் தன்மையாகும். ஏற்ற மிகு பலன்களைப் பெறலாம். ஒரு சிலருக்கு புதிய வண்டி, வாகனங்கள் வாங்கலாம். வியாபாரம் தொழிலில் உள்ளவர்களுக்கு லாபம் கிட்டும். எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் பலமுறை யோசனை செய்துபின் தொடர்ந்தால் பிரச்சினையை சமாளிக் கலாம். ஆகவே இம்முறை 2 ஆண்டுகளில் மீன ராசிக்காரர்களுக்கு சனி பகவான் என்னென்ன நற்பலன்கள் நல்ல மகிமை செய்ய உள்ளார் என்பதைத் தெளிவாகப் பார்க்கலாம் வாருங்கள்...

**குடும்பம் :** குடும்பத்தில் எதிர்பார்த்தபடி அமைதி குறைவுதான். கணவன் - மனைவி உறவில் சல சலப்பு இருந்தாலும், பிரச்சினை இருக்காது. ஒற்றுமை குறையாது. உறவினர்கள் அனுகூலம் உண்டு. பெண்களுக்கு வேலைப் பளு இருக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் மனதுக்கு நிறைவு தரும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நலம். மருத்துவச் செலவுகள் பெரிதாக இருக்காது. பணவரவு கைக்குள் அடங்கி இருக்கும். வெளியாட்களிடம், பார்த்துப் பழகவும். புதியவர்களிடம் மிகுந்த ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. ஒருசிலருக்கு வண்டி, வாகனம் வாய்க்கும் யோகம் உண்டு. தேவையற்ற செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவி, பிள்ளைகள் வழியில் மருத்துவ செலவு உண்டாகும். தேவையற்ற பயணங்களால் உடல் அசதி ஏற்படும். வீடு, நிலம், மனை இவையெல்லாம் பிள்ளையார் சுழி போட்டு வைக்கலாம். புத்திர பாக்கியம் உண்டு. உடன் பிறந்த வர்களின் வருகையால் மனதிற்கு தெம்பளிக்கும். தாய், தந்தை வழியே மருத்துவ செலவுகள் இருந்தாலும் மனதிற்கு வருத்தம் இருக்காது. தனவரவு ஓரளவு கையிருப்பு இருக்கும். வெளியூர் தகவல் மனதைத் திருப்திப்படுத்தும். ஒருசிலர் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவர்.

**உத்தியோகம் :** உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல உயர்வு உண்டு. ஊதிய உயர்வும், பதவி உயர்வும் உண்டு. ஒருசிலர் வெளியூர் சென்று வர வாய்ப்பிருக்கு. உழைப்பு அதிகமாகும். வேலைப்பளு கூறும். அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிகாரிகளால் ஒருசில பிரச்சினைகள் இருந்தாலும் சகித்துக் கொள்ளமுடியும். உடனிருப்பவர்களால் ஓரளவு உதவி உண்டு. பெண்களுக்கு சில பொறுப்புக் கிடைக்கும். ஒருசில பெண்கள், ஒருசில ஆண்களுக்கு அலுவலகத்தில் சில பிரச்சினைகளால் பெரிய அதிகாரிகளிடம் மனக்கசப்பு ஏற்படும். கொடுக்கல், வாங்கல் சுமாராக இருக்கும். வாகனங்கள் புதுப்பிக்கப்படும். லோன், போனஸ், வங்கிக் கடன்கள் இவையெல்லாம் காலதாமதம் ஆனாலும், கைக்கு எட்டும் தூரம்தான். ஒருசிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். ஒரு சிலருக்கு இட மாற்றத்தால் மன உளைச்சலும், அலைச்சலும் இருக்கும். கணவன் - மனைவி இருவருக்கும் ஒரே இடத்தில் வேலை கிடைக்கவும் வாய்ப் பிருக்கும்.

**தொழில்:** இருக்கும் தொழிலை அபிவிருத்தி செய்யலாம் (குறைந்த முதலீட்டில்). ஒருசிலருக்கு புதிய இடம்மாறிட ஏதுவாகும். ஒருசிலருக்கு தொழிலில் நாட்டம் குறையும். கூட்டணியுடன் நடத்தி தொழில், வியாபாரத்தில் அதிக லாபம் எதிர்பார்க்க முடியாது. வருகின்ற சனிப் பெயர்ச்சியால் பாதகம் அவ்வளவு இல்லை. இருந்தாலும், அவைகளுக்கு அர்ச்சனை செய்வது வணங்குவது நன்று. புதிய தொழில் தொடங்குபவருக்கு முன்னேற்றம் குறைவுதான். மைத்துனர்களின் அன்பும், ஆதரவும் உண்டு. உடன்பிறந்தவர்களின் வெளிநாட்டுப் பயணத்தால் அதிக லாபம் அடைய முடியாது. வியாபாரிகள் புதிய முயற்சியில் இறங்கினால் பலன் எதிர்பார்க்கலாம். கொடுக் கல், வாங்கல் சுமாராக இருக்கும். கமிஷன், ஏஜென்ஸி, ஒப்பந்தம், வீட்டு புரோக்கர் போன் றவற்றில் எதிர்பார்ப்பு இருக்காது. ஒருசிலர் இருக்கின்ற இடத்தையே குத்தகை எடுப்பர். அரசு வழியில் வரும் டென்டர் போன்றவற்றில் ஆதாயம் உண்டு. வெளி நாட்டுப் பொருள்களுக்கு மவுசு உண்டு. வெளியூர்ப் பயணம் அவ்வளவு அனுகூலம் தராது. இருப்பதை வைத்துக்கொண்டு கொஞ்சக்காலம் கழிப்பது உத்தமம்.

முருகானந்தா சுவாமி

(முற்றும்)



# 'ஸ்ரீலங்கன்' விமான சேவையும் நஷ்டத்தில் வீழ்ச்சியை நோக்கி

கொழும்பு, செப். 29

'ஸ்ரீலங்கன்' எயர்லைன்ஸ் விமான நிறுவனம் இவ்வருடம் சுமார் ஆயிரம் கோடி ரூபா இழப்பைச் சந்தித்ததைத் தொடர்ந்து அதன் எதிர்காலம் குறித்துக் கேள்வி எழுப் பப்பட்டுள்ளது.

'ஸ்ரீலங்கன்' எயர்லைன்ஸின் கணக்காய்வாளர்களே இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளனர் என அதன் 2009 இற்கான வருடாந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆண்டறிக்கையில் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய கடப்பாட்டுத் தொகை, அதன் சொத்துக்களை விட அதிக மாகியிருப்பதாகக் காணப்படுகின்றது. தற் போது நிறுவனம் செலுத்த வேண்டிய நிலுவை அல்லது கடப்பாட்டுத் தொகை அதன் சொத்தை விடவும் 816 கோடி ரூபா அதிகம் என்று கணக்காய்வு அறிக்கை கூறுகின்றது.

ஒரு வருட காலத்திற்கு முன்னர் இந்த நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்பட்டது.

செலுத்தவேண்டிய கடப்பாட்டு நிலுவையை விட நிறுவனத்தின் சொத்துப் பெறுமதி அப்போது 307 கோடி ரூபா அதிகமாக இருந்தது. அந்த நிலைமை இப்போது தலைகீழாகிவிட்டது. அதாவது 2008 இல் நிறுவனத்துக்குச் சார்பாக இருந்த 307 கோடி ரூபா வருமதி, இந்த ஆண்டில் நிறுவனத்துக்குப் பாதகமாக அது செலுத்த வேண்டிய தொகையாக - சென்மதியாக - 816 கோடி ரூபாவாக மாறியுள்ளது.இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ள கணக்காய்வாளர்கள், மூன்றாம் உலக நாடுகளின் விமானசேவையைப் பொறுத்தவரை இது பாரிய இழப்பு என்றும் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நிதி நெருக்கடி காரணமாகப் பல உலக விமான சேவைகள் கடும் நெருக்கடியை எதிர்கொண்ட போதிலும் இலங்கையின் நிலைமை அவற்றை மிக மோசமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் 1978 இல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா எயர்லைன்ஸின் எதிர்காலம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பொதுவாக விமான நிறுவனங்கள் தமது ஒரு விமானத்துக்கு நூறு சிப்பந்திகள் என்ற அடிப்படையிலேயே பணியாளர் வீதத்தைப் பேணுகின்றன. ஆனால் 'ஸ்ரீலங்கன்' நிறுவனத்தில் ஒரு விமானத்துக்கு நானூறுக்கும் அதிகமானோர் என்ற அடிப்படையில் சிப்பந்திகள் பணியாற்றுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகதிகளை மோசமாக நடத்தி அவர்கள் மத்தியில் நூறு பிரபாகரன்களை உருவாக்குகின்றார் ஜனாதிபதி

## மங்கள சமரவீர விசனம்

கொழும்பு; செப். 29

வவுனியா அகதி முகாம்களில் உள்ள அகதிகளை மிக மோசமாக நடத்தி, அவர்களுக்குள் நூற்றுக்கணக்கான பிரபாகரன்களை ஜனாதிபதி உருவாக்கிக்கொண்டிருக்கின்றார். இந்தப் பிரபாகரன்கள் மீண்டும் பிரிவினைவாதத்தை நாடிச் செல்வதோடு, சிங்களவர்கள் மீதும் பகைமை கொள்வர் என்று மங்கள சமரவீர எம்.பி. நேற்று முன்தினம் கூறினார்.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 'மக்கள் சக்தி' கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்த வருடம் மே மாதம் புலிகள்முற்றாகத் தோற்கடிக்கப்பட்டபோது நாம் அனைவரும் கட்சி பேதமின்றி சந்தோஷமடைந்தோம். நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படும் என்றும், தொழில் வாய்ப்பும் அதிகரிக்கும் என்றும், அபிவிருத்தி ஏற்படும் என்றும் நாம் எதிர்பார்த்திருந்தோம்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த அரசினால் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை. மேலும் அவர்களின் மனங்களில் விரோதத்தைத்தான் விதைக்கின்றது அரசு.

அகதி முகாம்களில் உள்ள அகதிகளை அரசு மிக மோசமாக நடத்துகின்றது. இதனால் அந்த மக்கள் மத்தியில் மீண்டும் நூற்றுக்கணக்கான பிரபாகரன்கள் உருவாக்கப்படுகின்றனர். ஜனாதிபதிதான் இதைச் செய்துகொண்டிருக்கின்றார்.

அந்த பிரபாகரன்கள் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தை மாத்திரமன்றி, முழு சிங்கள மக்களையும் விரோதிகளாகப் பார்ப்பர். அவர்கள் பிரிவினைவாதத்தை நோக்கிச் செல்வர்.

இங்கு ஜனநாயகம் முற்றாகச் சீரழிந்துவிட்டது. லஸந்த விக்ரமதுங்க மற்றும் மகேஸ்வரன் எம்.பி. ஆகியோரின் கொலைகள் தொடர்பான விசாரணைகளில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

நல்ல முறையில் இலாபம் கிடைத்துவந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனம் இப்போது பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. கொழும்புத் துறைமுகமும் நட்டத்தில் இயங்குகின்றது. இவற்றை மூடிவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவால் எந்த நட்டத்தையும் ஈடுசெய்ய முடியாது. அதற்கான திறமை அவரிடமில்லை. அவரின் ஊழல், மோசடியில் இருந்து நாம் இந்த நாட்டைக் காப்பாற்றவேண்டும். ஏப்ரல் மாதத்திற்கு முன் இடம்பெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றி அரசு அமைக்கும். - என்றார். (சி)

## அறவழி நிலைய... தொழிற் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப்.29

அறவழி நிலையத்தினர் இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகளை எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆரம்பிக்கவுள்ளனர்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் மரவேலை, தோல் உற்பத்தி, கணனி வன்பொருள் ஆகிய பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

நிலைய பயிலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சி நெறிகளில் பங்கு பற்ற விரும்புவோர் அறவழி செயலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (1- 207)

# 150 நாள்களுக்குள் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றுமாம்!

## மக்கள் சக்திக் கூட்டத்தில் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

''120 முதல் 150 நாள்களுக்குள் ஐக்கிய தேசியக் கட்சி இந்நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும்.''

இவ்வாறு அக்கட்சியின் பொதுச் செயலரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

கொழும்பு விஹாரமாதேவி பூங்கா திறந்த வெளியரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அக்கட்சியின் மக்கள் சக்திக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இந்நாட்டில் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சிதான் நடக்கிறது. ஜனநாயக ஆட்சி முற்றாக அழிந்து விட்டது. மஹிந்த ராஜபக்ஷவின் உறவினர்கள் எல்லா இடங்களிலும் நியமிக்கப்படுகின்றனர்.

கம்பஹாவிற்கு பஸில் ராஜபக்ஷ நியமிக்கப்படுகின்றார். வடமேல் மாகாணத்திற்கு கோத்தபாய ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளார். சப்ரகமுவ மாகாணத்துக்கு சமல் ராஜபக்ஷவும், ஊவா மாகாணத்திற்கு சசிந்திர ராஜபக்ஷவும் நியமிக்கப்படவுள்ளனர்.

அதேபோல் வடக்கு - கிழக்கிற்கும் மஹிந்தவின் உறவினர்கள் நியமிக்கப்படுவர்.

இந்தக் குடும்ப ஆட்சியால் நாட்டில் ஜனநாயகம் அழிந்துவிட்டது. எமது ஐக்கிய தேசியக் கட்சியில் குடும்ப ஆட்சி கிடையாது. இந்த நாட்டு மக்கள்தான் இந்தக் கட்சியை ஆட்சி செய்கிறார்கள். இதுவொரு ஜனநாயகக் கட்சி.

இந்தக் குடும்ப ஆட்சியை நீக்கி ஜனநாயக ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவே எமது 'மக்கள் சக்தி' நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம்.

மக்கள் சக்தியின் 4 ஆவது நடவடிக்கை காரணமாகத்தான் ஜனாதிபதித் தேர்தல் உரியநேரத்தில் நடத்தப்பட்டது. அப்படியானதொரு சக்தி வாய்ந்த இந்த மக்கள் சக்தியின் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இந்த நடவடிக்கையின் ஊடாக நாம் 120 முதல் 150 நாள்களுக்குள் ஆட்சியைக் கைப்பற்றுவோம். குடும்ப ஆட்சியை விரட்டியடித்து முழுமையான ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம் - என்றார். (சி)

## தொண்டராசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.29

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6)

# இயூரோவில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிதியம் ஆய்வில் ஈடுபடுபவர்களுக்கு வரப்பிரசாதம்

அபிவிருத்தி என்னும் தேருக்கு ஆய்வு அச்சாணியாகும். இங்கே முதன்மை நிலை, இடைநிலை, இறுதிநிலை என ஆய்வினை வகைப்படுத்தினாலும் ஆரம்பத்திலும் பின்னர் அவ்வப்போதும் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வின் மூலமே அபிவிருத்தியின் வளர்ச்சிப் படிகளை இனங்கண்டு அளந்து செல்லலாம். எந்த ஒரு நிறுவனத்திற்கும் அல்லது திணைக்களத்திற்கும் ஆய்வு அவசியமானதாகும். மேலும் எத்துறை சார்ந்தவராயினும் ஆய்வில் ஈடுபட முடியும் என்பதோடு ஆய்வு செய்யும் கலாசாரத்தை வளர்த்துக்கொள்ளும் ஒருவருக்கு அவரினது வளர்ச்சிப் பாதையை இனங்கண்டு, இலகுவில் தாம் எண்ணிய இலக்கையும் அடைந்துவிட முடியும். இந்தவகையில் ஆய்வில் ஈடுபடும் ஒருவருக்குத் தடையாக நிதிப்பற்றாக்குறை காரணமாகலாம். ஒரு முழுநிலை ஆய்வாளன் எதைப்பற்றியும் சிந்திக்காது தனது இலக்கை நோக்கி நகருகையில் ஆய்வுக்குத் தேவையான அனைத்தையும் ஒழுங்கு நிலைப்படுத்தி அதற்கென முன்னரே வரைந்த பாதையில் இருக்கின்றபடி நிலைக் கூடாகப் பயணிக்க வேண்டும்.

ஆய்வில் ஈடுபடுத்துவதற்கு ஆகக் குறைந்தது இருவேறு துறைகளின் இணைப்பு புதிய ஆக்கத்திற்கும் கண்டுபிடிப்பிற்கும் வழிகோலும். இவ்வகையில் ஒவ்வொருவரும் தாங்கள் ஆய்வுக்கெனத் தெரிவுசெய்த விடயம் சார்ந்த துறைகளைத் தெரிந்து இணைத்துக் கொண்டால் இந்தக் கூட்டு முயற்சி பல பலன்களைத்தரும்.

ஆய்வில் ஈடுபடுவர்களுக்கு உதவிட பல நிதி நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் அவர்களது வரையறுக்கப்பட்ட விடயங்களில் (Theme)ஆய்வுக்குரிய கரு இருந்தால் மட்டுமே அந்நிறுவனங்களிலிருந்து நிதியைப் பெறக்கூடியதாக இருக்கும். இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் இயூரோவில் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிதியம் இயூரோவில் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொது நலநோக்குடனான இந்நிதியத்திற்கு ஆய்வு செய்வதற்கான நிதிக்காக எவரும் விண்ணப்பிக்க முடியும்.

உள்ளூர் வளங்களைச் சிறப்புறப் பயன்படுத்துவதும், சமூக மேம்பாட்டுடனான அதன் அபிவிருத்திக்கு உதவக்கூடிய எந்தவகையிலான ஆய்விற்குமாக இந்நிதியத்திலிருந்து உதவி பெறலாம். இதற்கென ஆய்வுநிதி பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் இயூரோவில் நிறுவனம், இலக்கம் 45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை (Forest office lane), யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட ஆய்வுக்குரிய நிதிக்கான விண்ணப்பத்தினைத் தகுந்த துறைசார் வல்லுநர்களினுதவியுடன் பரிசீலித்து சிறந்த தகுதி வாய்ந்த ஆய்வு முன் மொழிவு அறிக்கையை ஆய்வாளர் சமர்ப் பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு அவர்தம் ஆய்வுக்குத் தேவையான நிதி இயூரோவில் நிறுவனத்தினது இயூரோவில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிதியத்தினால் வழங்கப்படும். இவ்ஆய்வு நிதிக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது பற்றியும் நிதியைக்கையாளுவது தொடர்பான விதிகள் போன்ற அனைத்து விடயங்களையும் மேற்குறித்த இயூரோவில் நிறுவன காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கலாநிதி கு.மிகுந்தன்

சிறந்த தேச அபிவிருத்திக்காக இயூரோவில் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள இந்நிதியத்திலிருந்து ஆய்வாளர்கள் தகுந்த ஆய்வு முன்மொழிவைச் (Research proposal) சமர்ப்பித்து தங்கள் ஆய்வினைச் சிறந்த முறையில் செய்திட இந்த அருமையான வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பாடசாலை மட்டத்திலிருந்து சிறந்த ஆய்வு முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். ✱

## முருகவேள் வித்தியாலயத்துக்கு 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப்.29

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய மூலப்பொருள், கல்வி உபகரணச் செலவுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் இதன் மூலம் கணனிக் கொள்வனவிற்கும் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அதிபர் து.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கணனிக் கொள்வனவுமூலம் பாடசாலையின் அலுவலகச் செயற்பாடுகளையும், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளையும் இலகுபடுத்த முடியும் எனவும் அதிபர் தெரிவித்தார். (204-297)

## நெல்லண்டை அம்மன் கோயிலில் நவக்கிரகங்கள் அமைப்பு

வடமராட்சி, செப்.29

தும்பளை, நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் நவக்கிரகங்களுக்கான கோயில் கட்டும்பணி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

கோயிலின் பலிபீடத்திற்கு மேற்குப் பகுதியில் இந்திய சிற்பாசாரிகளினால் நவக்கிரகக் கோயில் கட்டப்பட்டு வருகிறது. (203-236)




யாழ். மாவட்டத்தின் சிறந்த கிராம அலுவலராகத் தெரிவு செய்யப்பட்ட ஜே/108 கிராம அலுவலர் திருமதி இராகினி இராமலிங்கத்திற்கு அந்தப் பகுதி மக்களின் சார்பில் நல்லூர் முருகன் சனசமூக நிலையம் அளித்த கௌரவிப்பின்போது நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ். லோகசிவம் உரையாற்றுவதையும் திருமதி இராகினி இராமலிங்கத்திற்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் பொன்னாடை போர்த்துவதையும் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் பாராட்டுப் பத்திரம் வழங்குவதையும் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஜெயலட்சுமி உதயகுமார் கேடயம் வழங்குவதையும் காணலாம்.

(படங்கள் :லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் பிரதேச செயலக வாணிவிழாவில் பிரதேச சபையின் செயலாளர் மே.சாந்தசீலன் உரையாற்றுவதையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*


## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**கனகசபை நல்லையா**

கடந்த (16.08.2009) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.09.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

காளியாணை,
புத்தூர் கிழக்கு, புத்தூர். குடும்பத்தினர்


### புறொயிலர் குஞ்சுகள் விநியோகம்

No.1 பகீரா இன புறொயிலர் குஞ்சுகள் (35 நாள்களில் 2Kg இற்கு மேல் வளரக் கூடியது) 30.09.2009, 03.10.2009 பதிவுகள் மேற்கொள்ளலாம். பதிவு கள் வரையறுக்கப்பட்டுள்ளது.
தொடர்பு:- மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி.
T.P:- 0773001763, 0217912783

### தொழில்நுட்ப அலுவலருக்குப் பயிற்சிகள்

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்கள் 23 பேருக்கு எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இத்தகவலை மாகாண பொது நிர்வாக செயலக பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் தெரிவித்தார். வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பிரதேச வேலைகளை முன்னெடுப்பதற்காக 23 பேர் தொழில்நுட்ப அலுவலர்களாக (பயிற்சி தரம் -III) தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (203-302)

### பரு.தோமையார் தேவாலயம் புனரமைப்பு

வடமராட்சி, செப்.29

பருத்தித்துறை புனித தோமையர் தேவாலயம் சுமார் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுக் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

இத் தேவாலய பங்கைச் சேர்ந்த புலம் பெயர்ந்த மக்களும் இங்கு வாழும் மக்களும் காலத்திற்குக் காலம் தொடர்ச்சியாக வழங்கிவந்த நிதிப் பங்களிப்பின் மூலம் இத் தேவாலயம் நிர்மாணப் பணியாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 5 ஆண்டுகளுக்கு மேலாக தேவாலயம் கட்டும்பணி நடைபெற்று தற்போது பூர்த்தியடைந்துள்ளது.

(203-236)

### தவறவிடப்பட்ட பணம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது

வடமராட்சி, செப்.29

பருத்தித்துறை நகரில் பொதுமகன் ஒருவரால் தவற விடப்பட்ட 34 ஆயிரம் ரூபாரொக்கப் பணத்தைக் கண்டெடுத்த உணவகஉரிமையாளர் ஒருவர் அதனை உரியவரிடம் ஒப்படைத்தார்.

கரவெட்டிவடக்கைச் சேர்ந்தமாணிக்கம் பாலச்சந்திரன் என்பவர் பருத்தித்துறை சிவன் கோயிலடியில் உள்ள தற்காலிக பஸ் நிலையத்திற்கு முன்பாக உணவகம் ஒன்றின் வாசலில் 34 ஆயிரம் ரூபாரொக்கப் பணத்தை தவறவிட்டு விட்டுச் சென்றுவிட்டார்.

இதனைக் கண்டெடுத்த உணவக உரிமையாளர், பணத்தை தவற விட்டு அங்கலாய்த்துக் கொண்டு வந்தவரிடம் தவற விட்ட பணத்தை ஒப்படைத்தார்.

(203-236)


## சேவை நலன் பாராட்டு



திருமதி
**சிவலோகநாயகி செல்வராஜா (SLTS-I)**
(ஆசிரியை, யா/கனகரத்தினம் ம.ம.வி.)

தமது 35 ஆண்டு ஆசிரிய சேவையில் எமது கல்லூரியில் 23 ஆண்டுகள் கணித பாடத்தைக் கண்ணியமாய்க் கற்பித்து இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் தங்கள் பணியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய சேவை விவரம்**


| | |
|---|---|
| அ/நாச்சதுவை முஸ்லிம் ம.வி. | 09.05.1974 |
| அ/பாலிக ம.வி. | 1975-1977 |
| யா/ஸ்தானசீ.சீ.த.க.பாடசாலை | 1978-1979 |
| யா/பலாலி ஆசிரிய கலாசாலை | 1979-1981 |
| மு/முல்லைத்தீவு ம.வி | 1982-1986 |
| யா/கனகரத்தினம் ம.ம.வி. | 1986-இன்றுவரை |

தங்கள் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
(89311)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையிடம் மகவாக 06 ★ 05 ★ 1934



ஆண்டவனின் மலராக 22 ★ 09 ★ 2007

**அமரர் மாரிமுத்து விஜயராசா**
*திதி: ஏகாதசி (29.09.2009)*

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து பாசமுடன் எம்மை அரவணைத்து நல்வழிகாட்டி எம்மை ஆளாக்கிவிட்டு இறையடி சேர்ந்த அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (89306) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் ஆறுமுகநாதன்

மாப்பாணவூரி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயிலடி, மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஆறுமுகநாதன் 27.09.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டக்களப்பில் அவரது இல்லத்தில் இன்று (29.09.2009) புதன்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
*சு.மகேஸ்வரன் (சகோதரர்-இந்திரன்) ஆங்கில ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி, 680, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.* (89313)
*சு.திருநாவுக்கரசு (சகோதரர்) இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், சிவன்கோயிலடி, சித்தன்கேணி*

### வஸ்ரியாம்பிள்ளை ஜெறாட் ஜெயசீலன்




பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்ரியாம்பிள்ளை ஜெறாட் ஜெயசீலன் 26.09.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற அருளப்பு மரியப்பிள்ளை (தங்கம்) தம்பதியரின் பாசமிகு பேரனும் வஸ்ரியாம்பிள்ளை- சகாயினி தம்பதியரின் அன்புப் புதல்வனும், துஸ்யந்தினி, ஜெரோஷினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை (30.09.2009) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் மு.ப.10 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் பெரியவிளான் புனித யுவானியார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியவிளான், இளவாலை.*
*தொ.பே: 0774967143* (89303) *தகவல்: குடும்பத்தினர்.*

ஜினசேன நிறுவனம் தனது சேவையை யாழ்ப்பாணத்தில் விரிவுபடுத்துவதற்காக இல 145 ஸ்ரான்லி வீதியில் விற்பனையும், விற்பனைக்கு பிந்திய சேவையுமான கிளையை இன்று (29.09.2009) செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

**ஜினசேன வழங்கும் உற்பத்திகள்**

CENTRIC — சென்றிக் நீரிறைக்கும் இயந்திரங்கள்
Robin — விவசாய நீரிறைக்கும் இயந்திரங்களும், மின் உற்பத்தியாக்கிகளும்.
Agrimec — விவசாய இயந்திரங்கள்
நீர் சுத்தப்படுத்தும் அலகுகள்
கைத்தொழில் இயந்திரங்கள்
Sinha ® — தூவல் நீர் பாசன தொகுதிகள்
NEHA — சொட்டு நீர் பாசன தொகுதிகள்
JINASENA DRIP SPRINKLER IRRIGATION — சூரியக் கல மின் விளக்குகள்



**ஜினசேன விற்பனையும், திருத்த சேவையும்.**

145, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**கிளை முகாமையாளர்**
T.P: 0772366631


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழின் தொடர்ச்சி.....

03. இன்று தொலைபேசி மூலம் உலகில் எந்தப்பகுதியில் இருப்பவருடனும் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளமுடியும். தொலைபேசி முன்னர் வசதிமிக்கவர்கள் அனுபவித்து வந்த ஒரு தொடர்பாடற் சாதனமாகும். ஆயினும், தற்போது நடுத்தர வகுப்பினரும் பெரும்பாலும் தொலைபேசியை வீடுகளில் பயன்படுத்துகின்றனர். அவசியதேவைக்கு மட்டுமே நாம் தொலைபேசியை பயன்படுத்தலாம். எடுத்ததெற்கெல்லாம் தொடர்புகொள்ளும் போது அன்புத் தொல்லையாகி விடுவது மட்டுமன்றி வீண்செலவையும் ஏற்படுத்தும். அத்துடன் இனிமையாகவும் சுருக்கமாகவும் நாம் தொலைபேசியில் உரையாடுவதே நல்லதொரு தொடர்பாடலுக்கு வழிவகுக்கும்.

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக. நாடகம் இலக்கிய வகைகளுக்குள் முக்கியமான ஒன்று. இது பாவாலும் அமையலாம் உரைநடையாலும் அமையலாம். இன்றைய ஜனநாயக உலகிலே நாடகங்கள் பொதுமக்களுக்கு விளங்கும் உரை நடையிலேயே பெரும்பாலும் ஆக்கப்பட்டு வருகின்றன. நாடகங்கள் பார்வையாளரது உணர்ச்சியைத்தூண்டி உள்ளத்தில் புதைந்துகிடக்கும் வேட்கைகளுக்கு விடுதலையளித்து அன்பையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்தி மக்களைப் பண்படுத்தும் மகத்தான பணியைச் செய்ய வல்லன. நாடகம் கண், செவி என்னும் இரு புலன்களுக்கும் விருந்தளிப்பது. நாடகத்தை நடிக்கும் கலைஞர் நடிப்பது உண்மையன்று என்பதை அறிந்தும் உண்மை போலத் தோன்றுமாறே நடிப்பார். அப்போதுதான் அது நடிப்புக்கலை ஆகும். கற்பனை நிகழ்ச்சிகளை உண்மை போல காட்டுவதற்கு ஏற்றவாறு நாடகம் எழுதுவோர் தமது எழுத்துப்படைப்பை உருவாக்க வேண்டும். இவ்வாறு எழுதப்படும் நாடகமே கலைநயம் பெற்று விளங்கும். ஒருமைப்பாடு நிகழ்ச்சிக்கோப்பு, பாத்திரவார்ப்பு, உரையாடல் என்பன நாடகத்தின் சிறப்புக் கூறுகளாகும். கீழ்நாட்டு நாடகமரபும், மேலைநாட்டு நாடகமரபும் அடிப்படையில் வேறுபட்டவை. மேலைநாட்டிலே பழைய கிரேக்க மரபிலே இன்பநாடகம், அவலநாடகம் என்னும் இருவகை நாடகங்கள் பிரசித்தமானவை. கீழைநாட்டிலே பழைய புராண இதிகாசக் கதைகளை நாடகமாக்கி ஆடும் மரபே நீண்ட காலமாக நிலைத்திருக்கிறது. ஐரோப்பியர் சிறப்பாக மதிக்கும் அவலநாடகம் கீழை நாட்டாரிடம் செல்வாக்குப்பெறவில்லை. இங்கே நாடகக்கதையில் அவல நிகழ்ச்சிகளை இடையிலே புகுத்தினாலும் முடிவில் பார்வையாளரின் மனதை சாந்தி செய்வதையே நாடகாசிரியர் விரும்புவார். இக்காலத்திலே வானொலி நாடகங்களும் தொலைக்காட்சி நாடகங்களும் செல்வாக்குப்பெற்று வருகின்றன. பாடசாலைக் கலை நிகழ்ச்சிகளில் மாணவர் நடிக்கும் நாடகங்கள் இன்று மக்களால் நயக்கப்படுகின்றன. நல்ல மேடை நாடகங்களுக்கு இரசிகர்களிடம் வரவேற்பு இருந்தேவருகிறது.

1) நாடகத்தின் பண்புகள் எவை எனக் குறிப்பிடுக.
2) நடிப்புக்கலை என்பதற்கு உமது மொழிநடையில் வரைவிலக்கணம் தருக.
3) கீழைநாட்டு நாடகத்திற்கும், மேலைநாட்டு நாடகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுக.
4) தற்காலத்தில் எவ்வாறான நாடகங்கள் செல்வாக்குப்பெற்று வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அவற்றை விளக்குக.
5) பின்வரும் சொற்களின் கருத்தை எழுதுக.

அ.வேட்கை — ஆ. படைப்பு
இ. சாந்தி — ஈ. விடுதலை

05. உங்கள் பாடசாலையில் தமிழ் இலக்கியமன்றத்தினால் வெளியிடப்படவிருக்கும் ஒரு நூல் வெளியீட்டு விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்றை எழுதுக.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III — 22-T-II

01. சுருக்கமான விடை தருக.

01) ''கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் கோல் கோடிச்
சூழாது செய்யும் அரசு''
அ.கூழ் என்ற சொல்லின் கருத்து யாது?
ஆ. இக்குறட்பாவின் கருத்தை எழுதுக.

02) கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார் .......... என்ற பழமொழி நானூற்றுப் பாடலின் பொருளை எழுதுக.

03) ''குழந்தாய், கொஞ்சம் பொறு'' இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

04) கம்பரின் வரலாற்றை கருவாகக்கொண்டு எழுதப்பட்ட கவிச்சக்கரவர்த்தி என்ற நாடகத்தில் வரும் 5 பாத்திரங்களை எழுதுக.

05) முதுமொழி வெண்பாவும் சூறாவளிப் படைப்போரும் என்ற நூலின் ஆசிரியர் யார்?

06) நீதிப்பாடல்களில் கையாளப்பட்டுள்ள பழமொழிகள் 4 எழுதுக.

07) காளமேகப்புலவரின் நகைச்சுவை உணர்வை உமது நடையில் எழுதுக.

08) ''சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல்''. இக்குறட்பாவினை கொண்டு கூட்டி மீண்டும் எழுதுக.

09) கலம்பக நூல்களுள் பழமையானது எது? அந்நூல் யாரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது?

10) நிழலின் நினைவு என்ற கவிதையிலே பொதிந்துள்ள ஆழமான பொருள் என்ன?

02. பின்வரும் செய்யுள் பகுதிகள், உரைநடைப் பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை எழுதுக.

அ. பேற்றிலே மிகுமொருவன் புல்லரிடமகப் பட்டாற் பிழைகள் செய்வார்
நூற்றிலேயொருவீர னென்ற பெயரெடுத்தவனும் நோக்கங்கெட்டு
ஆற்றிலேயள்ளுண்டு போனாக் காற்சிறு நண்டு மதட்டிப் பார்க்கும்
**சேற்றிலே புதைந்த யானையைக்காகமுங் குட்டுஞ் செயல் கண்டீரே.**

ஆ. நிலவாய் விளங்குதலால் **நீள் வான் படித்து**
**சிலபோது உலாவுதலால்,** சென்று - தலைமேல்
உதித்துவரலால் உயர் மாமலையை
மதிக்கு நிகராக வழுத்து.

இ. **மங்கையர்கண் புனல் பொழிய மழை பொழியும் காலம்**
**மாரவேள் சிலை குனிந்த மயில் குனிக்கும் காலம்**
கொங்கைகளும் கொன்றைகளும் பொன்சொரியும் காலம்
கோகனக நகை முல்லை முகை நகைக்கும் காலம்
செங்கை முகில் அனைய கொடைச் செம்பொன் பெய் ஏகத்
தியாகியெனும் நந்தியருள் சேராத காலம்
அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக் காலம்
அவரொருவர் நாமொருவர் ஆன கொடுங் காலம்.

ஈ. தான் என்னும் அகந்தை கொண்ட அச்சந்நியாசி பெண்மணி கூறியதைக் கேட்டதும் வெட்கமடைந்து ஆடு, மாடு அறுக்கும் **கசாப்புக்காரனே கடைசியில் நமக்குக் குருவானான்.** என்று சற்றுத் தலைகுனிந்து யோசித்தார். எனினும், கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர் செய்த நல்வினை அவ்வெண்ணத்தை மாற்றி கசாப்புக்காரனைக் காணவேண்டுமென்னும் ஆசையைத் தந்தது.

உ. குழந்தை ரோகினிக்கு ஆறு வயதுதான் ஆகிறது. ஆனாலும் அவளுடைய வார்த்தைகள் யாவும் மணிமணியாக இருக்கும். முத்தும் பவளமும் கோர்த்த காரம்போல அவளது பேச்சு இருக்கும். அவளது கேள்விகள் எல்லாம் தெய்வ உலகத்துக் கேள்விகள். அவளுடைய இளம் நெஞ்சில் உதிப்பவை உலகத்து எண்ணங்கள்.

03. அ. பயனில் சொல்லாமை அதிகாரத்தில் கூறப்படும் கருத்துக்களை தொகுத்துக் கூறுக.
**அல்லது**
ஆ. ''எத்தகையோர் உண்மையான உறவினர்'' என வாக்குண்டாம் கூறுகிறது.

04. அ. நளவெண்பா என்ற பாடப்பரப்பில் தமயந்தியின் பாத்திரப்படைப்பு எத்தகையது என விளக்குக. **அல்லது**
ஆ. கவிச்சக்கரவர்த்தி என்ற நாடகத்தில் கம்பருக்கும் ஒட்டக்கூத்தருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதற்கான காரணத்தை விளக்குக.

*** வினாக்கள் 5, 6, 7 ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.**

05. ''விடியுமா'' என்ற சிறுகதையின் சிறப்பம்சங்களைப் பற்றி விளக்குக.

06. நல்லமரமும் நச்சுமரமும் என்ற கட்டுரையில் நல்லார் கைப்பட்ட செல்வத்தின் தன்மையை தோழன் எவ்வாறு அரசிளங்குமாரனுக்கு விளக்குகின்றான்?

07. பாரதியார் கவிநயம் பாடப்பரப்பில் பராசக்தி எங்கெங்கு நிறைந்திருப்பாள் என பாரதியார் கூறுவதை விளக்குக.

ஆசிரியர் : திருமதி குணசீலன் அனுஷ
மகாபெரியதென்ன த.ம.வி, கண்டி. 0776482159

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய விஞ்ஞானத்தின் தொடர்ச்சி......

34. குழிவுவில்லை ஒன்றினது முதலச்சின் எப்புள்ளியில் பொருளை வைக்கும்போது உரு பெருத்த, நிமிர்ந்த, தலைகீழான விம்பத்தைப் பெறலாம்?
1) குவியத்தல்.
2) குவியத்திற்கும் வளைவுமையத்திற்கும் இடையில்.
3) வளைவுமையத்தில்.
4) குவியத்தினுள்.

35. பின்வருவனவற்றுள் எது மின்காந்தம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பமாக அமையாதது?
1) நுணமின் சுற்றடைப்பான்.
2) மின்மணி.
3) மின்னடுப்பு.
4) தொலைபேசியின் செவிப்பன்னி.

36. 5kg திணிவுடைய பொருளொன்று $10ms^{-2}$ எனும் ஆர்முடுகளுடன் பயணிக்கிறது. எனின், பிரயோகிக்கப்பட்ட விசை யாது?
1) 10N 2) 50N 3) 500N 4) 100N

37. நுளம்பு பெருக்கம் காரணமாக டெங்கு, மலேரியா போன்ற ஆபத்தான நோய்களின் தாக்கம் பற்றி தினமும் அறிகிறோம். இந்நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த முறை பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கலாம்?
1) நோய் ஏற்பட்டவருக்கு தகுந்த முறையில் சிகிச்சை அளித்தல்.
2) புதிய மருந்து பொருட்கள் கண்டுபிடிக்கப்படுதல்.
3) நுளம்பு வலைகளை பயன்படுத்தல்.
4) நுளம்புகளின் வாழ்விடங்களை அழித்தல்.

38. ''இங்கு முட்டாள்கள் மட்டுமே புகைபிடிப்பதற்கு அனுமதிக்கப்படும்'' இக்கூற்று பொது இடமொன்றில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது,
1) முட்டாள்கள் புகைப்பதால் சூழலுக்கு தீங்கு ஏற்படாது.
2) புகைபிடிப்பவர்கள் அனைவரும் முட்டாள்கள் ஆவர்.
3) புகைபிடிப்பதன் மூலம் முட்டாள்களையும் புத்திசாலித்தனமானவர்களாக மாற்றலாம்.
4) இவ்வாசகம் ஓர் உளத்தாக்கத்தை ஏற்படுத்துவதால் புகைபிடித்தலை கட்டுப்படுத்தலாம்.

39. பூமியின் வெப்பம் அதிகரித்தால் மிகக்கூடிய பங்களிப்பு செய்யும் வாயு பின்வருவனவற்றுள் எது?
1) காபனீரொக்சைட்டு.
2) ஒட்சிசன்.
3) CFC
4) மெதேன்.


40. பின்வருவனவற்றுள் மண்மாசடைதலில் பிரதானமாக பங்குபற்றும் காரணி எது?
1) தகரப்பேணி.
2) பொலீத்தீன்.
3) தாவர கழிவுகள்.
4) விலங்கு கழிவுகள்.

## விஞ்ஞானம் - II — 34-T-II

### பகுதி A - அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. தாவரப்பகுதிகளில் இருந்து இடித்து பிழிதல், காய்ச்சி வடித்தல், கொதி நீராவி காய்ச்சு வடிப்பு மற்றும் கரைதிறன் கூடிய கரைப்பான்களில் கரைத்தல் போன்ற பல்வேறு முறைகளில் நூற்றெண்ணெய்கள் பெறப்படுகின்றன. கறுவா இலைகளைப் பயன்படுத்தி கறுவா எண்ணெய் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரண அமைப்பொன்று இங்கு தரப்பட்டுள்ளது.

1) கறுவா இலைகளிலிருந்து கறுவா எண்ணெய் பெறப்படும் முறையைக் காட்டும் கீழ்வரும் பாய்ச்சற் கோட்டு படத்திற்கு பொருத்தமான சொற்களை பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.




கறுவா இலை .......................... கறுவா எண்ணெய் ஆவி + நீராவி கறுவா எண்ணெய் வேறாக்கல் ..............................

2) கறுவா எண்ணெயையும் நீரையும் வேறாக்குவதற்குரிய இங்கு காணப்படும் சிறப்பம்சம் யாது?
3) ஆய்வுகூடத்தில் கறுவா எண்ணெயையும் நீரையும் வேறுப்பிரிக்க பயன்படுத்தப்படும் உபகரணம் யாது?
4) சாற்றெண்ணெய்களின் பயன்பாடுகள் இரண்டு தருக.
5) கறுவா தவிர்ந்த இலங்கையில் சாற்றெண்ணெய் உற்பத்தி செய்யப்படும் தாவரங்களையும் அத்தாவரங்களின் தாவரப்பகுதிகளையும் மூன்று வீதம் தருக.

| தாவரம் | தாவரப்பகுதி |
|---|---|
| .................................. | .................................. |
| .................................. | .................................. |
| .................................. | .................................. |

6) சாற்றெண்ணெயைப் பயன்படுத்தி வலி நிவாரணி (Balm) பதார்த்தங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதிலுள்ள இரசாயணப் பொருளைக் குறிப்பிடுக.

02. காபன் வட்டத்தைக் காட்டும் அமைப்பு ஒன்று இங்கு தரப்பட்டுள்ளது. பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இவ்வட்டத்தைப் பூரணப்படுத்துக.




1) வளிமண்டல காபனீரொக்சைட்டு
a. ............................ b. ............................
2) இங்கு நீர் குறிப்பிட்ட a, b என்பவற்றுக்கிடையிலான மூன்று வேறுப்பாடுகளைக் குறிப்பிடுக.

| a | b |
|---|---|
| .................................. | .................................. |
| .................................. | .................................. |
| .................................. | .................................. |

3) இங்கு குறிப்பிடப்படாத வளிமண்டலத்தில் காபனீரொக்சைட்டு வாயுவை அதிகரிக்கச் செய்யும் செயற்பாடுகள் இரண்டு தருக.
4) வளிமண்டலத்தில் காபனீரொக்சைட்டு செறிவை குறைக்கக்கூடிய நீர் மேலே

**வளரும்.......**

ஆசிரியர் : திரு.M.சுதர்சன்,
83, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. 0776115372

# தடுமாறும் தமிழ்த் தலைமைகளும் தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலமும்!

**வெகுஜன அரசியல் மாத இதழான 'புதிய பூமி' சஞ்சிகையின் செப்ரெம்பர் மாத வெளியீட்டில் 'வெகுஜனன்' என்பவர் வரைந்த கட்டுரை இது. இங்கு அது மீள் பிரசுரமாகின்றது.**

தமிழ்த் தலைமைகள் என்று தம்மை வர்ணித்து வரும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இன்று கடுமையான தடுமாற்றத்துக்கும் இயலாமைக்கும் உள்ளாகி நிற்கின்றன. இதில் கடந்த பொதுத்தேர்தலில் புலிகள் இயக்கத்துடன் இணைந்து 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்வதறியாது திகைத்து நிற்கிறது. வன்னி யுத்தத்தில் பின்னடைவு ஏற்பட ஆரம்பிக்கும் வரை தாமே தமிழ்த் தேசிய இனத்தின் ஏகப்பிரதிநிதிகள் என்பதுபோன்று நெஞ்சு நிமிர்த்தி நின்று நாடாளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் வீண் பேச்சுக்களும் வீரதீர வசனங்களும் வெளியிட்டு வந்தவர்கள் இவர்கள் அரசியல் தொலை நோக்கில் தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதைச் சிறியளவில் கூட அவர்களால் அனுமானிக்க முடியவில்லை. காரணம் அவர்களது நம்பிக்கை முழுவதும் தமிழ் மக்கள் மீதல்ல. புலி இயக்கம், இந்தியா, சர்வதேச சமூகம் என்பவற்றின் மீதே முழுவதும் தங்கியிருந்தது.

ஆனால், இவர்கள் எதிர்பார்த்திருந்த இந்தியாவின் நிலை முழுக்க முழுக்க எதிர்நிலைப்பட்டதாலும் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு, அதன் தலைமை அழிக்கப்பட்டதாலும் இன்று திரிசங்கு நிலையில் இருந்து வருகின்றனர். இது அவர்களால் செய்யப்பட்ட முன்வினைகளின் பின் விளைவுகளால் ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலையாகும். அதனால் கக்கவும் முடியாது, விழுங்கவும் முடியாத கையறு நிலையில் தமிழ்க் கூட்டமைப்பினர் இருந்து வருகின்றனர்.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் முரளிதரன் முதலமைச்சர் சந்திரகாந்தன்

### ஜனாதிபதியுடன் பேசிய தமிழ்க் கூட்டமைப்பினர்

அண்மையில் இத்தமிழ்க் கூட்டமைப்பினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து மூன்று மணிநேரம் பேச்சு நடத்தினர் என ஊடகங்கள் தெரிவித்தன. ஆனால், அச்சந்திப்பில் கூட்டமைப்பினர் பேசிய நேரம் மிகக் குறைவானதாகும். பல்வேறு விடயங்கள் பற்றி விவாதிக்கப்போகிறோம் எனக் கூறிச் சென்றவர்களிடம் பெரிதாக எதனையும் கேட்கும் நிலையில் ஜனாதிபதி இருக்கவில்லை. ஜனாதிபதியும், அவரது சகோதரரும் ஆலோசகருமான நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷவும்தான் அதிக நேரம் பேசியவர்களாவர். தாம் ஏன் சுமார் மூன்று லட்சம் வரையிலான மக்களை முகாம்களில் தடுத்து வைத் திருக்கின்றார்கள் என்பதற்கும், மீள்குடியேற்றம் உடனடியாகவோ அன்றி கிட்டிய காலத்திலோ செய்ய முடியாது என்பதற்கும் நீண்ட விளக்கம் அவர்களால் அளிக்கப்பட்டது. புலிகள் இயக்கத்தை முழுமையாக வடிகட்டி எடுக்கவும், வன்னியில் கண்ணிவெடிகளை கண்டுபிடித்து அகற்றவும் அதிக காலம் செல்லும் என்பதே அரசின் நிலைப்பாடாகும் என்ற இறுக்கமான செய்தியே தமிழ்க் கூட்டமைப்பினருக்குக் கூறப்பட்டது.

இதனைக் கேட்டுக்கொண்டு வெறுங்கையுடன் திரும்புவதைத் தவிர வேறெதுவும் கூற முடியாத பரிதாப நிலையிலேயே அவர்கள் இருந்தனர். அவர்களிடம் உள்ள ஒரே திருப்தி நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளாவது உள்ளனவே என்பது மட்டுமேயாகும். ஜனாதிபதிக்கும், அரசுக்கும் உள்ள சங்கடம் யாதெனில், அவர்கள் ஊர் உலகிற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களாவர். அதுமட்டுமின்றி, இதுவரை அரசுத் தரப்பால் கூட்டமைப்பில் இருந்து எவரையும் தமது பக்கத்திற்குப் பிரித்தெடுத்துக்கொள்ள இயலவில்லை. எனவே, அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டே அதற்கான முயற்சியும் இடம்பெறுவதாகவே பேசப்படுகிறது. அந்த வலைக்குள் ஓரிருவர் சிக்கவும் கூடும் என்ற நம்பிக்கை உள்ளது.

### கூட்டமைப்பின் பின்னடைவு

மேலும் ஏற்கனவே இடம்பெற்ற வடக்கின் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்குக் கிடைத்த வாக்கின் வீதம் 10 இற்கும் குறைவானதாகும். யாழ். மாநகரசபையில் உறுப்பினர்களைப் பெற முடிந்தாலும், வவுனியாவில் நகரசபை நிர்வாகத்திற்குத் தலைமை தாங்கினாலும், மக்களின் ஆதரவு நிலை அடிமட்டமாகவே இருந்து வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் ஆகுவதோ ஏனைய தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்படுவதோ மக்களின் ஆதரவில் அல்லது அரசியல் தெளிவின் கொள்கை விளக்கத்தின் வழிகளில் அல்ல. வர்க்கம், சாதி, ஊர், பணம், ஊழல், முறைகேடுகள் போன்றனவே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் வெற்றியைத் தீர்மானிக்கின்றன. இதன் மூலம் அத்தகையவர்களே தலைமை தாங்குபவர்களாகக் காட்சிப்படுத்தப்படவும் செய்கின்றனர். இது 62 வருட முதலாளித்துவ நாடாளுமன்ற ஆட்சி முறையின் இலட்சணம் ஆகும். இதற்கு விதிவிலக்கானவை அல்ல, தமிழ்த் தலைமைகள். அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்த் தேசியத்தின் பெயரால் நாடாளுமன்றம் - ஆயுத நடவடிக்கைகள் - நாடாளுமன்றம் எனச் சுழன்றவண்ணமே இவர்கள் உள்ளனர். இத்தகையவர்களினால் ஆதிக்க அரசியல், நாடாளுமன்றப் பதவிகள், பேரப்பேச்சுகள் போன்றவற்றிற்கு அப்பால் செல்ல முடிவதில்லை. தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் காணப்படும் இன, வர்க்க, சாதி, பெண் ஒடுக்குமுறை போன்றவற்றுக்கு எதிராகக் கொள்கை வைக்கவோ அவற்றுக்குரிய போராட்ட வழிமுறைகளை முன்னெடுக்கவோ இவர்கள் தயாராகவில்லை. இனிமேலும் புதிய மாற்றுக் கொள்கைக்கோ, நடைமுறைக்கோ இவர்கள் தயாராகமாட்டார்கள்.

### தடுமாற்றத்தில் ஈ.பி.டி.பி.

இதன் வழியில் அரசோடு இணைந்து நின்று செயலாற்றி வந்த ஈ.பி.டி.பி. இப்போது சற்று தடுமாற்றம் அடைந்த நிலையில் காணப்படுகிறது. அரசின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட நிர்ப்பந்திக்கப்பட்டதையும், வடக்கில் மக்களிடம் அதற்கு குறைந்தளவிலான ஆதரவே கிடைக்... அது ஆரம்பித்துள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள கருத்துகளில் அதனைக் காணமுடிகிறது. 'மஹிந்த சிந்தனை' அரசும், ஜனாதிபதியும் தமது உள்நோக்க நிலைப்பாடுகளை வடக்கில் ஈ.பி.டி.பி. மூலமும், கிழக்கில் அமைச்சர் கருணா, முதலமைச்சர் சந்திரகாந்தன் மூலமும் நிறைவேற்றிக்கொள்ள முன்நிற்கிறார்களே தவிர, அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளையோ அல்லது தமிழ் மக்கள் சார்பான விருப்பங்களையோ நிறைவேற்றத் தயாராக இல்லாத நிலையே காணப்படுகிறது. இதனால், இவர்களுக்கும் அரசிற்கும் இடையிலான உள்ளார்ந்த முரண்பாடு அடிக்கடி வெளிவராத புகைச்சலாக இருந்து வருகின்றது.

### ஏனைய தரப்பினர்

இதே நிலைதான் ஆயுதம் தூக்கி, அதனால் அழிவுகள் பட்டு, பின் ஜனநாயக நீரோட்டம் என்று கூறிக்கொண்டு நாடாளுமன்ற அரசியலுக்கு வந்தவர்களிடமும் காணப்படுகிறது. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.(பத்மநாபா அணி) மற்றும் ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியனவும் அரசை எதிர்த்து நிற்கவும் முடியாது, விட்டுத் தூரச் சென்று சுதந்திரமாக அரசியல் செய்யவும் முடியாத நிலையில் தடுமாற்றத்துடன் இருந்து வருகின்றன. ஏறத்தாழ ஒரே நிலைப்பாட்டில் உள்ள இவர்களிடம் கூட ஒத்த கருத்தும் இல்லை. மாற்றுக் கொள்கையும் இல்லாத நிலைதான் தொடர்கிறது.

இவற்றைவிட தற்போது தமிழ்க் கூட்டமைப்பில் இருந்துவரும் ரெலோ, ஈ.பி.ஆர். எல்.எவ். ஆகிய இரண்டு கட்சிகளும் ஏற்கனவே புலி எதிர்ப்பு வன்மத்துடன் சந்திரிகா அரசின் கீழ் அரசுடன் இருந்து தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தவையாகும். புலிகள் மட்டுமே பிரதான எதிரியென கொண்டிருந்த இவர்கள் புலிகளின் ஆதரவுடன் நாடாளுமன்ற பதவிகளைப் பெறவும், தமிழ் மக்கள் மத்தியில் தத்தமது அரசியலை தக்கவைக்கவும் தமிழ்க் கூட்டமைப்பில் இணைந்தனர். நாடாளுமன்றப் பதவிகளைப் பெற்றனர். ஆனால், நிலைமை இந்தளவுக்கு ஆபத்தாக வருமெனக் கனவிலும் அவர்கள் நினைக்கவில்லை. அவர்கள் மட்டுமின்றி தமிழ் மக்கள் மத்தியில் அன்றுதொட்டு ஆண்ட பரம்பரை ஆதிக்கச் சிந்தனை வழியில் நாடாளுமன்ற அரசியலில் இருந்து வந்த தமிழரசு - தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் கூட இப்படியொரு அவல நிலைக்கு தள்ளப்படுவோம் என எதிர்பார்க்கவில்லை. இவர்கள் எல்லோரும் ஒருபுறம் புலிகளின் ஆயுத பலத்தையும், மறுபுறம் இந்திய ஆளும் வர்க்க எசமானர்களையும் நம்பியிருந்தனர். அவை இரண்டும் இன்று இவர்களின் பிடிக்குரியனவாக இல்லாத நிலையில் நடையிழந்து - குரலற்று வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற பெயரில் தட்டுத்தடுமாறியவர்களாக இருந்து வருகின்றனர்.

### அரசியல் துரோகங்கள்

அதுமட்டுமன்றி, இவர்கள் அனைவரிடம் ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்திற்கும் செய்த அரசியல் துரோகமும், மக்கள் மத்தியில் கொலை,கொள்ளை, சகோதரப் படுகொலை நிகழ்த்திய இரத்தக் கறைகளும் அழிக்கப்பட முடியாத அளவுக்கு நிறைந்துள்ளன.

இவர்கள் அனைவரும் தமிழ்த் தேசியத்தை பின்பற்றியவர்கள் என்பதுடன் இந்திய ஆளும் வர்க்க எசமானர்களின் காலடியில் கிடந்து வந்தவர்கள். அழிவுகளைத் தேடிய புலிகளும், இத்தமிழ் கூட்டமைப்பினரும் தமிழ்த் தேசிய இனத்திற்கு மாபெரும் துரோகம் இழைத்தவர்களே ஆவர். இதில் யார் கூட அல்லது குறையச் செய்தவர்கள் என்று கணக்கிட முடியாத அளவுக்கு சகல நிலைகளிலும் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பிற்கும் எதிர்காலத்திற்கும் மாபெரும் அழிவுகளைத் தேடித் தந்திருக்கின்றனர்.

சில தமிழ்த் தேசியவாத ஆய்வுக்காரர்கள் இப்போதும் நாடாளுமன்ற இடதுசாரிகள் இழைத்த அரசியல் தவறுகளை பெரும் தமிழினத் துரோகமாக ஊதிப்பெருப்பித்துக் காட்டி வருவதில் குறியாக இருக்கின்றனர். அத்தவறுகள் மறைக்கப்படுவதற்கு இல்லை. ஆனால், தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் அனைத்தும் தமிழ்த் தேசிய இனத்துக்கு செய்துள்ள மாபெரும் துரோகங்களோடு அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் அது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் போன்றதாகும். இவற்றை வெறும் அரசியல் காழ்ப்புணர்வினால் நாம் கூறவில்லை. வரலாற்றின் ஊடே இடம்பெற்ற நிகழ்வுகளின் அடிப்படையிலேயே காணுகின்றோம். இந்த நிலையில் இருந்து தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் எவ்வகையிலும் மாற்றம் அடையப் போவதில்லை.

### அதே பாதையில் பயணிப்பதா?

ஆனால், தமிழ்த் தேசிய இனத்தின் முன்னால் ஒரு பாரிய அரசியல் கேள்வி எழுந்து நிற்கிறது. தொடர்ந்தும் செக்கு இழுத்த பாதையில் தமிழ்த் தேசியவாத பிற்போக்கு தலைமைகளுக்குப் பின்னால் தலையாட்டி மாடுகள் போன்று அல்லது செம்மறியாட்டுக் கூட்ட மனோநிலையில் மேய்ப்பர்கள் காட்டும் இருட்டு அரசியலுக்குள் தொடர்ந்து செல்வதா அல்லது அதனை நிராகரித்துப் புதிய அரசியல் வழிமுறைகளை நாடுவதா என்பதே அக்கேள்வியாகும்.

கடந்த கால தமிழ்த்தேசிய அரசியல் வரலாற்றின் ஒவ்வொரு காலகட்ட வரலாற்று நிகழ்வுகளும் ஆழ்ந்து நோக்கப்படல்வேண்டும். அவற்றிலிருந்து உரிய அனுபவங்கள், பட்டறிவுகள்,பெறப்பட்டு மீளாய்வும், விமர்சனங்களும் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுவது அவசியம். அறணைத்தனமான - அன்றன்று மறந்து விட்டு அரசியல் ஆதிக்க மேய்ப்பர்களின் பின்னால் ஓடும் - அரசியல் கலாசாரத்திற்குத் தமிழ் மக்கள் முற்றுப்புள்ளியிடல் வேண்டும்.

### பரந்த அரசியல் விவாதம் அதுவே இன்றைய தேவை

தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய அவல நிலையையும், இருப்பையும் எதிர்காலத்திற்குரிய தொலைநோக்குத் திட்டங்களையும் வகுக்கக்கூடிய ஒரு பரந்துபட்ட அரசியல் விவாதம் அவசியம். இதனைத் தனியே ஒரு கட்சி, சில படித்த மேதாவிகள் அல்லது புலம் பெயர்ந்த உயர்வர்க்கக் கனவான்கள் என்போரால் செய்யமுடியாது.

தமிழ்த்தேசிய இனத்தின் பொருளாதார, அரசியல், சமூகப் பண்பாட்டுத் தளங்களிலான யதார்த்த நிலைமைகள் உண்மைகளின் அடிப்படையிலும், வரலாற்று வளர்ச்சிகளின் ஊடாகவும் அலசி ஆராயப்படவேண்டும். இவ்வாராய்வும், கொள்கை முடிவுகளும் மேட்டுக்குடி உயர்வர்க்க சக்திகளின் தேவைகள், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் எடுக்கப்படல்வேண்டும்.

**வெகுஜனன்**

பரந்துபட்ட தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் கீழ், மத்திய தரவர்க்கத்தினரான அரச, தனியார் துறையினர் மற்றும் உழைக்கும் மக்களின் நலன்களிலிருந்து இது தோற்றுவிக்கப்படல்வேண்டும்.

இத்தகைய நிலைப்பாடுதான் தமிழ்த் தேசிய இனத்திற்குரியதும், முதலாளித்துவ, பேரினவாத, ஆளும் அதிகார சக்திகளுக்கும் அவர்களது அந்நிய கூட்டாளிகளுக்கும் எதிராக முன்னேறிச் செல்லக் கூடியதுமான சரியான அரசியல்வெகுஜனப் போராட்ட மார்க்கமாக அமைய முடியும். இதனை தமக்குரிய வரலாற்றுக் கடமையாகவும், தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் வகையிலும் தமிழ் மக்கள்முன்னெடுக்க முன்வராது விட்டால் தொடர்ந்தும் அடக்கு முறைகள், அழிவுகள், அவலங்களுக்குள் அடிமைத்தனமான வாழ்வை மேற்கொள்ளவேண்டியே ஏற்படும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜயதசமி தினமான நேற்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற வித்தியாரம்பம் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் சிறுவன் ஒருவனுக்கு ஏடு தொடக்குவதையும்- நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# சாவகச்சேரிப் பிரதேச மாணவருக்கு கல்விநிதி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 29

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தினரும் சங்க நலன்புரிக் கழகத்தினரும் இணைந்து மாணவர்களுக்கு கல்வி நிதி வழங்கும் நிகழ்வினையும் ஓய்வுபெற்ற பணியாளரின் பிரிவு உபசார விழாவினையும் அண்மையில் நடத்தினர்.

சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் கி. பூபாலசிங்கம் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ. சிவலிங்கம் கலந்து கொண்டார்.

சங்கத்தின் பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரின் ஐந்தாம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற, பல்கலைக்கழக அனுமதி பெற்ற பிள்ளைகளுக்கு கல்வி நிதி வழங்கியும் , ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் அதிகூடிய சித்தி பெற்ற மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பரிசில்களும் வழங்கப்பட்டன.

பல்கலைக்கழக அனுமதி பெற்ற ஆறு மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற ஏழு மாணவர்களுக்கு தலா மூவாயிரம் ரூபா வீதமும் கல்வி நிதி வழங்கப்பட்டது.

சங்கத்தில் நீண்டகாலம் தட்டெழுத்தாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற செல்வி வேலுப்பிள்ளை சிவஞானத்தின் பிரிவுபசார நிகழ்வும் இடம்பெற்றது.

இவருக்கு சங்கத்தின் சார்பிலும் நலன் புரிச் சங்கத்தின் சார்பிலும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (203-207)

## சிறுவர் தினமும் கொடி தினமும்

யாழ்ப்பாணம்,செப்.29

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினமும், சிறுவர்களுக்கான கொடிதினமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.40, கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளன.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ்கழகத்தின் யாழ்.இணைப்பாளர் லயன் பி.ஆர். ரஞ்சன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யோகிராஜன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் சிறுவர் தினத்துக்கான கொடியைப்பெற்று கொடி தினத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார். அதனையடுத்து வளர்ப்புப் பெற்றோர் திட்ட அறிமுகமும் ஆரம்ப நிகழ்வும் இடம் பெறும். (201)

## சண்டிலிப்பாயில் வயல்விழா நிகழ்வு

நல்லூர்,செப்.29

கிராமத்திற்கு ஒரு பயிர் திட்டத்தின்கீழ் சண்டிலிப்பாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்ற நிலக்கடலைச் செய்கைகள் அறுவடைக்குத் தயாரானதையொட்டி கடந்த புதன்கிழமை சண்டிலிப்பாய் விவசாய போதனாசிரியர் திருமதி ப. மணிவர்ணன் தலைமையில் வயல்விழா நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூவும் சிறப்பு விருந்தினராக பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமாரும் கலந்து கொண்டனர்.

கிராமத்திற்கு ஒரு பயிர் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட 14 விவசாயிகளுக்கு ஒவ்வொருவருக்கும் தலா அரை ஏக்கருக்குத் தேவையான விதைகள் 50 வீத மானிய விலையில் வழங்கப்பட்டதுடன் நிலத்தைப் பண்படுத்த ஆயிரத்தி 500 ரூபாவும் வழங்கப்பட்டிருந்தது என விவசாய பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (203-,111)

# மாணவரிடையே விவசாய அறிவை மேம்படுத்த பயிற்சி அளித்தலும் விவசாய உபகரணம் வழங்கலும்

நல்லூர், செப்.29

பாடசாலைகளில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு விவசாய அறிவை வழங்கும் வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு உபகரணத் தொகுதிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாணவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தால் விவசாய அபிவிருத்தி கமநல சேவை அமைச்சின் நிதியுதவியுடன் இச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீவகம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய வலயங்களில் இருந்து பாடசாலைகள் இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

வேலணை மத்திய கல்லூரி, வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம், யா/இந்து மகளிர் கல்லூரி, முத்துத்தம்பி வித்தியாலயம், ஏழாலை சைவமகாஜன வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி,வட்டு. மத்திய கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, புற்றளை மகா வித்தியாலயம், டிறிபேக் கல்லூரி ஆகியன தெரிவாகியுள்ளன.

பாடசாலைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக விதைப்பொதிகள், பயன்தரும் மரக்கன்றுகள், மருத்துவ மூலிகைக் கன்றுகள், மண்புழு வடிதிவர தொகுதிகளுக்கான உபகரணங்கள் உட்பட தேவையான உபகரணங்கள் தேவைப் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-111)

# வலி.மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான காணி பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது

வலி.மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான அரச காணி பொதுமக்களின் நிரந்தரக் குடியேற்றத்திற்காகப் பிரித்து வழங்கப்படவுள்ளது.

ஜே/180 கிராம அலுவலர் பிரிவில் உள்ள கருகம்பத்தானை எனும் காணியே மக்களுக்குப் பிரித்து வழங்கப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அங்கு வாழும் மக்களுக்கான காணி உரிமம் 'பெர்மிட்டுகள்' மூலம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கையினை வலி.மேற்குப் பிரதேச செயலர் திருமதி தே. பாபு மேற்கொண்டுள்ளார்.

கடந்த 50 வருடங்களாகக் குடியிருக்கும் மக்களுக்கு நிரந்தரக் காணியுரிமை கிடைக்கவுள்ளது.

இதைத் தொடர்ந்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் ஊடாக கிராம அபிவிருத்தி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-302)

# இலங்கை வங்கியின் அச்சுவேலிக்கிளை சனிக்கிழமைகளிலும் செயற்படவுள்ளது

இலங்கைவங்கியின் அச்சுவேலிக்கிளை சனிக்கிழமைகளிலும் செயற்படவுள்ளது. வாடிக்கையாளர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு சனிக்கிழமையிலும் செயற்படுவதற்கான அனுமதி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி, வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிக்கு நடுவிடமாகவுள்ள அச்சுவேலி இலங்கைவங்கிக் கிளையைச் சனிக்கிழமைகளிலும் செயற்பட வைப்பது வாடிக்கையாளர்களுக்கு மேலதிக வசதியாக அமையும் என்பதை வலியுறுத்தி அச்சுவேலி தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

கோரிக்கையை ஏற்றுக்கொண்டு வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையை சனிக்கிழமை தோறும் கருமம் ஆற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அடுத்துவரும் வாரங்களில் இருந்து வங்கியின் செயற்பாடுகளை சனிக்கிழமைகளில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (203-11)




## மகாத்மா காந்தியின் பிரார்த்தனை நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.29

மகாத்மா காந்தியின் 104ஆவது ஜனன தின பிரார்த்தனை நிகழ்வுகள் கைதடி-நுணாவில் அறவழி செயலகத்தில் எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளன. (203- 207)

## வடமராட்சிப் பிரதேசத்தில் தேங்காய் விலை உயர்வு

வடமராட்சி,செப்.29

வடமராட்சிப் பிரதேசத்தில் தேங்காய் விலை வெகுவாக உயர்ந்துள்ளது.

முன்னர் 30ரூபாவாக விற்கப்பட்டு வந்த தேங்காய் தற்போது 40ரூபா முதல் 50 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வடமராட்சிப் பகுதிக்குத் தேவையான தேங்காய்கள் தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்திலிருந்து தினமும் வியாபாரிகளால் எடுத்துவரப்படுகிறது. (203- 236)

## கொத்துக்கட்டி- கேணிவீதியால் போக்குவரத்துச் செய்வதில் சிரமம்

யாழ்ப்பாணம்,செப்.29

நவாலி, கொத்துக்கட்டி- கேணி வீதி போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

வீதி முழுவதும் கண்ணாடித்துகள், உடைந்த போத்தல் கழிவுகள், மலக்கழிவு, சிகையலங்காரக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுளால் நிரம்பிவழிகிறது.

இறந்த மிருகங்கள், கொல்கள கழிவுகளும் இப்பகுதிகளில் நிரம்பி வழிகின்றன.

இதனால் இந்த வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் தொற்றுகள் பரவக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (203-302)



''டான் தமிழ் ஒளி'' தொலைக்காட்சியின் யாழ்.அலுவலகம் கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மார்க் ஆகியோர் இணைந்து அலுவலகத்தைத் திறந்து வைப்பதையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் ''டான் தமிழ் ஒளி'' தொலைக்காட்சியின் இயக்குநர் எஸ்.எஸ்.குகநாதன், மூத்தபத்திரிகையாளர் [illegible] படங்களில் காணலாம். (படங்கள்: ஓங்காரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஏசியன் அலையன்ஸ் இன்சுரன்ஸ் நிறுவனத்தின் யாழ்.கிளைத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி றமால் ஜயசிங்க நிறுவனக் கொடியை ஏற்றி வைப்பதையும் அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாநகர முதல்வர் திருமதி பற்குணராஜா யோகேஸ்வரி நிற்பதையும், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மங்கள விளக்கை ஏற்றி வைப்பதையும் முதல் இருபடங்களில் காணலாம்.
அமைச்சர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி, யாழ்.மாநகர முதல்வர் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டிக் கிளையைத் திறந்து வைப்பதை அடுத்துள்ள படத்தில் காணலாம். யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.வித்தியாசங்கர் சர்மாவும் படத்தில் காணப்படுகிறார். (படங்கள்:லக்ஸ்மன்)

# முகாம் அகதிகள் மீதான துப்பாக்கிப் பிரயோகம் விடுவிப்புக்கான அழுத்தத்தைத் தீவிரமாக்கும்

## 'ரைம்ஸ் ஒன் லைன்' சுட்டிக்காட்டுகின்றது

கொழும்பு, செப். 29

இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம், இவர்களை விடுதலை செய்யுமாறு அரசின் மீது மேலும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதற்கு வழி வகுக்கும் என பிரிட்டனின் 'த ரைம்ஸ் ஒன் லைன்' தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையை நிராகரிக்க முடியாத சான்று இது. முகாம்களில் காணப்படும் மோசமான நிலையையும் இது புலப்படுத்துகின்றது. - எனக் குறிப்பிட்டுள்ள 'த ரைம்ஸ் ஒன் லைன்' இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற பல தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், தமிழ் இணையத்தளங்கள்,விறகு சேகரிக்கச் சென்ற பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஆறுபேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளன.

முகாமிலிருந்து தப்ப முயன்ற பொதுமக்கள் கற்களை வீசித் தாக்கினர் என இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினர் தற்பாதுகாப்பிற்காகவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும், குழப்பம் விளைவித்த 19 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முகாமில் உள்ள பொதுமக்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதற்கான மறுக்க முடியாத - நிராகரிக்க இயலாத - உதாரணம் இது.

இது முகாம்களின் மோசமான நிலைமையையும் வெளிப்படுத்துகின்றது.

மேலும், முகாமில் உள்ளவர்கள் தப்பிச் செல்ல முயன்றால் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்வதில்லை என்ற உறுதிமொழியும் மீறப்பட்டுள்ளது.

வவுனியா முகாம்களுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரியான எஸ்.பெரேரா, முகாமிலிருந்து எவராவது தப்ப முயன்றால் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படமாட்டாது என சமீபத்தில் செய்தியாளர்களுக்குத் தெரிவித்திருந்தார்.

அரசு முகாம்களுக்குள் சுயாதீன செய்தியாளர்கள் செல்வதைத் தடை செய்துள்ளதால் அங்குள்ளவர்களையோ அல்லது முகாம்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள - சம்பவத்தை நேரில்கண்ட - ஆள்களையோ காண்பது கடினமாகவுள்ளது.

முகாமைச்சுற்றியுள்ள பகுதிகளில் விறகு பொறுக்கச் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கும் தமிழ் இணையத்தளங்கள், விறகு போன்ற அடிப்படைத் தேவைகள் கூட நிறைவு செய்யப்படாத - கிடைக்காத - காரணத்தினாலேயே இந்த மக்கள் இவ்வாறு வெளியில் விறகு தேடிச் சென்றனர் எனத் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் முகாமில் உள்ளவர்களை விடுதலை செய்யுமாறு இலங்கை அரசு மீது மேலும் அழுத்தங்கள் கொடுக்கப்படுவதற்கு வழிவகுக்கும். - என்று அது தெரிவித்துள்ளது.


## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணுலகில் மாந்தருடன் | | விண்ணுலகில் மாதேவருடன் |
|---|---|---|
| 09 | | 12 |
| 01 | | 10 |
| 1934 | | 1997 |



### அமரர் P.K.பாலசிங்கம் (படியாதவன்)
(இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், கல்வி அமைச்சின் பாடநூல் எழுத்தாளர்)

உங்கள் எதிர்காலச் சந்ததியினர் ஓர் உதாரண புருசராக உங்களை என்றும் நினைவு கூர தகைமை பெற்ற உங்களின் வாழ்க்கையே எங்களின் உதயதாரகை

P.K.B பாலசங்கர்,
'விதானை சங்கரியவளவு',
718, கே.கே.எஸ் வீதி,
சிவலிங்கப்புளியடி,யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

## மரண அறிவித்தல்

### ஏரம்பு பேராயிரம்
(ஓய்வுபெற்ற பிரதேசசபைச் செயலாளர் - புதுக்குடியிருப்பு, பிரதம லிகிதர் - யாழ். மாநகர சபை)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு பேராயிரம் 25.09.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசலட்சுமியின் அன்புத் துணைவரும் காலஞ்சென்றவர்களான ஏகாம்பிகை, இரத்தினசிங்கம் மற்றும் சரவணபவன், நடனசண்முகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராஜராஜன், குகப்பிரியா, ஸ்ரீதுவாரகபாலகிருஸ்ணா, கரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் துஸ்யந்தி, இளங்கோ ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஷாகன், அகநிலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு வண்ணார்பண்ணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 33, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். T.P.:021 3219879

தகவல்:
வே.இராஜராஜன் (மகன்)

## T.V விற்பனைக்கு

வெளிநாட்டில் பாவித்த நல்ல நிலையில் உள்ள FLAT T.Vகள் விற்பனைக்குண்டு. [25" - 18,000/=]

தொடர்பு:-
187/30, யூனியன் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்..
T.P. 077 2417949

## தவறிவிட்டது

கொட்டடி யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய கந்தையா விஜயலெட்சுமி என்பவரது தேசிய அ.அட்டை (517122190v), விசேட அ.அட்டை என்பன யாழ் நகர சந்தையில் தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் பிவ தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும் T.P:- 0776282593

## தவறிவிட்டது

மிருசுவில் வடக்கை சேர்ந்த தவராசா செந்தில்ரூபன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல:862642309V) கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் காணும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

T.P:- 0774121963

## ஆங்கிலமொழியில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் தேவை

ஆண்டு 6 மற்றும் ஆண்டு 5இற்குட்பட்ட பாடங்களை வீட்டில் வந்து கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை

தொடர்பிற்கு : 0779055828

## அலுவலகப் பாவனைக்கு வீடு வாடகைக்குத் தேவை

யாழ் மாவட்டத்தில் இயங்கிவரும் சமூக சேவை நிறுவனமொன்றிற்கு யாழ்.மாநகராட்சி உள்ளடங்கலான பகுதிகளில் வீடு தேவை.

தொடர்பிற்கு : 0712783222

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி நா. கார்த்திகா அவர்களின் அன்புத்தந்தை

### அமரர் சுப்பையா நாகராஜா

இறைபதமடைந்தமையையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்

### கந்தசாமி கிருஷ்ணரூபன்



பண்டித்தறை, நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கிருஷ்ணரூபன் 25.09.2009 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் கந்தசாமி - காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் செல்வராஜா - ஈஸ்வரி ஆகியோரின் மருமகனும் பிரதீபாவின் அன்புக் கணவரும் கிருஷாந்தி, கிஷோக், சரண் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கல்பனா (கொலண்ட்), காந்தரூபன், கவிதா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் ஈஸ்வரன் (கொலண்ட்) தயாளினி (ஆசிரியை) கிருஷ்ணகுமார் (ஜேர்மனி), பாமிலா (கனடா), மேனகா (இந்தியா), கணநாதன் (லண்டன்), வனிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.09.2009) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக வதிரி ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பண்டித்தறை, நெல்லியடி,
கரவெட்டி.
(சி/561197)
கை.செல்வராஜா
(மாமா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் தேர்தலில் ஜனாதிபதி ஏஞ்சலாவின் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி பெரும் வெற்றி

## வலதுசாரியுடன் கூட்டுச்சேர அவர் முனைப்பு



பேர்லின், செப். 29

ஜேர்மனியில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் அதிபர் ஏஞ்செலா மெர்கெல் தலைமையிலான கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் கட்சி பெரும் வெற்றி பெற்றுள்ளது.

அதேநேரத்தில் அக்கட்சியுடன் கூட்டணி அமைத்திருந்த இடதுசாரிச் கட்சி கூட்டணியான சோஷியல் ஜனநாயகக் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது.

இதையடுத்து, அந்தக் கட்சியின் ஆதரவை விட்டுவிட்டு வலதுசாரிக் கட்சியான 'ப்ரீ டெமாக்ரேட்ஸ்' கட்சியுடன் இணைந்து அடுத்த ஆட்சியை மெர்கெல் அமைக்கவுள்ளார்.

இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்ததால் பொருளாதார தாராளமயமாக்கல் விவகாரங்களில் எந்த முடிவையும் எடுக்க முடியாமல் கடந்த 4 ஆண்டுகளாக மெர்கெல் தவித்து வந்தார்.

இப்போது இந்தக் கட்சிகள் தோற்று, தாராளமய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட 'ப்ரீ டெமாக்ரேட்ஸ்' கட்சி அதிக இடங்களில் வென்றுள்ளதால் அக்கட்சியுடன் மெர்கெல் கூட்டணி அமைக்கவுள்ளார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஜேர்மனியில் இடதுசாரிக் கட்சிகளுக்கு மாபெரும் தோல்வி ஏற்பட்டுள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

மெர்கெல் அடுத்து அமைக்கும் கூட்டணி ஆட்சியில் 'ப்ரீ டெமாக்ரேட்ஸ்' கட்சியின் தலைவரான குய்டோ வெஸ்டர் வெல்லி வெளியுறவு அமைச்சராவார் எனத் தெரியவருகிறது.

தேர்தலில் மொத்தம் பதிவான வாக்குகளில் மெர்கெலின் கட்சிக்கு 33.5 சதவீதமும், 'ப்ரீ டெமாக்ரேட்ஸ்' கட்சிக்கு 15 சதவீதமும் வாக்குகள் கிடைத்துள்ளன.

இடதுசாரிக் கட்சியான சோஷியல் டெமாக்ரடிக் கட்சிக்கு 22.5 சதவீத வாக்குகளே கிடைத்துள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இல்லாத அளவுக்கு ஜேர்மனி இப்போது பொருளாதார மந்த நிலையில் சிக்கியுள்ளது. இதிலிருந்து நாட்டைக் காக்க தாராளமயமாக்கல் கொள்கை கொண்ட மெர்கெல், 'ப்ரீடெமாக்ரேட்ஸ்' கூட்டணியால் தான் முடியும் என அந்நாடு கருதுவது இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

அல்-குவைதாவின் கடும் மிரட்டல்களுக்கு இடையே ஞாயிற்றுக்கிழமை இந்தத் தேர்தல் நடந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கான பாகிஸ்தான் சிறப்புத் தூதர் ரியாஸ் கான்?

இந்தியாவுக்கான பாகிஸ்தானின் சிறப்புத் தூதராக ரியாஸ் முகம்மது கான் நியமிக்கப்படலாம். பாகிஸ்தானின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளரான இவர் பெரும் கல்வியாளராவார்.

இந்தியாவுடனான பிரச்சினைகளைப் பேசித்தீர்க்க பொருத்தமானவர் ரியாஸ் முகம்மது கான் என கருதும் பாகிஸ்தான் அரசு, அவரை சிறப்புத் தூதராக நியமிக்க முன்வந்துள்ளது. இந்நிறுவனம் தொடர்பான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா முகம்மது குரேஷி நியூயோர்க்கில், சனிக்கிழமை மாலை இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

# வடமேற்கு பாகிஸ்தானில் குண்டுத் தாக்குதல்: தலிபான் விரோத பழங்குடித் தலைவர் பலி

இஸ்லாமாபாத், செப். 29

வடமேற்குப் பாகிஸ்தானிலுள்ள பக்கஹெல் என்னுமிடத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் தலிபான்களுக்கு எதிரான பழங்குடித் தலைவர் குல் ஹக்கீம் கொல்லப்பட்டார். இவருடன் மற்றும் மூவரும் கொல்லப்பட்டனர் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

குல் ஹக்கீம், பக்கஹெல் சமாதானக் குழுவில் ஓர் உறுப்பினராவார். வடமேற்குப் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அரசுடன் இக்குழு இணைந்து செயற்பட்டு வருகின்றது. இதனால் தலிபான் தீவிரவாதிகள் இக்குழுவினருக்கு அவ்வப்போது மிரட்டல் விடுத்து வந்துள்ளனர்.

குல் ஹக்கீம் மற்றும் மூவர் சகிதம் பயணித்துக்கொண்டிருந்த கார், பக்கஹெல் என்னுமிடத்தில் வீதியோரக் குண்டுவெடிப்பில் சிக்கியது. ஹக்கீம் உட்பட நால்வரும் பலியாயினர். கார் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது என நேரில் கண்டவர்கள் விவரித்தார்கள்.

வீதியோரத்தில் இக்குண்டு வைக்கப்பட்டு, ஹக்கீமின் கார் அண்மியதும், தன்னியக்கக் கருவி மூலம் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. அவரை இலக்குவைத்தே இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என பத்திரிகையாளரொருவர் உள்ளூர் பி.பி.ஸி. உருது சேவைக்குத் தெரிவித்தார்.

பக்கஹெல்லுக்கு அடுத்த மாவட்டத்தில் கடந்த வாரம் அநேக பழங்குடி இனத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். பக்கஹெல், ஜனிஹெல் ஆகிய பகுதிகளில் வன்செயல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. தலிபான்களின் கோட்டையாகத் திகழும் வட வசீரிஸ்தான் பிராந்தியத்துக்கருகில் இப்பகுதிகள் அமைந்துள்ளன என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

# அமெ. - இந்திய அணு சக்தி ஒத்துழைப்பைப் பாதிக்காது

## ஐ.நா. தீர்மானம் குறித்து அமெரிக்கா

வாஷிங்டன், செப். 29

அணு ஆயுதக் குவிப்புத் தடுப்பு உடன்படிக்கையில் அனைத்து நாடுகளும் கையெழுத்திடவேண்டும் என நிறைவேற்றப்பட்ட ஐ.நா. பாதுகாப்புப் பேரவைத் தீர்மானத்தால் இந்திய - அமெரிக்கா இடையிலான அணுசக்தி ஒத்துழைப்பு எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது என அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

நியூயோர்க்கில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனை வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினார். இதற்குப் பின்னர் அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி அமைச்சர் ரொபர்ட் பிளேக் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

''ஐ.நாவின் பாதுகாப்புப் பேரவையில் அணு ஆயுதக் குவிப்புத் தடுப்பு உடன்படிக்கை குறித்து ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எந்தவிதத்திலும் எங்களின் இருதரப்பு அணுசக்தி ஒத்துழைப்பை பாதிக்காது. இதை நாங்கள் ஏற்கனவே விளக்கியுள்ளோம்'' என்றும் ரொபர்ட் பிளேக் கூறியுள்ளார்.

அணு ஆயுதக் குவியல் தடுப்பு உடன்படிக்கையில் அனைத்து நாடுகளும் கையெழுத்திடவேண்டும் என ஐ.நாவின் பாதுகாப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு தலைப்பட்சமானது எனக் கூறி இந்தியா எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்

# ஈரான் நீண்ட தூர ஏவுகணை சோதனை; மக்கள் குதூகலிப்பு

தெஹ்ரான், செப். 29

ஈரானால் நேற்று திங்கட்கிழமை சஹாப் 3 என்னும் நீண்ட தூர ஏவுகணையொன்று வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது. இது 2 ஆயிரம் கிலோ மீற்றர்வரை எட்டக்கூடியது என அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.



ஈரானால் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை சஹாப் - 1, 2 என்னும் நடுத்தர ஏவுகணைகளும், டொன்டார் - 69, படாஹ் - 110 என்னும் குறுந்தூர ஏவுகணைகளும் ஏவப்பட்டுள்ளன.

சஹாப் - 3 ஏவுகணை நேற்று ஏவப்பட்டதும், அது தொடர்பான விசேட செய்தி, ஈரானிய ஊடக தொலைக்காட்சியில் அவசர தலைப்புச் செய்தியாக வெளியாகியது.

''சஹாப் - 3 நீண்ட தூர ஏவுகணையை ஈரான் ஏவி வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளது'' என இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இச் செய்தி வெளியாகியதும் ஈரானியர்கள் நகர வீதிகளில் கைகளைத் தட்டி குதூகலித்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமை ஏவப்பட்ட சஹாப் - 1 ஏவுகணையும், சஹாப் - 2 ஏவுகணையும் 300 முதல் 700 கிலோ மீற்றர் வரை (186 முதல் 434 மைல்) செல்லக்கூடியவை. இவை வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுள்ளன என உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞாயிற்றுக்கிழமை இவற்றையடுத்து, ஏவப்பட்ட டொன்டர் - 9, படாஹ் - 110 ஆகிய குறுந்தூர ஏவுகணைகள் 170 கிலோ மீற்றர் (100 மைல்) வரை எட்டக்கூடியவை என்றும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

# வெள்ள அனர்த்தத்திற்காக சர்வதேசத்தின் உதவியைக் கோருகின்றது பிலிப்பைன்ஸ்

மணிலா, செப். 29

பிலிப்பைன்ஸ் தலைநகரில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தங்களையொட்டி, பிலிப்பைன்ஸ், சர்வதேச உதவியை கோரியுள்ளது.

கடும் மழையோடுகூடிய கெட்சானா சூறாவளியால் பாரிய அனர்த்தங்கள் விளைந்துள்ளன. இவற்றால் சுமார் இரண்டரை லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். வெள்ளத்துக்கு குறைந்தது 100 பேர் பலியாகியுள்ளனர்.

இன்னும் பல இடங்களில் பெருந்தொகையானோர் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றனர். இம் மக்களை காப்பாற்ற மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தலைநகரான மணிலாவில் கூரைகள் மீது அமர்ந்துள்ள மக்களை மீட்பதற்கு ஹெலிகொப்டர்கள், படகுகள் ஆகியவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசு பல மாகாணங்களில் பேரிடர் காலநிலையை அறிவித்துள்ளது.

# வட ஏமனில் உக்கிர மோதல்கள்; 44 ஷியா கிளர்ச்சியாளர்கள் பலி!

## அரசு தகவல், தீவிரவாதிகள் நிராகரிப்பு

அங்காரா, செப். 29

ஏமனின் வடக்குப் பிராந்தியத்தில் இடம்பெற்ற மோதல்களில் குறைந்தபட்சம் 44 ஷியா கிளர்ச்சியாளர்கள் தமது படையால் கொல்லப்பட்டுள்ளனர் என ஏமன் அரசு தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் மூன்று பேர் பெரிதும் தேடப்பட்டு வந்த கிளர்ச்சி தளபதிகளாவர். அரசு மொத்தமாக 55 கிளர்ச்சித் தளபதிகளைத் தேடி வருகின்றது என் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

அரசின் அறிவித்தலை ஹவதிஸ் எனக் கூறப்படும் கிளர்ச்சியாளர்கள் நிராகரித்துள்ளனர். அத்தோடு, தேடப்பட்டுவரும் கிளர்ச்சித் தளபதிகள் பட்டியலில் இருப்பவர்களை விட அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர் என அரசு கூறி வருகிறது. இது ஒரு கட்டுக்கதை என்றும் இவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

# நிதி சீரமைப்புகளைக் கொண்டுவர ஜி - 20 மாநாட்டில் உடன்பாடு

பிட்ஸ்பெர்க், செப். 29

அமெரிக்காவின் பிட்ஸ்பெர்க்கில் நடைபெற்று முடிந்த ஜி - 20 மாநாட்டில் நிதி நிறுவன ஊழியர்களுக்கான சம்பளம் தொடர்பான புதிய சட்டங்களுக்குச் சம்மதம் கிடைத்துள்ளது. புதிய சீரமைப்புகள் நிதித்துறையில் அளவுக்கதிகமாக முன்னோட்ட வணிகம் செய்வதைத் தடுக்கும் விதமாக உள்ளன.

ஜி-20 தலைவர்கள் தாங்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில், ''உடனடியாக எடுக்கப்பட்ட நடவடிக்கையால் பொருளாதாரச் சீர்குலைவு அபாயகரமான அளவுக்குச் செல்வதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

''பொறுப்பற்றதன்மைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நேரம் இது. ஆகவே, எதிர்காலத்தில் சிக்கல்கள் நேராமல் இருப்பதற்காக நிதிக் கட்டமைப்புகளின் செயற்பாடுகள் சீரமைக்கப்படும்'' என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

புதிய சட்டங்களின்படி நஷ்டங்களுக்கு முகம் கொடுக்கும் வகையிலான மூலதனங்கள் வங்கிகளிடம் இருக்கவேண்டும் என இந்தத் தலைவர்கள் விரும்புகின்றனர். இந்த மாநாட்டை நடத்திய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, நிதி நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுக்கு ஊக்கத் தொகை கொடுக்கப்படும் விதத்தையும் மாற்ற தாங்கள் திட்டமிட்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

நிதி நிறுவனங்களைச் சீரமைப்பதற்குத் தேவைப்படும நிதிக்கு எவ்வாறு நிதித்துறையினர் பங்களிக்க முடியும் என்பதை ஆராய்ந்து தெரிவிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்தை இந்த அறிக்கை மூலம் தலைவர்கள் கேட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழர், தமிழக மீனவர் பிரச்சினைகளை வலியுறுத்தி

# டில்லியில் இன்று உண்ணாவிரதப் போர்; விமானத்தில் சென்றது விஜயகாந் குழு



சென்னை, செப். 29

இலங்கையில் தமிழர்களுக்கு முழுச் சுதந்திரம் வழங்க வேண்டும், கச்சதீவை மீட்க வேண்டும், தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தே.மு.தி.க. சார்பில் இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது.

இதனால் டில்லியில் தே.மு.தி.கவினர் குவிந்தனர். அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த், அவைத் தலைவர் பன்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று சென்னையிலிருந்து விமானம் மூலம் டெல்லிக்குப் புறப்பட்டனர். அவருடன் ஏராளமான நிர்வாகிகளும் விமானத்தில் சென்றனர்.

இலங்கையில் தமிழர்களுக்கு முழு சுதந்திரம் வேண்டும் என்றும், அவர்களை மீண்டும் குடியமர்த்த வேண்டும் என்றும், கச்சதீவை மீட்க வேண்டும் என்றும், மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தே.மு.தி.க. சார்பில் இன்று டில்லியில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது.

இன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை புதுடில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் நடைபெறும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அக்கட்சித் தலைவர் விஜயகாந்த் தலைமை வகிப்பார். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்பதற்காக தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த தே.மு.தி.க. நிர்வாகிகளும், தொண்டர்களும் விமானம் மற்றும் ரயில் மூலம் புதுடில்லிக்குச் சென்ற வண்ணம் உள்ளனர்.

நேற்றுக் காலை முதல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தே.மு.தி.க. நிர்வாகிகள் டில்லியில் குவிந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் அனைவரையும் கட்சியின் மாநில இளைஞர் அணி செயலாளர் எல்.கே.சுதீஷ் ஆங்காங்கே உள்ள திருமண மண்டபங்களில் மாவட்ட வாரியாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

மேலும் புதுடில்லி தே.மு.தி.க. நிர்வாகிகளுக்குச் சொந்தமான இடங்களிலும் தொண்டர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## பன்றிக்காய்ச்சல் பலி 290

டில்லி, செப்.29

இந்தியா முழுவதும் பன்றிக்காய்ச்சலுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 290 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் புதிதாக 208 பேர் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 66 பேர் டில்லியைச் சேர்ந்தவர்கள்.

அடுத்து தமிழ்நாடு மற்றும் மராட்டியம் ஆகிய மாநிலங்களில் தலா 34 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# பத்மநாதனிடம் விசாரணை நடத்த இந்தியக் குழு இலங்கை செல்லும்

சென்னை, செப். 29

கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள குமரன் பத்மநாதனிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக, இந்திய மத்திய இரகசியப் புலனாய்வுக் குழு ஒன்று எதிர் வரும் வாரம் இலங்கை செல்லவுள்ளது - என்று 'த ரைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டே அவர்கள் இலங்கை செல்லவிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டமையை அடுத்து, அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவே இந்த விசாரணைகளை மீண்டும் முன்னெடுக்கவிருக்கிறது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் குழு மீண்டும், புதுடில்லியில் கடந்த 22 ஆம் திகதி கூட்டம் ஒன்றை நடத்தியதன் பின்னரே இலங்கை செல்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது பத்மநாதனிடம் மேற்கொள்ளப்பட வேண்டிய விசாரணை முறைமைகள் குறித்து தெளிவாக கலந்துரையாடப்பட்டதென 'த ரைம்ஸ் ஒவ் இந்தியா' தெரிவித்துள்ளது.

இராஜதந்திர அனுமதி கிடைக்கப்பெற்றதன் பின்னர், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இந்த விசாரணைக் குழு இலங்கை செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ராகுல், சோனியாவுக்கு தொடர்ந்தும் விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தலாம்!



## இந்தியப் புலனாய்வுத்துறை எச்சரிக்கை

சென்னை, செப். 29

இந்தியக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்திக்கு எஞ்சியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களால் அதிக அளவிலான அச்சுறுத்தல் இருக்கிறது - என்று இந்தியப் புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

ஒருபக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் முழுமையாக தோற்கடிக்கப்பட்டுவிட்டனர் என அறிவிக்கப்பட்டு வந்தாலும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி மற்றும் அவரது மகன் ராகுல் காந்தி ஆகியோருக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியச் சட்டமுறைகளின் கீழ் ராகுலுக்கு அவரது தாயார் சோனியா காந்தி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அடுத்த படியாக அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக அவருக்கு விசேட பயிற்றப்பட்ட பாதுகாப்புக் குழு ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அண்மையில் தமிழகத்திற்கான விஜயம் மேற்கொண்டிருந்த ராகுல் காந்தி நீண்ட தூரப் பாதைப் பயணங்கள் மேற்கொள்வதை தவிர்த்துள்ளார்.

ராகுல்காந்தி தமிழகத்திற்கு தொடர்ந்தும் விஜயம் செய்யும்போது அவருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமிழகப் பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும் இணைந்து செயற்படவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ராகுல் மற்றும் அவரது தாய் சோனியாவிற்கும், ஜெயிஸ் ஈ மொஹமட் போன்ற பாகிஸ்தானில் இயங் கும் தீவிரவாத அமைப்பின் அச்சுறுத்தலும் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்ட ஜெயிஸ் ஈ மொஹமட் அமைப்பின் உறுப்பினர்கள் மூவரிடம் தனித்தனியே மேற்கொண்ட விசாரணைகளில் ராகுல்காந்தி அவர்களின் முதன்மை இலக்காக காணப்படுகிறார் எனத் தெரிய வந்துள்ளது.



மத்தியப் பிரதேசம் போபாலில் மகா நவமியையொட்டி பக்தர் ஒருவர் நாக்கில் கற்பூரம் கொளுத்தி நேர்த்திக்கடன் செலுத்தியபோது......

# நாகை மாவட்ட மீனவர் மீது மீண்டும் இலங்கைக் கடற்படையினர் தாக்குதல்!

நாகை, செப்.29

நாகை, காரைக்கால் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர். மீனவர்களது உடைமைகளையும் பறித்து சென்றுவிட்டனர் எனக் கூறப்படுகிறது. கடந்த சனியன்று நாகை மீனவர்கள் சிலர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன் தினமும் இலங்கைக் கடற்படையினர் தாக் குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

19 படகுகளில் சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது எனக் கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர், எனினும் அனைவரும் இன்னும் கரை திரும்பாததால் தாக்குதலுக்கு உள்ளானோரின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை எனக் கூறப்படுகிறது.

# இலங்கை மீனவர் 10 பேர் கைது

சென்னை, செப். 29

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 10 பேர் இந்தியக் கடலோரக் காவல்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இவர்களது இரண்டு மீனவ படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இந்தியக் கடலோர காவற்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என மீன்பிடித் துறை அமைச்சு தெரிவித்துள்ளது,

அத்துடன், இந்திய கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 61 இலங்கை மீனவர்கள் தொடர்ந்தும் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களை விரைவில் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொணடு வருகிறோம் எனவும் மீன்பிடித்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# நாடாளுமன்றில் தாய்மொழிக் கோரிக்கை: பரிசீலித்து முடிவு; சபாநாயகர் அறிவிப்பு

டில்லி, செப். 29

நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர்கள் தாய்மொழியில் பதிலளிப்பதற்கு அனுமதி வழங்கும் கோரிக்கை பற்றி பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் - என்று சபாநாயகர் மீராகுமார் தெரிவித்தார்.

கடந்த சனியன்று டில்லியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு மத்திய அமைச்சர்கள் தங்கள் தாய்மொழியில் பதிலளிக்க அனுமதிக்கும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை குறித்து பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

சிக்கன நடவடிக்கை விவகாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் விரும்பும் விமான வகுப்பில் பயணிக்கலாம். குறிப்பிட்ட வகுப்பில்தான் செல்ல வேண்டும் என்று அவர்களை நிர்ப்பந்திக்கக்கூடாது. சிக்கன நடவடிக்கை வரவேற்கத்தக்க நடவடிக்கை என்பதால் அதுபற்றி விவாதிப்பதற்காக நாடாளுமன்ற உரிமைகள் குழுக் கூட்டத்தை விரைவில் கூட்ட இருக்கிறேன் - என்றும் சபாநாயகர் சொன்னார்.

# நடிகை நயன்தாராவுக்கு எதிராக மாதர்சங்கங்கள் போர்க்கொடி



சென்னை, செப். 29

பிரபுதேவா - நயன்தாரா காதல் விவகாரத்தில் பல மாதர் சங்கங்கள் நயன்தாராவின் செயலுக்குக் கண்டனம் தெரிவித்துக் களமிறங்கியுள்ளன.

மேலும் அவர் நடித்த படங்களைத் திரையிட விடுவதில்லை எனவும் திரையிட்டால் அந்தத் திரையரங்குகள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளன.

பிரபுதேவா - நயன்தாரா காதல் விவகாரம் குறித்து வெளியான தகவல்களால் பிரபுதேவாவின் மனைவி ரமலத், நயன்தாராவை கடுமையாக விமர்சித்திருந்தார்.

இதுகுறித்து என்னை விமர்சிக்க பிரபுதேவாவின் மனைவிக்கு உரிமையில்லை என நடிகை நயன்தாரா தெரிவித்தார்.

இந்நிலையில் ரமலத், எனக்கும் என் குழந்தைகளுக்கும் எல்லாமே என் கணவர்தான். எங்களுக்கு மட்டுமே அவர் சொந்தம். 15 வருடங்களாக சந்தோஷமாகக் குடும்பம் நடத்தி வந்தோம். ஆனால் இந்தக் காதல் விவகாரம் குறித்த செய்திகளால் நான் என மனக்குறையை வெளியிட்டேன். அதைச் சொல்ல எனக்குத் தகுதியில்லை என நயன்தாரா கூறினார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நயன்தாரா சொல்லியிருப்பதற்கு என் தமிழகத் தாய்மார்களும் சகோதரிகளும் பதில் அளிப்பார்கள். தமிழகத்தில் உள்ள மாதர் சங்கங்கள் என் கண்ணீரைத் துடைப்பார்கள் என நம்புகிறேன் எனக் கூறியிருந்தார்.

அதையடுத்து இந்த விவகாரத்தில் பல மாதர் சங்கங்கள் களமிறங்கியுள்ளன. நயன்தாராவின் செயலுக்குக் கண்டனம் தெரிவிக்கத் திட்டமிட்டுள்ள மாதர் சங்கங்கள், அவர் நடித்த படங்களைத் திரையிட விடுவதில்லை எனவும் அப்படித் திரையிட்டால் அந்தத் திரையரங்குகள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று செயலகத்தில்நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷின் பிறந்த தினமான நேற்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவருக்கு பொன்னாடை போர்த்துவதையும், விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற வீரருக்கு அரசஅதிபரின் பாரியார் பரமேஸ்வரி கணேஷ் பரிசில் வழங்குவதையும், வெற்றிக்கேடயத்துடன் அரச அதிபரும் விளையாட்டுப் பொறுப்பாளரும் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# முந்தைய அதிபரை மீண்டும் நியமிக்கும் வரை கற்பித்தல் நடவடிக்கையை தொடரப் போவதில்லை

## ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர் மகஜர் மூலம் அமைச்சர் டக்ளஸுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.29

உடுவில் மகளிர் கல்லூரியில் முன்பிருந்த அதிபரை மீண்டும் நியமிக்கும் வரை கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடரப் போவதில்லை என்று அசிரியர்களும் பாடசாலைக்குச் சமுகமளிக்கப் போவதில்லை என மாணவிகளும் மாணவிகளை பாடசாலைக்கு அனுப்பப் போவதில்லை எனப் பெற்றோர்களும் தெரிவித்து மகஜர்களைச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நேற்று சமர்ப்பித்துள்ளனர்.

உடுவில் மகளிர் கல்லூரியில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையை தான் அனைத்துத் தரப்புகளுடனும் தொடர்ந்து கலந்துரையாடி அனைத்துத் தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் ஒரு முடிவுக்குக் கொண்டு வர இருப்பதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றுக் காலை உடுவில் கல்லூரிக்கு விஜயம் செய்து மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனக்கு நெருக்கமானவர்களாக இருந்தாலும் அவர்கள் தவறு செய்தால் அதனை ஒருபோதும் தான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும், நியாய்த்தின் பக்கமே தான் எப்போதும் இருப்பேன் என்றும் சுட்டிக் காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பிரச்சினைக்கு சுமுகமானதொரு முடிவைக் காணும் வரையில் பாடசாலைக் கல்வியைத் தொடருவது அல்லது தொடராதிருப்பது குறித்து மாணவிகளும் ஆசிரியர்களும் கூடி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்கிணங்க பாடசாலை மாணவிகள், ஆசிரியர்கள், பழைய மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் தனித்தனியாக கையொப்பமிட்ட மகஜர்களை நேற்று மாலை அமைச்சரிடம் கையளித்ததுடன் முன்பிருந்த அதிபரை மீண்டும் நியமிக்கும் வரை கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடரப் போவதில்லை என ஆசிரியர்களும், பாடசாலைக்கு சமுகமளிக்கப் போவதில்லை என மாணவிகளும், மாணவிகளைப் பாடசாலைக்கு அனுப்பப் போவதில்லை எனப் பெற்றோர்களும் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் மாணவிகளின் கல்வி நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு உரிய தரப்பினர்களுடன் தொடர்ந்து கலந்துரையாடி வெகு விரைவில் அனைத்துத் தரப்பினரும் இணங்கக் கூடியதொரு தீர்வை வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சிகளை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# கோண்டாவிலில் கணவன் - மனைவியை கொலை செய்து கொள்ளையடித்த சம்பவத்தில் சந்தேகத்தில் இருவர் கைது

## நகைகள், கைத்தொலைபேசி மீட்பு

யாழ்ப்பாணம், செப். 29

கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி கோண்டாவிலில் கணவன் - மனைவி படுகொலை செய்யப்பட்டு கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் இருவரை கோப்பாய்ப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கொள்ளையிடப்பட்ட பொருள்களின் ஒருபகுதி அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருமணமாகி சிறிதுகாலமேயான இளம் தம்பதிகள் வீட்டில் வைத்துக் கொலை செய்யப்பட்டதுடன், அங்கிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் கொள்ளையிடப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப். இன்ஸ்பெக்டர் குணசேன தலைமையில் சார்ஜன்ட் பியதாஸ (24322) , கான்ஸ்டபிள்களான சரத் (36049), நவ்பர் (49026), செல்வக்குமார் (50776) ஆகியோர் கொண்ட குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் இருவரைக் கைது செய்த பொலிஸார் கொலை செய்யப்பட்டவர்களுடையது எனக் கருதப்படும் தோடு, சங்கிலி, மோதிரம், கைத்தொலைபேசி, கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட அலவாங்கு ஆகியவற்றை மீட்டனர். இருவரையும் நீதி மன்றத்தில் ஆஜர் செய்ய பொலிஸார் நேற்று ஏற்பாடு செய்திருந்தனர். (1-6)

# சம்பியன் கிண்ண போட்டியிலிருந்து தென்னாபிரிக்கா வெளியேறியது

## சொந்த மண்ணில் சோகம்

செஞ்சூரியன், செப். 29

'சம்பியன்ஸ் கிண்ண'த் தொடரின் அரையிறுதிக்கு இங்கிலாந்து அணி முன்னேறியுள்ளது. நேற்றுமுன்தினம் நடந்த பரபரப்பான 'லீக்' ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இத்தோல்வியின் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரிலிருந்து வெளியேறுகிறது. இறுதிவரை போராடிய தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஸ்மித்தின் சதம் வீணானது.

நேற்றுமுன்தினம் செஞ்சூரியனில் நடந்த 'பி' பிரிவு லீக் ஆட்டத்தில் தென்னாபிரிக்க, இங்கிலாந்து அணிகள் மோதின.

இங்கிலாந்து அணியில் உடல்நலம் பாதிக்கப்பட்ட மாட் பிரயருக்குப் பதிலாக ரவி போபரா சேர்க்கப்பட்டிருந்தார். தென்னாபிரிக்க அணியில் ஹஷிம் அம்லா நீக்கப்பட்டு, கிப்ஸ் இடம்பெற்றார்.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது

அதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஸ்டிராஸ்(25), டென்லி(21) இணைந்து சுமாரான ஆரம்பத்தைக் கொடுத்தனர். பின்னர் வந்த ஓவேஸ் ஷா, கொலிங்வூட் ஆகியோர் இணைந்து அதிரடியாக ஆடினர். சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவவிட்ட ஓவேஸ் ஷா 98 ஓட்டங்கள் (5 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள்) விளாசினார். கொலிங்வூட் 82 ஓட்டங்கள் எடுத்தார். மோர்கன் 67 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 323 ஓட்டங்களைக் குவித்தது.

324 என்ற சவாலான இலக்கைத் துரத்த ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, கிப்ஸ் (22), கலிஸ்(12) ஆகியோரை விரைவாகவே இழந்தது.

அடுத்து வந்த டி விலியர்ஸ்(36), டுமினி (24) ஆகியோரும் அதிக நேரம் நீடிக்கவில்லை. ஒருபக்கம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறுபக்கம் துணிச்சலாகப் போராடிக்கொண்டிருந்தார் அணித் தலைவர் ஸ்மித். அபாரமாக ஆடிய இவர் ஒரு நாள் அரங்கில் 9ஆவது சதம் கடந்தார். தொடர்ந்து மிரட்டிய இவர் 141 ஓட்டங்களுடன் (16 பவுண்டரிகள்) வெளியேற, இங்கிலாந்து வீரர்கள் குதூகலித்தனர்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 301 ஓட்டங்களை மட்டும் எடுத்து, 22 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆட்ட நாயகனாக ஓவேஸ் ஷா தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் ஏற்கனவே இலங்கையை வீழ்த்திய இங்கிலாந்து அணி, 2 வெற்றிகளுடன் 4 புள்ளிகள் பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. சொந்த மண்ணில் ஏமாறிய தென்னாபிரிக்க அணி பரிதாபமாக வெளியேறியது.

அடுத்த போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தினால் நியூஸிலாந்து அரையிறுதி வாய்ப்பைப் பெறும். ஒரு வேளை தோல்வியடைந்தால் ஓட்ட விகித அடிப்படையில் இலங்கை அரையிறுதி வாய்ப்பைப் பெறலாம்.



# இந்தியா - ஆஸி ஆட்டம் மழையால் தடைப்பட்டது

செஞ்சூரியன், செப்.29

சாம்பியன்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்காக தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் சுற்றுப்போட்டியில் 'ஏ' பிரிவில் நேற்று இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டம் மழைகாரணமாகத் தடைப்பட்டது.

முதலில் துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 42.3 ஓவர்களில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. (1-7)

### சம்பியன்ஸ் கிண்ண'ப் போட்டிகளில் அணிகள் பெற்ற புள்ளி விவரம்

| நாடு | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|
| 'ஏ' பிரிவு | | | | |
| அவுஸ்திரேலியா | 1 | 1 | | 2 |
| இந்தியா | 1 | | 1 | 0 |
| பாகிஸ்தான் | 2 | 2 | | 4 |
| மே.இ.தீவுகள் | 2 | | 2 | 0 |
| 'பி' பிரிவு | | | | |
| இங்கிலாந்து | 2 | 2 | | 4 |
| இலங்கை | 3 | 1 | 2 | 2 |
| தென்னாபிரிக்கா | 3 | 1 | 2 | 2 |
| நியூஸிலாந்து | 2 | 1 | 1 | 2 |

(27ஆம் திகதி வரையானவை)

### 'சம்பியன்ஸ் கிண்ணம்-2009' இன்றைய ஆட்டம்

அணிகள் - இங்கிலாந்து - நியூஸிலாந்து
மைதானம் - ஜொகன்னஸ்பார்க்
நேரம் - மாலை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்,



# புலிகளுக்குத் தண்டனை வழங்க சர்வதேச நீதிமன்ற வலையமைப்பு

## அரசாங்கத்தின் மற்றொரு முயற்சி இது

கொழும்பு, செப். 29

தமிழீழ விடுதலைப் புலிக் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் நோக்கில் சர்வதேச நீதிமன்ற வலையமைப்பொன்றை உருவாக்க அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா ஆகியோர் வெளிநாட்டு நீதிமன்றங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கில் விஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி சந்தேக நபர்களுக்கு எந்த அடிப்படையில் தண்டனை வழங்குவது என்பது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானிக்கப்படவுள்ளது.

சர்வதேச நீதிமன்றங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கில் அமைச்சர் மொறகொடவும், பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவும் ஹொலண்டிற்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்தியா உள்ளிட்ட மேலும் முக்கிய சில நாடுகளுடன் இவ்வாறான நீதிமன்றத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டமைப்பு, சட்ட மா அதிபர் திணைக்களம், அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம் போன்றவை இந்த திட்டத்தின் கீழ் மறுசீரமைக்கப்படவுள்ளன.

உலக நாடுகளின் தரத்திற்கு ஏற்ற வகையில் இலங்கையின் சட்ட மற்றும் நீதித்துறையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

# நீதியான தேர்தலை உறுதி செய்யுமாறு ஆணையரைக் கோருகிறது ஜே.வி.பி.

## நீதிமன்றிடம் முறையிடவும் அக்கட்சி முஸ்தீபு

கொழும்பு, செப். 29

தென்மாகாணசபைத் தேர்தல் நீதியான முறையில் இடம்பெறுவதை உறுதிசெய்யுமாறு கோரும் கடிதமொன்றை தேர்தல் ஆணையாளருக்கு ஜாதிக விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) எழுதியுள்ளது.

எதிர்க்கட்சிகளின் வாக்குப்பலத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளில் அரசுத் தரப்பு இறங்கியுள்ளதாகவும் ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்படி விடயங்களைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

தென்மாகாண சபைத் தேர்தலில் எதிர்கட்சிளுக்கு வாக்குகள் கிடைப்பதைத் தடுக்கும் திட்டமிட்ட முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக ஜே.வி.பிக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளில் அரசுத் தரப்பு இறங்கியுள்ளது.

எதிர்க்கட்சிகள் தேர்தல் பிரசாரத்தை எவ்வித நெருக்கடிகளுமின்றி முன்னெடுப்பதையும், தேர்தல் நீதியான முறையில் இடம்பெறுவதையும் உறுதி செய்யுமாறு கோரித் தேர்தல் ஆணையாளருக்கு நாம் கடிதமொன்றை எழுதியுள்ளோம்.

மேலும் இது தொடர்பாக அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்வது குறித்தும் நாம் சிந்தித்து வருகிறோம்.- என்றார். (அ-சி)

# பொலீஸார் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என ஆளும் தரப்பு வேட்பாளர் நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

பொலிஸார் மீது தனக்கு எவ்வித நம்பிக்கையுமில்லை என நீதிமன்றில் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தென்மாகாண சபை வேட்பாளர் நிஷாந்த முத்துகெடிகம காலி பொலிஸாரால் தாம் தாக்கப்பட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

அரசுத் தரப்புக் கூட்டமைப்பின் சார்பில் காலி மாவட்டத்தில் போட்டியிடும் - சர்ச்சைக்குரிய - இந்த வேட்பாளர், ஒரு மாத காலத்துக்குள் இரு தடவைகள் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவருக்கு எதிரான வழக்கு காலி நீதிவான் நீதிமன்றத்தில் மீண்டும் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிவான் தாமர தென்னக்கோனின் விசேட அனுமதியுடன் நிஷாந்த முத்துகெடிகம சாட்சிக் கூண்டுக்குள் இருந்தவாறு வாக்குமூலம் அளித்தார்.

காலி துறைமுகப் பொலிஸாரால் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என அச்சமயம் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நீதிமன்றங்கள் தவிர்ந்த தரப்புகள் மீது - தமக்கு எதுவித நம்பிக்கையும் இல்லை எனவும் முத்துகெடிகம அங்கு தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி நீதிமன்றப் பிணையுடன் தமது வீட்டை நோக்கிச் செல்லும்போது காலித் துறைமுகப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் அல்லாத பயங்கரவாதிகள் சிலருடன் வந்து தன் மீது தாக்குதல் நடத்தி உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தினார் எனவும் அவர் நீதிமன்றத்தில் கூறினார்.

இதன் காரணமாக நீதிமன்றத்தின் உத்தரவிற்கமையத் துறைமுகப் பொலிஸாருக்குத் தம்மால் வாக்குமூலம் வழங்க முடியாமல் போயிற்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 18 ஆம் திகதி நிஷாந்த முத்துகெடிகம மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல் தொடர்பான காட்சிகள் அடங்கிய இறுவட்டு ஒன்றையும் அவர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

முத்துகெடிகமவுக்கு விசேட பாதுகாப்பைப் பெற்றுக்கொடுக்குமாறும் அச்சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

இந்த வழக்கு நவம்பர் 06 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-சி)

# இலங்கையர்களுக்கு விசா வழங்கிய பிரிட்டிஷ் அதிகாரிக்கு 5 வருடச் சிறை!

## சட்டவிரோதமான வழியில் பெற்றுக்கொடுத்தவராம்

கொழும்பு, செப். 29

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இலங்கையர்களுக்கு சட்டத்திற்குப் புறம்பான வகையில் விசா வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பிரிட்டன் குடிவரவுத்துறை அதிகாரிக்கு அந்நாட்டு நீதிமன்றம் தண் டனை விதித்துள்ளது.

தகுதியற்ற சுமார் 50 ஆசியர்களுக்கு குறித்த பிரிட்டிஷ் அதிகாரி அரசியல் புகலிட அடிப்படையில் பிரிட்டன் விசாக்களை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணினித் தகவல்களை மாற்றியமைத்து குறித்த அதிகாரி, இலங்கையர்களுக்கு விசாக்களை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கினார் எனக் குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

இவ்வாறு விசா பெற்றுக் கொண்ட இலங்கையர்களில் பயங்கரவாத மற்றும் ஏனைய குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள் அடங்குகின்றனர்.

39 வயதான அலியா அலி என்ற பெண் அதிகாரியே, குடிவரவுச் சட்டங்களுக்கு புறம்பான வகையில் இலங்கையர்களுக்கு உதவினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

பிரிட்டிஷ் குடிவரவுச் சட்டத்திற்குப் புறம்பான வகையில் செயற்பட்ட குறித்த அதிகாரிக்கு ஐந்து ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனுக்குள் பிரவேசிக்க அனுமதி வழங்குவதன் மூலம் ஆசியர்கள் பொருளாதார நன்மை அடைவார்கள் என்ற நோக்கில் தாம் சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டார் என்றும், பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில் தமக்கு எதுவும் தெரி யாது எனவும் அலியா அலி குறிப்பிட் டுள்ளார். சட்டவிரோமான முறையில் விசா வழங்கப்பட்டவர்களில் ஆப்கானிஸ் தானியர்கள் மற்றும் இலங்கையர்கள் அடங்குகின்றனர்.

## பயிற்சி பெற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தமக்குக்காணப்பட்ட உறவுகள் தொடர்பில் அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களில் பலர் தகவல்களை மறைத்து வருகின்றனர்.

இவ்வாறான நபர்களை விடுதலை செய்ததன் மூலம் நாட்டின் இயல்பு நிலை பாதிக்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

இதன் காரணமாகவே அகதிமுகாம் மக்களை விடுதலை செய்வது குறித்து மிகவும் நிதானமான போக்கை அரசு பின்பற்றி வருகிறது. சுதந்திரமாக மக்களை இடம் நகர அனுமதிப்பதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும்.

நாட்டின் சகல மக்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசின் தலையாய கடமை.

வெறும் அகதி முகாம் மக்களின் உரிமைகளை மட்டும் கருத்திற்கொண்டு அரசினால் செயற்பட முடியாது.

விடுதலைப் புலிப் பயங்கரவாத அச்சுறுத்தலை எவரும் குறைத்து மதிப்பிடக் கூடாது. நாள்தோறும் மீட்கப்படும் ஆயுதங்களின் மூலம் இந்த விடயம் தெளிவாகப் புலனாகியுள்ளது.

வரையறுக்கப்பட்ட வகையில் அகதி முகாம் மக்கள் இடம் நகர சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அகதிகள் தொடர்பான பூரண தகவல்கள் திரட்டப்பட்டதன் பின்னரே முழு அளவில் அகதிகளை இடம் நகர அனுமதிக்க முடியும்.

நிலக்கண்ணி வெடி அகற்றப்பட்டதன் பின்னரே அகதிகளை முழுமையாக மீள் குடியேற்ற முடியும்.

எதிர்வரும் வாரங்களில் அதிக எண்ணிக்கையான அகதிகளை மீள் குடியேற்றக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

பல்லின, பல்மொழி மற்றும் பல கலாச்சார பின்னணியை நாட்டில் தோற்றுவித்து அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன் வாழக் கூடிய ஓர் சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-சி)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் ஒன்றில் குதித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறையில் தடுப்புக் காவலில் உள்ள 83 தமிழ்க் கைதிகளில் 43 பேரே நேற்று உண்ணாவிரதத்தில் குதித்தனர் என்றும், ஏனையோரும் இன்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கு பற்றுவர் என்று மேலும் கூறப்பட்டது.

## மீள் குடியேற்றத்தைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மக்கள் எவ்வளவு காலத்திற்கு முகாம்களில் வைக்கப்படுகிறார்களோ அவ்வளவிற்கு நாட்டை ஐக்கியப்படுத்தும் முயற்சிகளுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் புஹனே எச்சரித்தார்.

### பாக்கியசோதி கருத்து

இதேவேளை, இடம்பெயர்ந்த மக்களினது அடிப்படை உரிமைகளும், நடமாட்ட சுதந்திரமும் மிக முக்கியமான விடயங்கள் என அல்-ஜஸீராவிற்கு கருத்துத் தெரிவித்துள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இவ்வாறான சூழ்நிலையில் மக்களைத் தங்க வைத்திருப்பது அவர்களை மிகுந்த சீற்றத்திற்குள்ளாக்கும் எனவும் எச்சரித்துள்ளார்.

### இலங்கை பிரஜைகளாக அரசு நடத்த வேண்டும்

இலங்கையின் சமாதானம், தேசிய நல்லிணக்கம், ஐக்கியம் போன்றவற்றிற்கான அமிலப் பரீட்சையாக இடம்பெயர்ந்தவர்களை நடத்தும் விதம் அமைந்துள்ளது என்றும் அல்-ஜஸீராவுக்குத் தெரிவித்துள்ள அவர், இந்த மக்களின் இதயங்களை வெல்ல விரும்பினால், அவர்களையும் இலங்கைப் பிரஜைகளாக அரசு நடத்த வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இந்த முகாம்களுக்கு ஏன் ஊடகங்களை அனுமதிப்பதில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ள பாக்கியசோதி சரவணமுத்து, எதையாவது மறைக்க முயல்கிறீர்களா எனவும் வினா எழுப்புகின்றார்.

### மஹிந்த சமரசிங்க விளக்கம்

எனினும், இடம்பெயர்ந்த மக்கள் மோசமாக நடத்தப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்துள்ள இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க, அவ்வாறு நடத்துவதன் மூலம் அந்த மக்களை மீண்டும் தீவிரவாதத்தின் பக்கம் தள்ளுவதற்கு அரசு விரும்பவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

முகாமில் உள்ள மக்கள் முழுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வேண்டியமை அவசியம். தற்கொலைத்தாக்குதல் நபர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டால் பல லட்சம் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அவர் கருத்துத் கூறினார். (அ-சி)

பேர்ட்டோ கொப்பி 3/-
(லெமினேற்றிங் செய்து கொள்ளலாம்)
→ லேசர் பிறிண்டிங் → AutoCAD பிறிண்டிங்
அஸ்வினி மலரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு
அழையுங்கள் : 021 567 7777

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
Spoken English with Grammer
BY . BRITTO
ஆரம்பம் 30.09.2009 புதன்
நேரம் மாலை 3.30 மணி
(புதன், வெள்ளிக் கிழமைகளில் வகுப்புக்கள் நடைபெறும்)

# மரண அறிவித்தல்

## அரியகுட்டி கதிரவேலு

(சிரேஷ்ட சாலைப் பரிசோதகர், இ.போ.ச)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால் புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி கதிரவேலு நேற்று (28.09.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவகுரு - செல்லம்மா தம்பதி யினரின் மருமகனும் காலஞ்சென்ற தங்கப்பொன்னு மற்றும் இராசம்மா, வீரலட்சுமி, ஆகியோரின் பெறாமகனும் தேவராசா, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை ஆகியோரின் மருமகனும் கமலாம்பிகை, கிருஸ்ணபிள்ளை, வன்னியசிங்கம், பரமானந்தம் மற்றும் காலஞ்சென்ற ஜோகம்மா ஆகியோரின் சகோதரனும் ஜெயபாலரத்தினம், சிவயோகநாதன், அமிர்தாம்பிகை, செல்வரஞ்சினி காலஞ்சென்ற சண்முகசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரனின் (ஆசிரியர்,யாழ்.ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி- புத்தூர்) அன்புத்தந்தையும் தாரணியின் (ஆசிரியர் யா/ முத்துத்தம்பி வித்தியாலயம், திருநெல்வேலி) மாமனாரும் கீர்த்தகி, தணிகன், ஜெனனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆவரங்கால் கிழக்கு, கருதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி,*
*ஆவரங்கால், புத்தூர்.*
*021 3734092, 0718474179*

தகவல்:
க.கேதீஸ்வரன் (மகன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org